
வேல் அமுதன்



# நிழல்

# கிழிசல்

குறுங்கதைத் தொகுப்பு

வேல் அமுதன்

வளம்புலம் ஒழுங்கை, மாயெழு, குரும்பசிட்டி, தெல்லிப்பளை.

தொடர்பு முகவரி

8-3-3 மெற்றோ மாடிமனை, 55ஆம் ஒழுங்கை,

வெள்ளவத்தை, கொழும்பு - 06.

தொலைபேசி : 011 2360488

Vel Veliyiddakam
© Copyright

# KIZHISAL

A Collection of Mini Stories

| | | |
|---|---|---|
| Author | : | S. Vel Amuthan |
| First Edition | : | 30.11.2013 |
| Size | : | 1/8 |
| Pages | : | xxii+150 |
| Binding | : | Section Sewing |
| Copies | : | 500 |
| Printer | : | Unie Arts (Pvt) Ltd., 48 B, Bloemendhal Road, Colombo - 13. Tel : 011 2330195 |
| Publisher | : | Vel Veliyiddakam |
| | : | Vallampulam Lane, Mayelu, Kurumpasiddy, Tellippalai. Tel : 011 2360488 |

ISBN: 978-955-50119-1-4

Price : Rs. 400/=



# ஞாபக மலர்

இயல்பான வாழ்வில்
இணையாகி நின்றவள்
இயலாமை வந்ததால்
எனதாசி வென்றவள்
'நிலையாமை' என்பதால் இன்று -
நினைவாகி விட்டவள்
கெட்டி - இவன் - என்
குட்டி இராசேஸ்
இவளுக்காய்
இச்சிறு மலர் - எம்
இதய அஞ்சலியாய்!

## ஒரு இலக்கிய இதயத்தின் துடிப்பு

அன்புக்கும், மதிப்புக்குமுரிய
திரு. வேல் அமுதன் அவர்களுக்கு,

தங்கள் மனைவி திருமதி இராசேஸ்வரி வேல் அமுதனின் மரணச்செய்தியை 03.11.2013 ஞாயிற்றுக்கிழமைத் தினக்குரல் பத்திரிகையில் பார்த்தேன். தங்களின் துயரத்தில் நேரடியாகக் கலந்து கொள்ளமுடியாமல் போனமை குறித்து வருந்துகிறேன். எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மனைவி என்பவள், மனைவியாக மட்டுமின்றி தாயாகவும், தோழியாகவும், மந்திரியாகவும், பங்காளியாகவும் இருப்பவள், பல்வேறுபட்ட பாத்திரங்களை வகிக்கும் அந்த மனைவியின் இழப்பானது, ஒரே நேரத்தில் பல்வேறுபட்ட உணர்வு நிலைகளில் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இந்தப் பாதிப்புத் தங்களுக்கு ஏற்பட்டுள்ளது. இப்பாதிப்பு சமூக இயங்கியல் பண்புக்கூறுகளில் ஒன்று என்ற வகையில், இதையும் பொதுமை நிகழ்வாகக் கொள்ளலாம்.

நீங்கள் ஒரு எழுத்தாளன்.

எழுத்துக்களை ஆள்வதால் மட்டும் ஒருவன் 'எழுத்தாளன்' ஆகிவிடமுடியாது.

எழுத்தாளன் என்பவன், கருத்துக்களையும், உணர்வுகளையும், சமூகப்பண்பியல் மடிப்புக்களில்

கே. ஆர். டேவிட்
'பூபாளம்'
பிடாரி கோவில் வீதி,
ஆனைக்கோட்டை.
04.11.2013
021 221 3170

உள்ளுறைந்திருக்கும் முரண்பாடுகளையும் எப்படிச் சமுகமயப்படுத்தலாம் என்ற வாழ்வியல் பண்பு நுணுக்கம் உங்களுக்குப் புதியதல்ல.

திருமதி இராசேஸ்வரி வேல் அமுதன் ஒரு எழுத்தாளனின் மனைவி. அமரர் வ. அ. இராசரத்தினம் அவர்கள் தனது மனைவிக்காக 'ஒரு காவியம் நிறைவு பெறுகிறது' என்ற காவியத்தை எழுதியது போல் (1975) நீங்களும் உங்களின் மனைவிக்காக ஒரு காவியத்தை எழுதி இலக்கிய உலகில் அவருக்கொரு நித்திய வாழ்வைக் கொடுப்பது பற்றிச் சிந்தியுங்கள்.

அது உங்களால் முடியும்.

அதைச் செய்ய உங்களால் 'மட்டுந்தான்' முடியும்.

அன்புடன்
**கே. ஆர். டேவிட்**

# ஒரு பங்காளனின் பார்வையில் வேல் அமுதன்

வேல் அமுதன் ஒரு திசை காட்டும் கருவி.

அது திசை காட்டியதால் நான் மனிதனானேன். என்னை ஒரு மனிதநேயனாக இலக்கிய பற்றாளனாக ஆக்கிய அத்திசை காட்டும் கருவிக்கு நான் என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன்.

நண்பர் வேல் அமுதன் "தமிழே பேச்சு தமிழே மூச்சு" என கடந்த சுமார் அரை நூற்றாண்டு காலமாக வாழ்ந்தமையை நான் நன்கறிவேன்.

வேல் அமுதனின் செயற்பாடுகள் ஆரையும் வியக்க வைக்கும். இதற்குச் சான்றுகள் அவர் உருவாக்கி – நடத்தி வந்த இலக்கிய அமைப்புக்கள். குறிப்பாக அவர் ஏற்பாடு செய்த பெருவிழாக்கள் – நாடகங்கள் – பட்டி மன்றங்கள் இதற்குச் சான்று.

அவர் எழுதி – நெறிப்படுத்திய "அறுவடை" ஓரங்க நாடகத்தில் நான் சித்திரகுப்தனாக நடித்துள்ளேன். பேசமுடியாத – கூச்சப்பட்ட என்னை நடிக்க வைத்ததோடு பேசத் தூண்டியவர் அவரே.

1970 – 1977 வரையிருந்த அரசாங்கம் பத்திரிகைகளைச் சிறப்பாக தமிழ்ச் சஞ்சிகைகளைத்

செ. பழனிச்சாமி
34, Rosemount Drive
Scarborough, Ontario
MIK 2W9, Canada.
05.11.2013
0014167554721

தடைசெய்தது. இலங்கைத் தமிழ் எழுத்தாளரை ஊக்குவிக்க வேல் அமுதன் நண்பர்களினது உதவியுடன் தமிழ் கதைஞர் வட்டம் (தகவம் 1974) தோற்றுவித்து – சிறந்த கதைகளை மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை தெரிவு செய்து பணப்பரிசு வழங்கிக் கௌரவித்தார்.

நண்பர் வேல் அமுதன் 2003ம் ஆண்டு முதல் குறுங்கதை எழுதி வருகின்றார். அவரின் கதைகள் சமூக சீர்திருத்தத்தை வலியுறுத்துகின்றன.

நண்பர் தன்னை இலக்கியத்திற்காக அற் பணித்ததால் அவர் இழந்தவை பல. அவர் வேலை செய்த ஸ்தாபனத்தில் முன்னேற வாய்ப்புக்கள் வசதியாக இருந்தும், அவற்றை இழந்துவிட்டார்.


தமிழே பேச்சாக – மூச்சாக அன்றும் இன்றும் வாழ்ந்து வரும் ஒரு உத்தமராக அவரைக் காண்கின்றேன் என மீண்டும் சொல்லிட மகிழ்ச்சி அடைகின்றேன்.

வேல் அமுதனின் இலக்கியப் பணிகள் வெற்றி ஈட்ட காரணகர்த்தாவாக விளங்கியவர் திருமதி இராசேஸ்வரி வேல் அமுதனே!

வேல் அமுதன் பணி தொடர – மனமார வாழ்த்தும்,

இலக்கிய ஆர்வலர்
**ச. செ. பழனிச்சாமி,**
கனடா.

# என்னுரை




வேல் அமுதன்
'வேலகம்'
மாயெழு, குரும்பசிட்டி மேற்கு
தெல்லிப்பளை
30.11.2013
011 2360488


எங்களது குடும்பம் ஒரு குசேலர் குடும்பம்.

எமது குடும்பத்தில் பெற்ற பிள்ளைகள் இரண்டு (மதிமகன், மதினி), வளர்ப்புப் பிள்ளைகள் எட்டு, சங்கப்பலகை (நூலகம்) 1948, இலங்கை அறிவு இயக்கம் (அறிவகம்) 1970, தமிழ் கதைஞர் வட்டம் (தகவம்) 1974, வள்ளுவர் மாமன்றம் 1983, வேல் வெளியீட்டகம் (வேகம்) 1983, மதி கலைஞர் வட்டம் (மகவம்) 1983, இளம் கலைஞர் வட்டம் 1983, வேல் அமுதன் திருமண ஆலோசனையகம் 1995.

பெரிய குடும்பம் ஒன்றினை நிர்வகித்தல் என்பது இலேசான காரியமன்று.

பிள்ளை வளர்ப்புக் கலை கைவந்த குரும்ப சிட்டியூர் குட்டித்தம்பி (குட்டி) இராசேஸ்வரி எனக்குக் கிடைத்ததால், அலுவல் இலகுவானது.

போர்க்காலத்தில் (1983) பிறந்து – போர்க் காலத்தில் தீவிர செயற்பாட்டில் நிமிர்ந்து நின்ற 'மகவம்' ஊரெழுவில் மாத்திரம் நாற்பத்தொரு கலை, இலக்கிய சந்திப்புக்களைத் திறம்பட நடத்தியது.

அக்காலத்தில் எமது சந்திப்புக்களுக்குப் பெருந் தொகை இலக்கிய இரசிகர்கள் வருவதுண்டு. சுவைஞர்களை வரவேற்று – உபசரித்த பணியை மனமாரப் பொறுப்பு எடுத்த மகாராசி எனது மனைவி குட்டி இராசேஸ்.

நான் ஏன் குடும்பத்தைப் பென்னம் பெரிதாக்கினேன்?..

அது ஒரு குறுங்கதை.

அப்போது எனக்கு வயது பத்து; 1948ஆம் ஆண்டு என நல்ல ஞாபகம்.

செல்வச்சந்நிதி தேற்திருவிழாவுக்கு நான் போனேன். வழியில் ஒரு சர்க்கரைத் தண்ணீர் பந்தல். பந்தல் பணியாளிடம் "சர்க்கரைத் தண்ணீர்" எனக் கேட்டேன்.

அவர், "தம்பி! உள்ளேயோ, வெளியேயோ," எனக் கேட்டார். கேள்வியின் தாற்பரியம் அப்போது விளங்கவில்லை எனக்கு. எழுந்தமானத்திற்கு "வெளி", என்றேன். வந்தது சர்க்கரைத் தண்ணீர் வெற்று சோடாப் போத்தலில். என்னைத் தொடர்ந்து வந்தவர்களுக்கு வலு பக்குவமாக மூக்குப் பேணியில் மரியாதையாக வழங்கப்பட்டது.

மனிதரில் வித்தியாசம் பாராட்டுதல் என்னை உறுத்தியது. அதன் உள்ளீட்டை விளங்கிக் கொண்டதும், அச்சமூகக் கொடுமையை அழிக்க இலக்கியமாம் ஆயுதத்தைத் தூக்கினேன்.

எனது புனிதப் போராட்டத்தை அகிலப்படுத்தி, என்னால் முடிந்ததைச் செய்து வருகின்றேன்.

கடந்த பத்து வருடங்களாக எனது எழுத்துக்கள் வாசகனைப் போய் சேரவேண்டும் – அவர்கள் சிந்திப்பதைத் தூண்ட வேண்டும் என்ற ஆவலில் குறுங் கதைகளை எழுதி வருகின்றேன்.

எனது குறுங்கதைகள் இதுவரை ஓலை, ஞானம், செங்கதிர், தினக்குரல், மல்லிகை, ஜீவநதி, இணுவில் ஒலி, வீரகேசரி முதலிய ஏடுகளில் வெளிவந்தன.



வேல் அமுதன்

எனக்கு இப்போது எழுபத்தைந்து வயது. எனவே, இந்நூலில் எழுவத்தைந்து கதைகளை எழுந்தமானத்திற்குத் தெரிவு செய்து, தொகுத்து, "கிழிசல்" என்ற மகுடத்தில் வெளியிடுகின்றேன்.

இருபத்தொரு நாட்களுள் தயாரானதே கிழிசல்.

கிழிசல் தயாரிப்பு வேலையையும், செம்மை ஆக்கத்தையும் செய்தவர் எழுத்தாளர் கோத்திரன். செம்மை ஆக்கத்திற்கு உதவிய இன்னும் இருவர் குறிப்பிடப்பட வேண்டியவர். ஒருவர் விழிசிட்டியூர் பண்டிதர் க. உமாமகேஸ்சுவரம்பிள்ளை; மற்றவர் ஊரெழுக்கலைஞன் செ. சத்திதரன்.

கனகாத்திரமான அணிந்துரையை வழங்கியவர் கனடா வாழ் கவிஞர் வி. கந்தவனம். வேல் அமுதன் பற்றி ஒரு யாதார்த்தக் குறிப்பை வழங்கியவர் நண்பன் ச. செ. பழனிசாமி அவர்கள். கடிதம் அனுப்பிய இலக்கிய ஜாம்பவான் கே. ஆர். டேவிட், வெளியிடுவோர் குரும்பசிட்டியூர் வேல் வெளியீட்டகம், கணனி அச்சுப் பதிப்பு யுனி ஆட்ஸ் நிறுவனம்.

மேலே குறிப்பிடப்பட்ட அத்தனை பேருக்கும், இலக்கிய வாசக அன்பர்களுக்கும் எனது ஆத்மார்த்த நன்றியையும், வணக்கத்தையும் தெரிவிக்கும் அதேவேளை, கடந்த ஆறுபத்தைந்து ஆண்டு கால இலக்கியப் பணிகளுக்கும், எழுத்துக்களுக்கும் ஆதரவு வழங்கிவரும் அன்பர்களுக்கும் நண்பர்களுக்கும் இதழாசிரியர்களுக்கும் நன்றி நவில்கின்றேன்.

இலக்கியத்தில் என்றும்,
தங்கள்,
**வேல் அமுதன்**

# அணிந்துரை

**பி**ரபல சிறுகதை எழுத்தாளர் வேல் அமுதன் அவர்களுடைய இந்தக் குறுங்கதைத் தொகுதிக்கு அணிந்துரை எழுதக் கிடைத்த வாய்ப்புக் குறித்து மகிழ்ச்சியடைகின்றேன். மகிழ்ச்சிக்குக் காரணம் இந்த வாய்ப்பு அவரது பவளவிழா ஆண்டில் வந்திருப்பதுதான். அகவை 75ஐ 75 குறுங்கதைகள் அடங்கிய தொகுதியை வெளியிட்டுத் தனது சுவைஞருக்கு இலக்கிய விருந்து வைக்க விரும்புகின்ற இந்த வித்தியாசமான எழுத்தாளரைப் பற்றிக் கனடாவிலிருந்து நினைக்கின்ற பொழுது தாயகத்தில் இவருக்கும் எனக்கும் இருந்த உறவு சுனாமி வேகத்தில் சூழ்ந்து கொள்கின்றது.

இவர் பிறந்த குரும்பசிட்டியில் நான் திருமணஞ் செய்த பின்னரே இவர் எனக்கு அறிமுகமானார். இலக்கிய நெஞ்சங்கள் இணைவது கர்ப்பூரத்தில் தீப்பற்றுவது போன்றது. பற்றிய ஆண்டு 1964. அந்நாள் முதலாக எமது உறவு தொடர்கிறது. சந்திக்கின்ற பொழுதெல்லாம் ஒன்றில் இலக்கியம் பற்றிப் பேசுவார் அல்லது சமூகப் பிரச்சனைகள் பற்றி அலசுவார்.

குரும்பசிட்டி மேற்கில் மாயெழு என்ற குறிச்சியில் வேலுப்பிள்ளை வள்ளிப்பிள்ளை தம்பதியருக்குப் பிறந்த இவருக்குப் பெற்றோர்

கவிஞர் வி. கந்தவனம்
10, Strarfire Drive
Scarborough, Toronto,
Ontario
MIC 5G3, Canada.
09.11.2013
0014162860457

வைத்த பெயர் அமுதலிங்கம். வேல் அமுதலிங்கம், குரும்பசிட்டியூர் மாயெமு வேல் அமுதன், அமுதன், திருமாறன் எனப் பல பெயர்களில் ஆக்கங்களைப் படைத்தாலும் வேல் அமுதன் ஆகவே மேலோங்கி நிற்கும் இவர் ஒரு நல்ல கதைகாரர்.

ஒருமுறை அவர் சொன்ன கதை இது. கதை போலத்தான் சொன்னார். ஆனால் முடிவிலேதான் அது இவரது வாழ்க்கையில் நடந்த உண்மைச் சம்பவம் என்பது தெரிய வந்தது. செல்வச்சந்நிதி தேர்த் திருவிழாவுக்குப் பாதயாத்திரை செய்த பொழுது சர்க்கரைப் பந்தல் ஒன்றை இவர் அணுகினார். பந்தல் தொண்டர் தம்பி உள்ளோ வெளியோ என்று ஒரு கேள்வியை கேட்டார். கேள்வியின் உட்பொருள் விளங்காத வேல் அமுதன் வெளி என்று சொன்னதும் போத்தல் ஒன்றில் சர்க்கரை நீர் ஊற்றப்பட்டது. உள் என்று சொன்ன மற்றொருவருக்கு மூக்குப் பேணியில் கொடுக்கப்பட்டது. அன்றுதான் சாதி வேற்றுமையின் அநீதி இளைஞன் வேல் அமுதனைக் கோதி எடுத்தது. இத்தகைய சீர்கேடுகளைக் களைய வேல் அமுதன் தேர்ந்தெடுத்த வழி கலை இலக்கிய ஊழியம்.

அவர் கூறிய கதைகள் ஏராளம் எனினும் இந்தக் கதையை நான் இங்கு முன்வைப்பதற்கு ஒரு காரணம் இருக்கிறது. குரும்பசிட்டியில் இவருக்கு முன்னோடியாக இரசிகமணி கனக செந்திநாதன் சிறுகதைகள் படைத்துக் கொண்டிருந்த பொழுதிலும் குரும்பசிட்டிப் பத்திராதிபர் பொன்னையா அவர்கள் நடத்தி வந்த ஈழகேசரி இதழில் அவ்வப்போது வெளிவந்த இலங்கையர்கோன், எஸ். பொன்னுத்துரை, இ.நாகராஜன், சு.வேலுப்பிள்ளை, போன்றவரின் சிறுகதைகளை இவர் படித்திருந்த போதிலும் இவருக்குள் இருந்த இலக்கிய உணர்வு மலர உதவியவை இது போன்ற சமூக நிகழ்வுகள்தாம் என்பதை வாசகர்கள் புரிந்து கொள்ளவேண்டும். அதாவது, வேல் அமுதனை எழுத்தாளனாக்கியது

சமூகக் கொடுமைகளும் போலித்தனங்களுமே எனலாம்.

இவ்வித போலித்தனங்களைச் சுட்டிக் காட்டி மக்களைச் சிந்திக்க வைக்கும் பல கதை களையும் நாடகங்களையும் கட்டுரைகளையும் ஆக்கியவர் வேல் அமுதன். இவரது படைப்புகளாக அறுவடை – நாடகம்(1976), வைகறை சிறுகதைத் தொகுப்பு(1977), மாரீசம் – சிறுகதைத் தொகுப்பு(1978), வாழும்வழி – நாடகத் தொகுப்பு(1980), ஓர்மம் – சிறுகதைத் தொகுப்பு(2001), திருமண ஆற்றுப்படுத்துநர் அனுபவங்கள்(2007) என்பன இதுவரை வெளி வந்திருக்கின்றன.

போர் அனத்தங்களால் பல ஆக்கங்கள் அழிந்து போனாலும் மனந் தளராது தொடர்ந்து எழுதி வருகின்றார். பிறந்த பதி இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்தமை, அதனால் எழுதிய ஆக்கங்கள் பலவற்றை இழந்தமை. இடப்பெயர்வால் இடர் பட்டமை என்று வேல் அமுதன் பட்ட அவலங்கள் சொல்லி முடியா. அத்தனைக்கும் மத்தியில் அவர் சமூக நலன்கள் கருதி எழுதி வருவது என்பது ஒரு கடமையுணர்வுடைய எழுத்தாளனின் உயர்ந்த இலட்சியத்தையே காட்டுகிறது.

எழுது கோலைச் சமூகத்தின் உழவு கோலாகப் பயன்படுத்திக் காட்டியவர் தமிழுலகத்திலும் உள்ளனர்; பிற உலகத்திலும் உள்ளனர். அன்பு, அறம், மனித நேயம் பற்றிச் சொல்லாத எழுதாத எழுத்தாளர்களே இல்லை. இவற்றை உறைப்பாகச் சொல்லுகின்றவர் புரட்சி எழுத்தாளர்கள் ஆகின்றனர். உருக்கமாகச் சொல்கின்றவர்கள் மரபுவாதிகளாகின்றனர். வேல் அமுதன் ஒரு மரபு எழுத்தாளர். அவரது எழுத்துக்களில் ஆத்திரம் இல்லை. ஆதங்கம் இருக்கிறது. கண்டனம்

இல்லை கனிவு கசிகின்றது. புறக்கணிப்பு இல்லை. அணைத்து வழிப்படுத்தும் மனித நேயம் பெருகுகின்றது.

இந்த முன்னுரையுடன் வேல் அமுதனின் இத் தொகுப்பிலுள்ள கதைகளை இனி நோக்குதல் சாலும்.

இவை அனைத்துமே குறுங்கதைகள். வேல் அமுதன் குறுங்கதைகளுக்குப் பெயர் பெற்றவர். மக்களைப் போலவே கலைவடிவங்களும் காலத்திற்கேற்ற கோலங் கொள்ளும் தன்மையன. இரவிரவாக நாடகமாடிய காலம் போய் இரண்டரை மூன்று மணித்தியால நாடகம் வந்தது போலவே சிறுகதைகளும் குறுங்கதைகளாகியுள்ளன. இது இக்காலத்தின் தேவை. இந்த வடிவத்தைக் கச்சிதமாகக் கையாண்டு வெற்றி கண்டவர் வேல் அமுதன்.

இத்தொகுதியில் உள்ள 75 கதைகளில் 31 கதைகள் திருமணம் தொடர்பானவை. மிகுதி 44 லும் பல்வேறு உரிப் பொருள்கள் கொண்டவை.

தமிழர் பண்பாட்டில் திருமணம் ஒரு உயிர்ப்பதம். அது காதல் திருமணமாயின் பகாப்பதம் பேச்சுத் திருமணமாயின் பகுபதம். இந்தப் பகுப்பதங்களுக்கு ஆலோசனைகள் வழங்கி அவர்களை வழிப்படுத்தும் பணியில் அமுதன் ஒரு பேராசிரியர். இந்தப் பணியை இவர் 1995ஆம் ஆண்டு முதலாகச் செய்து வருகின்றார். செய்துவரும் அலுவலகத்திற்குத் திருமண ஆலோசனையகம் என்று பெயர். குடும்ப விவரம், தனிப்பட்ட விவரம், எதிர்பார்ப்புகள், விவரங்களுக்குச் சான்றாகவுள்ள ஆவணங்கள், புகைப்படத் தொகுப்பு, சாதகங்கள், பொருத்த முடிவுகள், என்பவற்றைத் தனித்தனியாக கோவைப்படுத்தி வைத்திருக்கின்றார். அவற்றைப்

பார்த்துச் சம்பந்த பகுதியார் தாமாகவே மாப்பிள்ளை பெண்பிள்ளைகளைத் தெரிவு செய்யும் வகையில் காலத்திற்கேற்ப ஒரு நவீன வசதியை மக்களுக்கு வழங்கி வருகின்றார்.

திருமணத்தை மையமாக கொண்ட பல கதைகளையும் அவ்வப்போது எழுதி வருகின்றார். அவற்றுள் புதிய 31 கதைகள் இத் தொகுதியில் சேர்க்கப்பட்டுள்ளன. இவை பெரிதும் திருமண ஆலோசனையகத்திற்கு வந்து போனவர்களது விருப்பங்கள், எதிர்பார்ப்புகள், தடுமாற்றங்கள், ஏமாற்றங்கள், அவர்களுக்குத் தான் கூறிய அறிவுரைகள் பற்றியன. அதாவது தனது சொந்த அனுபவங்களின் அடிப்படையில் கதைகளைப் புனைந்திருக்கின்றார் வேல் அமுதன்.

இவற்றுள் 'நிதானம்' என்ற கதை ஒரு வித்தியாசமான புனைவு. புனைவு என்றும் சொல்லி விட முடியாது. ஏனெனில் வேல் அமுதன் கதையை தன்னுடன் சம்பந்தப்படுத்தி ஓர் உண்மைச் சம்பவமாகவே எமக்குச் சொல்லுகின்றார். அவரது அனுபவம் மிகவும் கசப்பானது; திகைப்பானது.

'பரிமாற்றம்' என்பது மற்றொரு திருமணக் கதை. புலம் பெயர்ந்து வெளிநாடுகளிற் சிதறுண்டு வாழும் தமிழர் தமையனுக்கே தங்கையைக் கலியாணம் பேசும் அவல நிலையை அம்பலப்படுத்துகின்றது.

'தறுதலை' என்ற கதையில் திருமணச் சந்தையில் சின்ன வீடு வைக்க விரும்பும் தறுதலைகளின் முகமூடியைக் கிழிக்கின்றார் எழுத்தாளர்.

இவ்விதம் இக்கதைகளில் கலியாணச் சந்தையில் கையாளப்படும் பலவிதமான உத்திமுறைகளைப் பதிவு செய்கிறார் வேல் அமுதன். அவற்றுள் ஆதிக்கஞ் செலுத்தும் சுயநலன்களையும் மோசடிகளையும் சுட்டிக்காட்டிச் சமூகத்தில் விழிப்புணர்வை ஊட்டுகிறார்.

மற்றுமுள்ள 44 கதைகளும் தமிழர் மத்தியில் காணப்படும் பலவிதமான ஏற்றத் தாழ்வுகள் போலித்தனங்கள் போன்றவற்றை சுட்டிக் காட்டுவன. பம்மாத்து, இறுமாப்பு, சீரழிவு, சங்காரம், நடப்பு, கிழிசல், அற்பாசை, செருக்கு, தாய்ப்பாசம், நன்றிமறவாமை, உறுத்தல், அட்டகாசம், என்பனவும் பிறவுமான தலைப்புகளே கதைகளின் உரிப் பொருள்களை இனங்காட்டும்.

இக்கதைகளைப் படித்துப் பார்க்கும்படி எனது கவிதை வகுப்பு மாணவர் சிலரிடம் கொடுத்தேன். மாணவர் பெரிய படிப்பாளிகள். இலக்கியவாதிகள். அவர்கள் தெரிவித்த சில கருத்துக்கள் பின்வருமாறு.

"எல்லாக் கதைகளுமே எல்லோருக்கும் புரியும் படியான தமிழில் படைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கதையும் எமது நாட்டு நடப்புகளை வெளிநாட்டுத் தமிழரும் நன்கு அறிந்து கொள்ளும் வகையிலும் காட்சியாக்கப்பட்டுள்ளது. சில கதைகள் வெறும் சம்பவங்களாகவே உள்ளன. கதை அம்சத்தை அதில் காணமுடியவில்லை. ஆசிரியரின் முயற்சிக்கு எமது பாராட்டு."

கவிமகள் திருமதி. பவானி தர்மகுலசிங்கம்.

"தொல்லைகள் நிறைந்த தேசமதில் நிலைத்து நின்று அல்லும் பகலும் அழகு கதைபல புனைந்திடும் வேல் அமுதனின் சேவை தமிழ் நெஞ்சங்களால் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். சிறுகதை எழுத்தாளனுக்கே உரிய பாணியில் மிகுந்த எளிய சொற்பதங்களை தேர்ந்தெடுத்து வளர்ந்தவரன்றி சிறியவரும் புரிந்து கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்ட கதைகள் அத்தனையும் அற்புதம். தாயகத்திலே எத்தனையோ துன்பங்கள் எம்மவர் அடைந்த போதிலும் சிலரின் குறுகிய மனப்பான்மைகள் இன்னமும் மாறவில்லையே என்கின்ற ஆதங்கத்தை இவரின் கதைகளிற்

காணமுடிகிறது. மக்களின் சிந்தனையைத் தூண்டிவிடும் துணிச்சற் படைப்புகள்."

அருட்கவி த.ஞானகணேசன்

"வேல் அமுதனின் குறுங்கதைகளை ஊன்றிப் படித்த பின் அவர் சமுதாயத்தையும் இயற்கையையும் கலந்து தன் கற்பனையால் மெருகூட்ட வல்லவர் என்ற உணர்வு ஏற்படுகின்றது. கதைகளுக்கு அவர் தெரிந்தெடுத்திருக்கும் ஊர்கள், சம்பவங்கள், அவற்றுக்கான காலங்கள், பாத்திரங்கள் என்பன ஒன்றுக்கொன்று இசைவாக அமைந்து உண்மையிலேயே நடந்த சம்பவங்கள் போன்ற உணர்வை உண்டு பண்ணுகின்றன. குறுங்கதை இலக்கியத்தில் வேல் அமுதன் இடம் பிடித்துக் கொண்டார் என்பது உறுதியாகின்றது."

பெரும்புலவர் எம். ஹன்ஸீர்

இனி இவரது குறுங் கதைகளின் பொது இயல்புகள் பற்றி பார்ப்பதற்கு முன் ஒரு கருத்தைச் சொல்ல வேண்டும்.

ஒரு நெடுங்கதை (நாவல்) உலகத்தை போன்றதெனின் சிறுகதை ஒரு நாட்டைப் போன்றது. குறுங் கதை ஒரு ஊரைப் போன்றது. உலகத்தைச் சுற்றிப் பார்க்க மாதங்கள் செல்லும். நாட்டைப் பார்க்க நாட்கள் செல்லும். ஊரைப் பார்க்க ஒரு சில மணித்தியாலங்கள் போதுமானவை.

பொருள்களைப் பொறுத்தளவில் நெடுங்கதை ஒரு பெரிய அங்காடி போன்றது. சிறுகதை அந்த அங்காடியில் உள்ள ஒரு பகுதிக் கடைத் தெருவை ஒத்தது. குறுங்கதை அங்காடியிற் காணப்படும் ஒரு கடையைப் போன்றது.

இவ்விதம் இடம் காலம் பொருள் என்னும் முப்பரிமாணத்திலும் குறுக்கம் பெற்றிருப்பதே

குறுங்கதை. குறுங்கதைக்குக் குமுதம் இதழ் வைத்திருக்கும் பெயர் ஒரு பக்கக் கதை, நிமிடக் கதைகள் என்றும் இவை யழைக்கப்பெறும்.

வேல் அமுதனின் குறுங்கதைகளில் பின்வரும் பொது இயல்புகளைக் காணமுடிகிறது.

1. வேல் அமுதனின் குறுங்கதைகள் சில நிமிடக் கதைகளாக இருந்த போதும் பல இரண்டு இரண்டரை நிமிடங்கள் எடுக்கும் கதைகளாகவும் அமைகின்றன.
2. கதைகள் எல்லாவற்றிலுமே எடுப்பு, தொடுப்பு, முடிப்பு என்று ஒரு முறையை அவர் பின்பற்றுகிறார்.
3. இவற்றுள் முடிப்பு முக்கியமானதாகவுள்ளது. அதற்குள் கதையின் உயிரையே வைத்து முடிந்து விடுகிறார். – பல சமயங்களில்.
4. கதைகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு படிப்பினை புகட்டுகின்றது.
5. எளிமையான தமிழ்நடை.
6. பேச்சு வழக்குத் தமிழும் தேவைக்கேற்றப் பயன்படுத்தப்பட்டுள்ளது.
7. தேவையற்ற விளக்கங்கள், வருணனைகள், விவரங்கள் இல்லை.
8. அதனால் கதைகள் இறுக்கமாக மிக இறுக்கமாகவுள்ளன.

இறுக்கமாகவே நானும் இந்த அணிந்துரையை நிறைவு செய்கின்றேன். அணிந்துரையை ஆய்வு ரையாக்குவது நல்லதல்ல. சுருங்கச் சொல்லி விளங்க வைத்தலையே நன்னூலாரும் வலியுறுத்துகின்றார்.

வேல் அமுதன் அவர்கள் பவள விழாவுடன் தொடர்ந்து முத்து விழா சதக விழா எல்லாம் கண்டு சிறப்புடன் வாழ எல்லாம் வல்ல குரும்பசிட்டி சித்தி விநாயகரையும் முத்துமாரி அம்பாளையும் வணங்கி வாழ்த்துகிறேன்.

கவிஞர் **வி. கந்தவனம்**
கனடா

# உள்ளே............


01 → கிழிசல் / **01**

02 → 'வலி' வடக்கு! / **02**

03 → சபலம் / **04**

04 → மாயமான் / **06**

05 → இறுமாப்பு / **08**

06 → பழக்க தோஷம் / **10**

07 → சீரழிவு / **12**

08 → நடப்பு / **14**

09 → சங்காரம் / **16**

10 → பம்மாத்து / **18**

11 → விளம்பரம் / **20**

12 → விசுவாசம் / **22**

13 → சகுனம் / **24**

14 → பாச பூமி / **26**

15 → எமன் / **28**

16 → சங்கை / **30**

17 → தட்சணை / **32**

18 → கண்றாவி / **34**

19 → வழித் தேங்காய் / **36**

20 → அற்பாசை / **38**

21 → துணிவு / **40**

22 → அந்தரங்கம் / **42**

23 → நுணுக்கம் / **44**

24 → குழுமாடு / **46**

25 → செருக்கு / **48**

26 → இரட்டை நாக்கு / **50**
27 → இங்கிதம் / **52**
28 → ஈர்ப்பு / **54**
29 → மிருகம் / **56**
30 → லாவகம் / **58**
31 → சிதைவு / **60**
32 → மறுபக்கம் / **62**
33 → அங்கிடுதத்தி / **64**
34 → நாணயம் / **66**
35 → வஞ்சம் / **68**
36 → தம்பட்டம் / **70**
37 → தலைகீழ் / **72**
38 → பிரதிபலன் / **74**
39 → பவிசு / **76**
40 → அனாதரவு / **78**
41 → வளைதடி / **80**
42 → தறுதலை / **82**
43 → மோசடி / **84**
44 → பிராணி / **86**
45 → தாய்ப் பாசம் / **88**
46 → இப்படியும் நடக்கிறது / **90**
47 → ஆளுமை / **92**
48 → நன்றி மறவாமை / **94**
49 → நிர்மூலம் / **96**
50 → ஊமையடி / **98**

51 → மரண அடி / 100

52 → திருப்பம் / 102

53 → மிதிகல் / 104

54 → பல்லவி / 107

55 → கஞ்சன் / 108

56 → கைமாறு / 110

57 → மேல்பூச்சு / 112

58 → பாவச் சொத்து / 114

59 → அத்து மீறல் / 116

60 → பேரழிவு / 118

61 → தீர்வு / 120

62 → புல்லுருவி / 122

63 → கானல் / 124

64 → பச்சோந்தி / 126

65 → உறுத்தல் / 128

66 → அட்டகாசம் / 130

67 → கட்டுப் பெட்டி / 132

68 → அலுப்பு / 134

69 → இழப்பு / 136

70 → பரிமாற்றம் / 138

71 → புண்ணியம் / 140

72 → ஈனம் / 142

73 → நிதானம் / 144


74 → சில்லறைத்தனம் / 146

75 → கொள்ளை / 148


குறுங்கதைகளில் வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே.
இவை எவரையும் எவ்வகையிலும் குறிப்பிடுவன அன்று.

01

# கிழிசல்



வவுனியா நீதிமன்றத்தில் விசாரணைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

களவுக் குற்றம் சுமத்தப்பட்ட வன்னியைச் சேர்ந்த "சண்முகத்தின்" வழக்கு Interpreter விசாரணைக்கு எடுக்கப்படுகிறது.
முதலியார் தொண்டை கிழிய "சண்முகம்", "சண்முகம்", "சண்முகம்" என உரக்கச் சத்தமிடுகின்றார்.

சாரத்தை மடித்துக் கட்டிய - மண்ணிற அரைக் கைசேட் அணிந்த - கறுத்த - பருத்த - முகம்சேவ் எடுக்காத - கவலை தோய்ந்த - உருவமொன்று மிகப் பக்குவமாகவும் பணிவாகவும் குற்றவாளிக் கூட்டுக்குள் பிரவேசிக்கிறது.

குற்றம் சுமத்தப்பட்ட சண்முகத்தை நிமிர்ந்து பார்த்த நீதிபதிக்கு அடக்கமுடியாத சினம் சீறிப் பாய்கிறது. "ஆர் இவர்?..." சாரத்தை அவிட்டு விடச் சொல்லுங்கோ" ஆணையிடுகின்றார்.

சண்முகம் மிகுந்த பயபக்தியோடு, மறுபேச்சு இல்லாமல், சாரத்தை இறக்கி விடுகின்றார்.

என்ன அவமானம்! சாரப் பீற்றல் அந்தரங்கங்களை அப்படியே, முழுமையாக அம்பலப்படுத்தியது

நீதிபதி உட்பட அனைவரின் தலைகளும் வெட்கத்தால் சாய்கின்றன!

(ஞானம் - மார்ச் 2010)

# 'வலி' வடக்கு!



வலி வடக்கில் குடி அமரலாம் என அறிவித்ததும், தமது வீட்டை பார்க்க ஓடோடி வந்தவர்களுள் அவரும் ஒருவர்.

வீட்டை பார்க்க வந்தவர் வளவு, சுற்றுமதில், தகர்ந்திருந்ததாலும் மரங்களும் பற்றைகளும் அடர்ந்து அடர் காடாகக் காட்சி அளித்ததாலும் வீடு இருந்த இடத்தை கண்டு பிடிக்க மிகுந்த கஷ்டப்பட்டார்.

பார்க்கும் இடமெங்கும் இப்பிலிப்பீ, ஆல், வேம்பு, முதலிய பெரு மரங்களாலும்: மஞ்சவண்ணை, இலந்தை, பூநாறி முதலிய குறு மரங்களாலும்: கள்ளி முதலிய செடிகளாலும்: முள்ளுப் பற்றைகளாலும் நிறைந்து பரிதாபமாகக் காட்சியளித்தது.


எப்படி இருந்த சௌந்தரியமான பூமி இப்படியாகி விட்டதே என வருந்தினார். இலங்கையில் இன்னொரு சிங்கப்பூர் என கிலாகித்துப் பேசப்பட்ட நாட்களை எண்ணிப் பாாத்தார். அவருக்கு அழுகை தான் வந்தது: அழுதார்.

கடைசியாக ஒருவாறு முன்பு தாம் குதூகலமாக குடியிருந்த இடத்தை கண்டு கொண்டார். அங்கே அவரது வீட்டின்

சுற்று மதில் இல்லை. வீடும் இல்லை... தகர்ந்த வீட்டுச் சுவர்கள் மட்டும் வெடிப்புகளுடன் சரிந்து நின்றன.

தாம் ஆயிரத்து தொழாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டு இடம் பெயர்ந்த போது எப்படியும் ஒரு நாள் மீள வரும் வேளை எடுக்கலாமென ஆரும் சந்தேகிக்காத - மிகப் பாதுகாப்பான இடத்திற் பக்குவமாய் புதைத்து வைத்த இருபத்தைந்து பவுண் தங்க நகை நட்டு கிடைக்கும் என்ற நம்பிக்கையோடு நிலத்தை தோண்டினார். அங்கே அவரின் புதையல் மட்டுமல்ல நகை நட்டை பாதுகாப்பாக வைத்த பெரிய இரும்புப் பெட்டியும் அபேஸ்!.


(ஞானம் – நவம்பர் 2011)



03

## சபலம்

மாலை ஆறு மணி. அறுமுகத்திற்கு வித்தியாசமான போன் கோல் ஒன்று வந்தது. மறுபக்கத் தொடர்பாளர் திருமண சேவைதானா எனபதையும் அந்நேரம் அங்கே வேறு ஆட்கள் இல்லை தானா என்பதையும் கேட்டு நிச்சயப்படுத்திக் கொண்டு தனக்கு ஒரு தேவை அதைத் தாங்கள் செய்து தந்தால் அதற்குப் பார்த்துப் பார்க்காமல் தாராளமாகத் தரலாம் எனவும் நம்பிக்கை தெரிவித்தார்.



தொடர்பாளர் தான் கொழும்பில் தங்கியிருப்பதாகவும் தனக்கு நல்ல உழைப்பு கொழும்பில் வீடு இருப்பதாகவும் தனது வயது ஐம்பத்தேழு எனவும் மேலும் தெரிவித்தார்.

"அது சரி ஐயா. இதுவரை தங்கள் தேவை என்னவெனத் தெரிவிக்க வில்லையே! என்ன செய்ய வேணும்? முடிந்தால் செய்து தாரன்" என்றார் ஆறுமுகம்.

"எனக்கு ஒரு வடிவான குட்டி ஒண்டு வேணும்."

"நீங்க இன்னும் கலியாணம் செய்ய வில்லையா?"

"அண்ணை நான் கலியாணம் செய்தவன் தான்! அவள் கிராமத்திலை. நான் தொழில்

நிமிர்த்தம் கொழும்பிலை. எனக்குத் தேவதை போலை ஒரு குட்டி வேணும்.


ஆறுமுகத்தை உங்களுக்குத் தெரியும் அவர் பெரிய தமாஸ் பேர்வழி. கல்மிஷம் அவரிடம் மருந்துக்கும் இல்லை.

அதேவேளை அவரின் பேச்சு கேட்போருக்குப் பிணி போக்கும் அரு மருந்து.


அவர் சொன்னார் "அதில் சிரமம் ஒண்டுமே இல்லை. ஆனால் உங்களைப் போலை உங்கட மனுஷிக்காரியும் தனக்குப் பொழுது போக்குக்கு வாட்ட சாட்டமான வடிவான இளசு ஒண்டு வேணும் எண்டு என்னைக் கேட்டால்..?

போன் கோல் சட்டென கட். மயான அமைதி.

(ஞாயிறு தினக்குரல் 20.05.2012)



# மாயமான்



வீடியோக் கலைஞன் கைலாசுக்கு 'கைராசிக்காரன்' என்ற ஒரு பட்டப் பெயரும் உண்டு. அவன் கைதேர்ந்த கலைஞன் என்ற காரணத்தால் ஊரார் அவனை அப்படி அழைப்பதுண்டு.

மயூரா கலியாண மண்டபத்தில் அவன் அன்று ஒரு கலியாண நிகழ்வை வீடியோப் படமாக்கிக் கொண்டிருந்தான். மணமகன் குடியுரிமை பெற்ற லண்டன வாசி. அழகன், மணமகள் செல்வந்தர் செல்லப்பாவின் மூத்தமகள். அழகி, மணவறையில் தம்பதி சிற்பி வார்த்தெடுத்த தங்க விக்கிரகங்கள் போல ஜொலித்ததை இரசித்த சிலர் செல்லப்பாவிடம் "மாப்பிள்ளையும் பொம்பிளையும் மன்மதனும் ரதியும் போல. நல்ல ஜோடிப் பொருத்தம் அண்ணை"எனப் பாராட்டிப் பேசினர். அப்பாராட்டால் எடுபட்ட செல்லப்பா, கைலாசை அணுகி, "தம்பி, செலவை பற்றி யோசிக்காதையுங்கோ. உங்களாலை முடிந்தளவு வடிவாக படத்தை எடுங்கோ" என ஊக்குவித்தார்.

கைலாசுக்கு செல்லப்பா பச்சை கொடி காட்டியதன் மேல் வேறென்ன வேண்டும்?

தனது முழுத் திறமையையும் மூலதனமாக்கி கலியாணத்தை அழகிய படமாக்கிய கைலாஸ்,

அடுத்த மூன்று முழு இரவு பகல் உழைத்துப் பொருத்தமான இடங்களில் அருங்கலைத்துவமான காட்சிகளை கலந்து முதற்தரமான கலைப்படைப்பாக உருமாற்றினான்.

வீடியோப் படம் வலு ஜோர்.

அதனைச் செல்லப்பாவிடம் கையளித்து தொழிற் கூலியைப் பெற DVD பிரதிகளுடன் கைலாஸ் செல்லப்பாவின் ஆடம்பர எப்பாட்மெண்டுக்குத் தனது மோட்டார் சைக்கிளில் பறந்தான்.

செல்லப்பா வீடு இயல்பாக இருக்க வில்லை.! பொலிவு இழந்து இழவு வீடு மாதிரி காணப்பட்டது.


விவரமறியாத கைலாஸ் "ஐயா, DVD நினைத்ததை விட நல்லா வந்திருக்கு" என்றான்.

"தம்பி எல்லாம் போச்சடா" - செல்லப்பாவின் மனக்குமுறல் அது.

"அப்படி என்ன நடந்தது ஐயா"

"அவன் ஒரு ஆண்மையற்றவன் தம்பி! நாங்க உடன் விவாகரத்திற்கும் நடவடிக்கை எடுத்திட்டம்"

**(செங்கதிர் – மார்ச் 2012)**



05

# இறுமாப்பு



வலிவடக்கிலிருந்து ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்தைந்தாம் ஆண்டு இடம் பெயர்ந்த இரத்தினம் இன்னமும் ஊருக்குத் திரும்பிய பாடாய்த் தெரியவில்லை! மீளக் குடியமரலாம் என அறிவிக்கப்பட்டிருந்த போதும், இரத்தினத்தின் ஊர் இன்னம் அதி பாதுகாப்பு வலயமே!

இரத்தினத்திற்கு இருபக்க வதை. பிறந்த ஊரில் இராணுவம். குடியமர்ந்த ஊரில் வந்தான் வரத்தான் என்ற வரவேற்பு. அண்மையில் இரத்தினம் குடியமர்ந்த பிரபலம் ஒன்றின் வீட்டில் ஒரு செத்த வீடு. இரத்தினம் இரண்டு நாள் கழித்துத் தான் அதற்குப் போக முடிந்தது. இழவு வீட்டிற்கு போன போது, "ஐயா!வசதியில்லாமல் போய் விட்டது. உடனே வரவில்லை எண்டு கோபிக்காதையுங்கோ" என வேண்டிக் கொண்டார். உண்மை என்ன வென்றால். இரத்தினத்தின் மனைவிக்கு இழுப்பு நோய். கடந்த மூன்று நாளாகக் கடுமை. அனாதரவாளரான இரத்தினம் தன்னம் தனிமையாக மனைவியை வைத்தியசாலைக்கு கொண்டு சென்று - மூச்சுத் திணறலை தணிப்பித்து - திரும்ப தனது வீட்டிற்கு கொண்டு வந்து - அனைத்தையும் கவணித்து - ஆவன செய்தார்.

போன கையோடு மன்னிப்புக் கேட்ட இரத்தினத்திடம் "உமது மாமன்

செல்வரத்தினம் செத்த போது, இழவு சொல்லப்படாத போதும், நானாக உங்க வீட்டை வந்தது தெரியும் தானே. பிரபலம் கேட்டது.

“ஓம் ஐயா! நீங்க எங்க வீட்டு செத்த வீட்டிற்கு வந்து - ஈமச்சடங்கை முன்னின்று நடத்தி, உருக்கமாகத் திருவாசகமும் பாடி உதவியது நல்ல ஞாபகம் இருக்கு!”

“நான் பாடியது கூலிக்கா? அதை எப்படியப்பா மறந்தாய்? உன்னைப் போலை நன்றி கெட்ட மனிஷரோடை சகவாசம் எமக்குத் தேவையில்லை! நீ போகலாம்”

“பிரச்சனை என்னவெண்டால், என்ர மனுஷிக்கு மோசமான ஆஸ்மா. ஆசுபத்திரிக்கு கொண்டு போக வேண்டி வந்திட்டுது. இன்னமும் மனுஷிக்கு நல்ல சுகமில்லை.”


“உதெல்லாம் தேவையில்லாத கதையப்பா! நீ போகலாம்”

“ஐ..யா!” இரத்தினத்தின் கண்களில் இருந்து நீர் வழிந்தோடியது.


“போவெண்டால் போறது தானே? ஏன் நிற்கிறாய்? இன்னம் நிற்காதை! இங்கிருந்து உடனே போய் விடு!”

அவமானத்தையும் அவமதிப்பையும் தாங்கும் தைரியமற்ற இரத்தினம் நடைப்பிணமாக நகர்ந்தார்.

(மல்லிகை – மார்ச் 2012)



# பழக்க தோஷம்



கலியாணம் நடந்தேறி மூன்று மாதம் பறந்தோடி விட்டன.

ஒரு சில நாட்களில் சீடி (CD) தருவதாக வீடியோக் கலைஞன் வாக்களித்த போதும், இன்று நாளை என இழுபறியாகியது. கனடாச் சம்பந்தி போன் கோல் மேல் கோல் அடித்து சீடிப் பிரதியை கேட்டபடி. இரண்டு மூன்று தடவைகள் கனடா மாப்பிள்ளையும் தனது பிரபல வர்த்தகர் வைரமுத்து மாமாவிடம் "மாமா சீடியைப் பார்க்க தாத்தா பாட்டி கேட்கினம் பிறென்சும் கேட்டபடி. சுறுக்காச் சீடியை அனுப்புங்கோ" எனக் கேட்டிருந்தார்.

வைரமுத்தருக்குப் பெரிய தலைக்குனிவு! வைரமுத்து வீடியோக் கலைஞரிடம் போய் வரவிலலை அன்று. போனார்: கேட்டார்: ஆனால், போனபோதெல்லாம் "அவர் வீட்டில் இல்லை. நீங்க வந்ததாக சொல்லுறம்" என்ற பதில் மாத்திரமே கலைஞர் பக்கத்தில் இருந்து கிடைத்தது.

ஒரு பக்கம் கனடா மாப்பிள்ளை! மறுபக்கம் வீடியோக் கலைஞன்.! வைரமுத்தருக்கு இரு பக்கமும் இடி. வைரமுத்து தனது நடத்தையிற் தவறு ஏதாவது நடந்திருக்குமா? எனப் பின்னோக்கிப் பார்வையிட்டார். முற்பணமாக


ஐம்பதாயிரம் கேட்டதற்கு தான் இருபத்தைந்தாயிரம் மாத்திரம் அரைகுரைமனத்தோடு கொடுத்தது நினைவுக்கு வந்தது.

இன்னோரு பிழையையும் விட்டதாக உணர்ந்தார். கலியாண சாப்பாடு நடந்த போது வீடியோக் கலைஞரையும் வரவழைத்து சாப்பாடு வழங்கப்பட்டதை அவதானித்த வைரமுத்து "ஆர் வீடியோக் காரருக்கு சாப்பாடு குடுக்கச் சொன்னது? ஐஞ்சு பேர். ஐயாயிரம் ரூபா, அநியாயம்! என இரையச், சாப்பிட்டதும் சாப்பிடாததுமாக தலைகுனிந்தபடி வீடியோக்காரர் வெளியேறியதும் ஞாபகத்திற்கு வந்தது.

நான்காம் மாதம் ஒரு போன் கோல் வர்த்தகருக்கு வந்தது. "இண்டைக்கு டீவிடி கசட்டையும் புகைப்பட அல்பங்களையும் கொண்டு வருவம். மீதிப் பணம் ஒரு லட்சத்து இருபத்து ஐயாயிரம் ரெடியாக வைச்சிருங்கோ" எனச் சொல்லப்பட்டது. வைரமுத்துவுக்கு பணப் பிரச்சனை இல்லையே! பணத்தை செலுத்தி கசட்டையும் அல்பங்களையும் பெற்றுக் கொண்டார்.

ஆனால் புகைப் படங்கள் தரம் படான்! டீவீடி கசெற் வலு வலு படான்.

**(மல்லிகை – ஏப்ரல் 2012)**



07

# சீரழிவு

"ஏன் பிள்ளை இண்டைக்கு லேற்?" - புனிதவதி தன் மகள் மாலினியிடம் விசாரித்தாள்.

"எக்ஸ்ரா வகுப்பம்மா. சிலபஸ் இன்னம் முடிக்கவில்லை."

"ஏனம்மா முந்தியென்டா நேரத்திற்கு வந்திருவாய். இப்ப இப்ப அடிக்கடி வீட்டிற்குச் சுணங்கி வாராய்?"

"அம்..மா! பேப்பர் கிளாஸ். சோதனை நெருங்குதல்லே?"

"ஆரடி அவன்? ஆரோடை திறீவீலரிலை வந்தனி?"

"அவன் பிரண்டம்மா. நல்ல பெடியன். நான் பாவமென்டு உதவி செய்தவன்."



அப்படி விசாரிப்பும் மன்னிப்புமாக சில வாரங்கள் ஓடி மறைந்து விட்டன.

ஆனால்,

கடந்த சில நாட்களாக மாலினிக்கு குமட்டல் - ஓங்காளம் - வாந்தி....

மாலினி, வாகீசன் - புனிதவதி தம்பதிகளுக்கு ஒரே ஒரு பிள்ளை. செல்லமாக வளர்க்கப்பட்டவள்.

செல்வச் சீமானான வாகீசன் மாலினியை உடனடியாக வைத்திய சிகிச்சைக்கு உட்படுத்தினார்.


உண்மை தெரிந்தது. மாலினி கருவுற்று இருந்தாள்! வாகீசன் கெட்டித்தனமாக - இரகசியமாக கருச்சிதைவு செய்து விட்டார்.

வீட்டை வந்த மாலினியிடம் விசாரணை. துருவி துருவி துளைத்தார். அவள் தனது கல்லூரி மாணவன் ஒருவனின் கையடக்க கமரா போன் வழியாக ஆபாசக் காட்சிகளை அப்பட்டமாக கண்டு - எடுபட்டு மேலதிக வகுப்பு என்ற சாட்டில் சுற்றித் திரிந்ததையும் தெரிந்து கொண்டார். கொப்பளித்த கோபத்தை அவரால் அடக்க முடியவில்லை. பிரம்பை எடுத்துப் பிடித்தார். சுழரச் சுழர - கதற கதற - பிரம்பு சுக்கு நூறாகும் வரை வாட்டினார்.

இருந்தும்
மாலினி கிறுங்கவில்லை! மாறாக - இனி கை நீட்டினால் என்னை உயிருடன் காண மாட்டியள்" என்றாள்.

அந்த நேரம் “ஐ...யோ!...அ..ம்மா! என உரக்கக் கோரக் குரல் ஒலித்தது. மரண ஓலம் ஒலித்த வீட்டுக் குசினிப் பக்கம் தகப்பனும் மகளும் ஓடினர். தாய் புனிதவதி மண்ணெண்ணெய்க் குளியலில் எரிந்து கருகிக் கொண்டிருந்தாள்.

(ஞானம் - மார்ச் 2012)



# நடப்பு

கந்தசாமி கோயிலடி வீதியால் சைக்கிளில் கனகராசா வந்து கொண்டு இருந்தான்.



அவனை வழிமறித்த வாலிபன் ஒருவன், சண்டித்தனமாக தன்னைத் தெரியுமா என வினாவினான். அவனை அடையாளம் காண கனகராசாவுக்கு கஷ்டம் ஏதும் இருக்கவில்லை. "நீங்க கோயிலடி முதலாளி அருணாசலத்தின் இளைய மகன் நாகராசா தானே" என பதிலளித்தான்.

"தெரிந்தது நல்லது. இனிமேல் சுவாமி வீதி உலா வரயிக்கை என்னை நீ கண்டால், சுவாமி காவும் வேலையை செய்யப் படாது, தெரிந்ததா?"

கனகராசாவுக்கு தூக்கி வாரிப் போட்டது!


அதேவேளை இரண்டு தினங்களுக்கு முன்னைய தினம், சுவாமி உலா வந்த வேளை, "இன்னம் ஒருத்தர் முன்னுக்கு வாங்கோ" எனக் கோயிற் குருக்கள் உரத்த குரலிற் கூப்பிட அவ்விடத்தில் சுவாமி தூக்கக் கூடிய வேறு ஆட்கள் இல்லாததால், தான் முன் சென்று கொம்புக்கு தோள் கொடுத்து தாக்கிச் செல்ல, எங்கிருந்தோ அவசரம் அவசரமாக ஓட்டமும் நடையுமாக வந்த நாகராசா

"நான் வந்திட்டன் கனகு, இனி நீ விலகிப் போகலாம், நான் தூக்கிறன்" என்றதை தான் பரவாய் பண்ணாததும், நாகராசாவுக்கு முகம் கறுத்ததும் நினைவுக்கு வந்தது. சுவாமி தூக்கவென நெற்றியில் தடித்த பட்டை, ஏரியிற் பளபளக்கும் தங்கப் பவுண் சங்கிலி, அரையில் "ஓம் முருகா" சால்வை - மடிப்புக் குலையாத வெளுத்த வெள்ளை வேட்டி முதலிய ஆடை அணியில் எடுப்பாக வந்து, ஏமாந்த நாகராசா தலைகுனிவுடன் பின்வாங்கியதும் நினைவிற் பளிச்சிட்டது.

"அப்படி என்ன செய்திட்டன் எண்டு வழிமறிக்கிறாய்? விடு வழியை! நான் அவசர அலுவலாகச் சந்திக்குப் போறன்" என்றான், கனகராசா.

"உனக்கு அவசரம். ஆனால் எனக்கு அத்தியாவசியம்! கனகு இது எங்கடை ஊர். நாங்க ஊர்ப் பிறந்தவை. எங்கட கோயிலிது. என்ரை தாத்தா இந்தவூர் விதானை. அதோடை இந்த முருகன் கோயில் தாமகர்த்தா. நீயோ வந்தான் வரத்தான். நீ இஞ்சை இனி நடப்பு நாட்டாமை காட்டினால், நான் இப்படி பேசுவன் என்டு நினைக்காதை. பேசப் போறது இது!" எனச் சொல்லி பக்கற்றுக்குள் இருந்த தன்னியக்க வில்லுக் கத்தியை இழுத்து எடுத்து சடாரென அமுக்கி கூரிய கத்தியை நிமிர்த்திக் காண்பித்தான்.

(மல்லிகை – மே 2012)



# சங்காரம்



கணித ஆசிரியர் கனகசபை என்றால் மாணவர்களுக்கு உயிர்.
அவர் சேவையில் இருந்த காலத்தில் மிகுந்த அக்கறை எடுத்து எத்தனையோ மாணவர் பல்கலைகழகப் படியேற காரண கர்த்தாவாக அமைந்தார். ஆசிரிய தொழிலில் இருந்து இளைப்பாறிய பின்பும் தனது வீட்டு வளவுக்குள் நீண்ட கிடுகுக் கொட்டில் போட்டு வசதி குறைந்த மாணவர்களுக்கு இலவசமாக பாடம் கற்பித்தார்.

கனகசபை ஆசிரியருக்கு ஒரு பாரிய துர்பாக்கியம், அவரது அன்பு மனைவி தனது மூன்றாம் மகப்பேற்றின் போது மறுலோகம் சென்று விட்டமை. ஆசிரியர் சோரவில்லை. தனது மக்களின் நலனுக்காக தாயாக - தந்தையாக - நல்லாசிரியனாகப் பாடுபட்டார். அதன் விளைவு அவரின் மூன்று மக்களும் வெளிநாடு சென்று இருவர் வைத்திய நிபுணராகவும் ஒருவர் பொறியியலாளராகவும் மிளிர முடிகிறது.

ஆசிரியர் ஆரோக்கியமாகத் தான் இருந்தவர். ஆனால் எண்பத்தேழாம் வயதிற்குப் பிறகு அவர் வெறும் எலும்புக்கூடு:
அவரால் உசும்ப - ஊசலாட முடியவில்லை. படுத்த படுக்கை. மூச்சு பேச்சு முற்றாக இல்லை.

உற்றார் உறவினர் முடிந்தளவு பணிவிடை
செய்தனர். நன்றி மறவாத அவரின்
மாணவரும் தம்மால் முடிந்தளவு உதவினர்.
ஆட்களை வைத்து ஆசிரியரை பராமரிக்க
நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது.


சூப்பியிற் பால் மட்டும் பருக்கி ஆசிரியரின்
இதயத்தை இயக்கிட வேண்டியிருந்தது.

அறிவு செயலிழந்தது. ஆட்களை முற்று
முழுதாக ஆசிரியரால் அடையாளம் காண
முடியவில்லை. வெளிநாட்டு ஆசிரியரின் மகன்
மாருக்கு அவசரத் தகவல் அனுப்பப்பட்டது.
மூவரும் லீவில் வந்தனர்.

மகன்மார் வந்த அடுத்த நாள் விடிய
ஆசிரியரின் இழவுச் செய்தி பரப்பப்பட்டது.
ஊர் படையெடுத்து வந்து அழுது புரண்டது.

ஆனால்,
முக்கிய வதந்தி ஆசிரியர் விஷ ஊசி
மருந்திற்கு பலியானதாக!

(ஞாயிறு தினக்குரல் 15.07.2012)



# பம்மாத்து



சைவ சமயக் கோட்பாட்டை கொண்ட அந்தச் சங்கத்தின் பெயரைக் குறிப்பிட்டால், சம்பந்தப்படும் ஆளை அடையாளம் கண்டு விடுவீர்கள்.! எனவே பெயரைக் குறிப்பிடாது கதையை சொல்லுகிறேன்.

அடுத்தாண்டுக்கான அலுவலர்கள் தெரிவு அண்மிக்க தான் வகிக்கும் தலைவர் பதவியைத் தொடர்ந்து தானே அனுபவிக்கும் ஆசையில் சாணக்கியத் தனத்தோடு திட்டம் தீட்ட நடப்பாண்டு செயலர் இல்லத்திற்கு அவர் வந்தார்.

அந் நேரம் தவிர்க்க முடியாத அவசர அலுவலாகச் செயலர் வெளியே போய் விட்டதால் செயலரின் மூத்த மகள் கமலினி அவரை வரவேற்றாள். "எங்களுடன் தேநீர் அருந்திப் போகலாம். இருங்கோ" என்றாள். கமலினி ஒரு பிரபல சட்டத்தரணி. அவளுக்கு இளைய சகோதரிகள் இருவர். இருவருள் ஒருவர் டாக்டர். மற்றவர் கணக்கியலாளர். ஒரு குறைபாடு. மூவரும் நாற்பது வயதுக்குமேல். மற்றது ஆரும் இன்னும் வாழ்க்கைப் படவில்லை. அக்குறைபாட்டுக்கு மூல காரணம் அவர்கள் பிறவி சைவ உணவினராக வாழ்கின்றமை.

சைவ போசனிகள் அதி வேகமாக அருகிக் கொண்டு போவதை சைவ சமய நிறுவனங்கள் கண்டும் காணாமல்




வேல் அமுதன்

இருப்பதை கண்டு கமலினி கொதிப்படைவதுண்டு. அதனை வசதியாக வந்த தலைவரின் கவனத்திற்கு கொண்டு வர வாய்ப்பாக அச்சந்தர்ப்பத்தை பயன் படுத்த நினைத்தாள்.

தேநீர் அருந்திய தலைவரிடம் "தலைவர் ஐயா, உங்கடை குடும்பத்தினர் எப்படி? உங்களுக்கு பிள்ளைகள் எத்தனை? எங்கே?
எனக் கமலினி பாரம்பரிய பாணியில் கதை எடுத்தாள்.
"அம்மா நானும் மனைவியும் தான் இஞ்சை. எமக்கு மூன்று மகன்மாரும் ஒரே ஒரு மகளும் அவுஸ்ரேலியாவிலை. இரண்டாவது மகன் UK இலை. இளையவன் கனடாவிலை. நல்லா இருக்கினம் அம்மா"

"வெளி நாட்டிலை சைவராக இருக்க முடியுதா?"
"இல்லை அம்மா, அவையிலை மூண்டு பேர் கட்டினது வெள்ளைக்காரரை.
போசனம் மச்சம் தான்.
"ஐயா எழும்புங்கோ" கமலினி கட்டளையிட்டாள்.
"ஏன் பிள்ளை"
"நீங்க வீட்டிலை கடைப்பிடிக்க முடியாத சித்தாத்தங்களை நாட்டில் எப்படி நடைமுறைப்படுத்தப்போறியள்? You are a dog in the manger!"
"பி...ள்....ளை!"
"முதல் எங்கடை வீட்டை விட்டு வெளியேறுங்கோ! இனிமேல் இந்தப் பக்கம் வாறதை மறந்திடுங்கோ"
தலைவர் மறைந்தார்! அவர் மறைந்தது எப்படி என அவருக்கே தெளிவில்லை.

(ஞாயிறு தினக்குரல் 11.03.2012)



# விளம்பரம்

11



செவ்வாய் கிழமை தோறும் நான் பத்திரிகை அலுவலகங்களுக்குப் போவதும் எமது திருமணசேவைபற்றி விளம்பரம் கொடுப்பதும் உங்களுக்கு நல்லாத் தெரிந்த விடயம்.

அன்று அந்தப் பத்திரிகை அலுவலகத்திற்கு நான் போன போது அங்கே எனக்கு பக்கத்தில் அமர்ந்திருந்த பிரமுகர் கொடுத்திருந்த விளம்பரத்தை நன்றாக பார்க்கக் கூடியதாக இருந்தது. பத்திரிகையின் முழுப்பக்க அளவு கலர் கண்ணீர் அஞ்சலி அது. அவ்விளம்பரத்திற்கு அவர் செலுத்திய தொகையை சொன்னால் நீங்கள் நம்ப மாட்டீர்கள், ஆனால் உண்மை! இரண்டு இலட்சத்து நாப்பத்தாறாயிரத்து நாநூறு ரூபாய்!

எனது வேலையை நான் முடிப்பதும் பிரமுகர் தனது வேலையை முடித்துக் கிளம்புவதற்கும் சரியாக இருந்தது. அவர் எனக்கு முன்பாகவும் நான் அவரின் நிழல் போல அவரைப் பின் தொடர்ந்து வீதியால் போய்க் கொண்டிருந்தோம்.


ஒரு கால் சூம்பல், மற்றது முற்றாக இழந்த நிலை,அந்தப் பரிதாப கோலத்தில் ஒரு யாசிகன்."ஐயா தருமம்! நான் கால் வழுங்காப் பாவி ஐயா!"- அவன் மன்றாடினான்.

“கால் விழுங்காவிட்டால், அனாதை மடத்தில்
போய்க் கிடப்பது! ஏன் போறவாறவர்களுக்கு
வீண் அரிகண்டம்” பிரமுகர் முடம் எனவும்
இரங்காது எரிந்து விழுந்தார்.

சற்று அப்பால் இன்னொரு இளம் யாசிகன்
தெருவோரம் சுடுநிலத்தில் சீலைத் துண்டு
விரிப்பு மேல் கிடந்த படி “ரண்டு கைகளும்
இழந்தவன் ஐயா! இது யுத்தக் கொடுமை!
பசிக்குது! விடியத் தொடங்கி பட்டினி! ஏதாவது
பார்த்துப் போடுங்க ஐயா!” அழாக் குறையாக
கெஞ்சினான்.

இப்ப யுத்தம் இல்லைத்தானே!
மீள் குடியேற்றமல்லே நடக்குது! உங்கட
ஊருக்குத் திரும்பி போகலாம் தானே! எனச்
சீறிச் சினந்த படி எடுத்தெறிந்து
பேசியபடி நடந்தார்.
“கண்முன் கஷ்டப்பட்டு மாளும் நம்மவரை
விடவா என்றோ மரணித்தவர் பெரிது?
இரங்காது விட்டாலும் ஈயாது விட்டாலும்
குத்தற் பேச்சை தவிர்த்திருக்கலாமே!” என்
வாய் தன் பாட்டிற் புறுபுறுத்தது.

(ஞானம் – நவம்பர் 2010)



# விசுவாசம்



செவ்வாய் வெள்ளவத்தை 102 இலக்க வழி பஸ்சில் பயணித்து வெள்ளவத்தை காவல் நிலையத்திற்கு முன்பாக இறங்கி பசிள்ஸ் லேன் ஊடாகச் செல்ல எத்தனித்த கலியாண பொருத்துனர் தங்கராசா பட்டபாடு .. அப்பப்பா.

கொட்டிய பேய் மழையால் Church house க்கு முன்பாக ஓடிய வெள்ளத்துள் தத்தளித்தார். அந்தப் பெரு மழையால் ஏற்பட்ட அசௌகரியத்தையும் அக்கறைப்படுத்தாது race ஓடிய மோட்டார் வாகனங்களால் பொருத்துனர் குளிப்பாட்டப்பட்டார். ஒன்றரையடி அழுக்கு நீர் முழுக்குடன் பசள்ஸ் லேன் தொங்கலுக்குப் போன போது தான் காலில் போட்டிருந்த சிலிப்பர் சோடியில் ஒன்றை வெள்ளம் அள்ளிச் சென்றது தெரிய வந்தது. மற்றைய தனிச் சிலிப்பரை தூக்கி துூர எறிந்து விட்டு காலணியே இல்லாமல் விறுவிறுவென நடந்து chief clerk துரைரத்தினம் வீட்டிற்கு ஒரு மாதிரி சொன்ன நேரத்திற்கு வந்து சேர்ந்து விட்டார்.

தங்கராசா பெருமழையுள் மாட்டுப் பட்டதும், காலணியை வழுக விட்டதும் துரைரத்தினத்திற்கு அவர் மேல் மேலதிக அக்கறையை உண்டு பண்ணின “தேவி எங்கட தங்கராசா நல்லா நனைந்து போனார். சூடான தேத்தண்ணியும் ஏதாவது சாப்பிடவும் கொண்டு வா” என மனைவிற்கு சத்தமிட்டார்.

தங்கராசாவுக்கு தேநீரும் மலிபன் பிஸ்கட்டும் வழங்கப்பட்டன.

தான் பாவிக்கும் ஒரு சோடி செருப்பை பொருத்துனர் திரும்பி தன் வீட்டுக்குப் போகும்


போது அணிந்து கொண்டு போக வசதியாக தமது விட்டுக் கதவடியில் வைத்த துரைரத்தினம் பேசைத் திறந்து இரண்டாயிரத்து ஐநூறு ரூபாய் காசையும் பொருத்துனரின் சேட் பைக்கற்றுள் திணித்தார்.

“என்னையா இதெல்லாம்! ஏன் காசு? அப்படி நான் என்ன செய்து போட்டன்? பொருத்துனர் கேள்வி மேல் கேள்வி கேட்டார்.
“தங்கராசா! கடந்த ஆறு மாத காலமாக நீ பட்ட பாடு! மழை வெயில் எண்டு பாராது இந்தக் கலியாணம் ஒப்பேற படும் வேதனை எனக்கு விளங்கும். நீ நல்லாக இருக்க வேணும். அப்ப தான் என்ட மகளுக்கும் நல்ல மாப்பிள்ளை கிடைப்பான்.” “சரி ஐயா! மாப்பிள்ளை பிடிச்சுது தானே! பன்னிரண்டு வருஷம் UK இல் இருந்துட்டு வந்த நல்ல பெடியன் M.Sc. ஐயா, பெரிய இடத்திலை நல்ல வேலை...”

“கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கோ தங்கராசா, மாப்பிள்ளை ஒரு மாசமாக UK ல் இருந்து email லும் போனிலும் எங்கட மகள் மதுராவோட கதைக்கிறார். அவள் பிள்ளை lawyer ரல்லே.
அவளின்ர கதையையும் கேட்பம்!
மதுரா, மதுரா! இஞ்சை கொஞ்சம் வா அம்மா... தங்கராசாவுக்கு மாப்பிள்ளை பற்றிக் கொஞ்சம் சொல்லம்மா” “அம்மா, மாப்பிள்ளையை பிடித்திருக்கு தானே? பொருத்துனர் முந்தியடித்துக் கொண்டு மதுராவை விசாரித்தார்.

மதுரா சொன்ன அதிர்ச்சியூட்டிய பதில் “மாப்பிள்ளை எங்களுக்கு சரி வர மாட்டார். நான் என்ர அப்பா அம்மாவுக்கு ஒரே பிள்ளை. ஆனால் மாப்பிள்ளை கலியாணத்துக்குப் பிறகு என்ர அப்பா அம்மா எங்களிட்டை வரப்படாதாம், தனக்கு மாமா மாமி வந்து போறது பிடிக்காதாம்!...”

**(செங்கதிர் – டிசம்பர் 2010)**



# சகுனம்



செல்லம்மாவுக்கு தனியார் வைத்தியசாலையில் Bypass Surgery இன்று காலை.
செல்லம்மாவின் கணவன் செல்வரத்தினம், தன் மனைவிக்கு நேர்ந்த இடரை நினைத்து ஆட்டம் கண்டு விட்டார். அரச ஊழியனாக வேலை பார்க்கும் சாமானியனான அவருக்கு, ஒன்றா இரண்டா ..? அடேயப்பா! ஒரேயடியாக ஒரு நூறு பிரச்சனைகள் ஒன்று சேர்ந்து உதைத்தால் அவரால் அதனை எப்படித் தாங்க முடியும்?

அவர் அறுவை சிகிச்சைக்கு உடனடியாக மூன்று இலட்சம் முற்பணம் கட்ட வேண்டி வந்தமை ஒரு பிரச்சனை. செல்லம்மாவின் Blood group ரத்தத்தோடு சேரக் கூடிய ரத்தம் வழங்கக் கூடிய திடகாத்திரரைக் கண்டு பிடிக்கப் பட்ட பாடு இன்னொரு பிரச்சனை, Wheel Chair இல் செல்லம்மா Theatre க்கு அழைத்துச் சென்ற போது, "வாறன்" என்பதற்குப் பதிலாக "போறன்" என வாய் தடுமாறி சொல்லியிருந்தமை இன்னொரு பிரச்சனை.

இப்படி சொல்லில் அடங்கா எத்தனையோ பிரச்சனைகள் இருந்த போதும், இனி அவ் வைத்தியசாலையிலிருந்து விடுபட்டு வீடு போகும் வேளை மீதி வைத்தியக் கட்டணமாக

சுமார் நாலு இலட்சத்தை எப்படி கட்டுவது? அதனை ஆரிடம் புரட்டுவது? என்பன போன்ற கேள்விக் கணைகள் அவரைப் படாத பாடு படுத்துகின்றன...!

இப்போது மாலை ஐந்து மணி.

தகவல் தெரிந்து சுகம் விசாரிக்க பிரவாகித்த ஜன வெள்ளம் (உற்றார் உறவினர்) செல்லம்மாவின் படுக்கை அறையை நிரப்பி வழிந்தோடியது. அத்தோடு அவர்களின் கேள்விகள் செல்வரத்தினத்தின் மண்டையை போட்டுக் குடைந்தன.

பற்றாக் குறைக்கு ஊர் சோதிடர் சோதிநாதன் எப்படியோ செய்தி அறிந்து விழுந்தடித்து ஓடி வந்தார். "ராசி பலன் பார்த்தனீங்களா? இப்ப விருச்சிக ராசிக்கு நல்லா இருக்காதே!" சோதிடர் சோதிநாதனின் காலப் பலனிது.

செல்வரத்தினத்தின் மனம் நொருங்கிப் போக ஆத்திரமடைந்த அவர் "முதலிலை நீர் வெளியே போம்" என இரைந்தார்.


இந் நேரம் இன்னொரு உருவம் அவ்வறைக்குள் நுழைந்தது. அது வேறு ஆருமல்ல! சிகிச்சை முன்னேற்றத்தை அவதானிக்க நியமிக்கப்பட்ட நேர்ஸ்.

"மாத்தையா!" நேர்ஸ் கூப்பிட்டாள்.

"என்ன"? சொல்லுங்கோ" செல்வரத்தினம மிக ஏக்கத்தோடு வினாவினார்.

"நோனாவிற்கு அறிவு வந்திட்டுது!" நேர்ஸ்சின் நம்பிக்கை ஊட்டிய வார்த்தைகள் தான் இவை.

**(மல்லிகை – நவம்பர் 2010)**



# பாச பூமி



கைலாஷ் கைராசிக் காரன் எனக் கலியாணச் சந்தையில் கதை. அதனால் அவனிடம் வாடிக்கையாளர்கள் அதிகம். ஆனால் என்னைப் பொறுத்தவரை அப்படி ஒரு மர்மமும் அவரிடம் இல்லை. இருப்பது கடும் உழைப்பு. இரவு பகல் பாராது சோராது ஓயாது பம்பரம் போல சுழன்றடித்து நேர்மையாக நேர்த்தியாக உழைப்பவர் அவர்.

அவர் அநேகர் செய்யாத ஒன்றை திறம் பட செய்து வருகின்றார். இணையத்தளம் பத்திரிகை விளம்பரப் பகுதி முதலியவற்றில் தகவல் சேகரித்து சம்பந்தப்பட்டவர்களை ஒருவாறு இனங்கண்டு நடவடிக்கை எடுக்கிறார். சாதகக் குறிப்பு தட்டுப் பாட்டை போக்க தரகர் வட்டங்களுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு வருகிறார்.
அவரது அலுவலக ஊழியரும் உண்மையாக உழைக்கின்றார்கள்.

அதனால் அவரது திருமண சேவை நிலையத்தில் அதிகப்படியான
கலியாணங்கள் நடைபெறுகின்றன.

அன்று, ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் அவரது அலுவலகத்திற்கு நான் போயிருந்தேன்.

ஒரு நடு வயது கனவான் வந்தார். யாழ் உயர்குல சைவ வேளாள - முப்பத்தி நான்கு வயதான - 5' 5"மெலிந்த சிவந்த அழகிய எக்கவுண்டன் மணமகளுக்கு பொருந்தக் கூடிய உயர் தொழில் சார் கல்வி பயின்ற

வாலிபரின் சாதகக் குறிப்பு தேவை எனச் சொல்லி மணமகளின் சாதகக் குறிப்பையும் சுய விவரக் குறிப்பையும் புகைப் படத்தையும் பதிவுக் கட்டண ரொக்கத்தையும் கையளித்தார்.

சுயவிவரக் குறிப்பை மேலோட்டமாக பார்த்த கைலாஷுக்கு முகம் கறுத்தது! ஆவணப் பிரதிகள் அனைத்தையும் கட்டுப் பணத்தையும் மீளக் கனவானிடமே கையளித்த கைலாஷ் "நான் இப்படியானதுகளை செய்வதில்லை" என்றார்.

பார்வையிட்டுக் கொண்டிருந்த எங்களுக்கோ ஆச்சரியம்.....!


"ஏன் மறுக்கிறியள்? நான் ஒன்டும் பிழைவிடவில்லையே?" கனவான் விசாரித்தார்.

"ஒருக்கா சுயவிவரக் குறிப்பை நீங்களே படித்துப் பாருங்கோவன்"


அதனை அவதானமாக வாசித்தவர்"அப்படி ஒண்டுமே பிழையாக இல்லையே" என்றார். சுயவிவரக் குறிப்பை திரும்ப வாங்கிய கைலாஷ் எதிர்பார்ப்புப் பகுதியை எரிச்சலோடு வாசித்தார்."எமது எதிர்பார்ப்பு 5'6" க்கு மேற்பட்ட உயரிய அழகிய மதுபாவனையற்ற லட்சணமான மாப்பிள்ளை சீதனம் கொழும்பில் சொகுசு அப்பார்ட்மெண்ட், ரொக்கம், குறிப்பு: தீவகம் வேண்டாம்.

கைலாஷ் கண்டிப்புத் தோரணையில் நாத்தழுதழுக்கச் சொன்னார் "நான் அசல் தீவான் எனது பெற்றோர்களும் அசல் தீவார், எங்கடை ஏன் நீங்களும் தீவுதானே. இலங்கையும் ஒரு தீவு தானே?"

(மல்லிகை – ஆகஸ்ட் 2011)



# எமன்



சிவஞானம் மாஸ்டருக்கு அவசர அறுவை சிகிச்சை, (Bypass surgery) செய்யப்பட்டு இப்போது தான் அவரது அறைக்கு அவர் மீளக் கொண்டு வரப்பட்டார்.

தாங்க முடியாத வலி ஏற்பட்டு உடனடி அறுவைச் சிகிச்சைதான் ஒரே வழி அல்லாவிடின், எந்நேரமும் அவரின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம் என வைத்தியர் வட்டம் தெரிவித்தமையால் எப்படியாவது அவரைக் காப்பாற்றி ஆக வேண்டும் என அவரின் ஒரே மகன் மகேந்திரன் தனது வங்கிச் சேமிப்பையும் கைமாறக் கூடியளவு பணத்தையும் ஈட்டுக்கும் பெற்று எடுத்த துரித முயற்சி பெரு வெற்றி ஈட்டியுள்ளது.

அறுவை சிகிச்சையை தொடர்ந்து தீவிர கண்காணிப்புக்கென ICU ல் வார காலம் வைத்திருந்து திருப்தி தென்பட்டதால் அவரது அறைக்கு அவர் கொண்டுவரப்பட்டார். அவரைக் கொண்டு வந்த கையோடு அறுவை சிகிச்சை வைத்தியர் குழுவில் ஒருவராகப் பணிபுரிந்த அவரின் இந்துக் கல்லூரி பழைய மாணவன் டாக்டர் வரப்பிரகாஷ்சும் அவரது அறைக்கு வந்து “இனிப் பயப்பட ஒண்டும் இல்லை. சரியான நேரத்தில் அனுமதித்ததால் எங்களால் மாஸ்டரை காப்பாற்ற முடிந்தது.

இன்னம் ஒரு வாரம் இவரை வைத்தியசாலை கண்காணிப்பில் வைத்திருக்க முடிவு செய்துள்ளம்” என நம்பிக்கை ஊட்டிச் சென்றார்.

மாஸ்டர் கதைக்கக் கூடியதாகக் காணப்பட்டார்.

மாஸ்டரின் குடும்ப அங்கத்தவர் அதாவது அவரின் அன்பு மனைவி பாக்கியம், மூத்த வயது வந்த மூன்று மகள்மார் மகன் மகேந்திரன் இன்னும் வேறு சில நெருங்கிய உறவினரும் அவரின் அறையுள் காணப்பட்டனர்.

“ஒப்பரேஷன் செலவுக்கு எப்படி காசு தேடிக் கொண்டியள்” மாஸ்டர் மெல்ல மெதுமையாக விசாரித்தார்.


அனைவரும் பேச்சு மூச்சு அற்று மௌனம் காத்தனர். மௌனத்தைக் கலைத்த பாக்கியம் “வங்கியிலும் பத்தாததுக்கு வீட்டாரின் நகை நட்டை ஈடு வைத்தும் எங்கட ஏகாம்பர முதலாளியிட்டையும் வாங்கினனாங்கள்.” என்றாள்.

“ஏகாம்பரத்திட்டை எவ்வளவு வாங்கினனீங்க?”

“ஐஞ்சு லட்சம்”

“ஆ....வ்! ஐஞ்..சு லட்சமா? ஏகாம்பரத்திட்டையா”? என்ற மாஸ்டரின் ஏக்கம் அவரை சிவலோகம் ஏகிடச் செய்தது.

தகவல் - ஈவிரக்கமில்லா ஏகாம்பரம் அறவிடுவது ஏழு சத வீத அற வட்டி!



# சங்கை



கலாநிதி பத்மநாதனுக்கு திருமணப்பதிவு லண்டனில் நடந்தது.

அதற்கான அனுமதி அவரின் தந்தை தம்பிஐயாவிடமிருந்து கிடைத்தது. தம்பிஐயா தொலைபேசியிற் சொன்னவை. “எங்கடை ஊர் லண்டன் மணியமவை சங்கையான ஆட்கள் தம்பி. மணியத்தாற்ரை பேத்தி லீலா குடும்பம் உங்கை லண்டனிலே தான் இருக்கினம். லீலா MBA பட்டதாரி படத்திலை பாத்தன். பிள்ளை லட்சணமாக இருக்கிறாள். சாதகத்தையும் பாப்பித்தன் நல்ல பொருத்தம். அவை உங்களுக்கு லீலாவின்ரை புகைப்படத்தை ஈ.மெயில் பண்ணுவினமாம். அவளை உங்களுக்கு நல்லா பிடிக்கும். குடுக்கல் வாங்கல் பிரச்சனையே வராது. கலியாண எழுத்துக்கு நீ சம்மதி. பிறகு கலியாணத்தை இங்கை கொழும்பிலை ஜாம் ஜாம்மென்று செய்வம்.

கலாநிதி புகைப்படங்களையும் Face book விவரங்களையும் கணணி வழியாக கதைத்ததிலும் மனப்பூர்வமாக திருப்திப்பட்டார்.

திருமணப்பதிவு ஆடம்பரமாக நடந்ததை தொடர்ந்து கலாநிதியும் லீலாவும் அடிக்கடி தொலைபேசியிற் பேசி மகிழ்ந்தனர்.

வேல் அமுதன்

திருமணப் பதிவு முடிந்த அடுத்த ஞாயிறு. மதிய போசனத்திற்குக் கலாநிதிக்கு அழைப்பு வர அதனைச் சந்தோஷமாக ஏற்று லீலாவின் பங்களாவுக்குப் போயிருந்தார். அவருக்குச் செங்கம்பள வரவேற்பு. ராஜ மரியாதை. லீலா தன் கையாலேயே சாதத்தைப் பரிமாறினாள்.


லீலா சாதத்தைதப் பரிவுடன் பரிமாறியவேளை வலக்கைகட்டை விரலைத் தவிர அவளின் நாலு விரல்களிலும் மோதிரங்கள் மின்னுவதை கலாநிதி கவனித்தார்.

லீலாவின் அறையுள் அவளோடு தனிமையில் இருந்த வேளை ஒரு கேள்வியை கேட்டார். “எப்படி லீலா நாலு மோதிரம்?” “ஒண்டு நீங்க போட்டது. மற்றது மூண்டும் முன்னைய Boy friends போட்டது பழைய friendship பையும் மறக்கக் கூடாது தானே?”

இரு நாட்கள் ஓடி மறைந்தன. எதிர்பாராதது அரங்கேறியது.

கலாநிதி சார்பில் அவரின் சட்டத்தரணி துரைராஜா லீலாவுக்கு திருமண பதிவு ரத்து அறிவித்தல் பதிவுத் தபாலாக அனுப்பி வைத்தமையே அது!

(மல்லிகை – செப்டம்பர் 2011)



# தட்சணை



ஒருவாறு குடும்ப வைத்தியரின் கட்டணத்தை கந்தையா கட்டினானே ஒழிய வைத்தியர் சொன்னது போல அவனின் மனைவியை உடனடியாக பெரியாஸ்பத்திரியில் அவனால் அனுமதிக்க முடியவில்லை.

தாமதம் நோயாளிக்கு ஆபத்தை விளைவிக்கலாம் MRI Scan பண்ணி நோயை இனங் கண்டு உடன் சிகிச்சையை தொடர வேண்டுமென தெரிவிக்கப்பட்டிருந்தும், மனைவியை வாடகைக் கார் பிடித்துக் கூட்டிப் போவதற்கு அவனிடம் பணமில்லை.

அவன் ஒரு விசுவாசமான தொழிலாளி, காலையில் எட்டு மணிக்கு வேலைத்தளத்திற்குப் போய் இரவு எட்டு மணி வரை மாடாய் உழைப்பவன் கடந்த இருபது வருட நேர்மையான கடும் உழைப்புக்கு அவனுக்கு இன்று கிடைக்கும் மாதாந்த வேதனம் பதினெட்டாயிரம் ரூபாய் மட்டுமே.

கந்தசாமிக்கு நல்ல அறிமுகமான ஒருவர் அவனின் தொழிலதிபர் கனகசபை மாத்திரமே. அவன் தனது அவசர தேவையை முதலாளியிடம் முறையிட்டு முற்பணமாக கொஞ்ச காசு கேட்டான். கனகசபை "சனம் மீளக் குடியேற்றத்திற்கு


அனுமதிக்கப்பட்டதால், தொழில் துறை படுத்திட்டுது. ஒரு நாளைக்கு ரண்டு தடவை சேல்ஸ்சுக்குப் போன எங்கட வான் வாரத்திற்கு ஒரு தடவையும் போகுதில்லை.”

என ஒரு பெரிய குண்டை போட்டார்.

அன்று போயா தினம் பின்னேரம் கந்தசாமி செய்வதறியாது கால் போன பக்கமாக போய் அந்தப் பிள்ளையார் கோயிலில் மிதந்தான்.

ஒரு ஆடம்பர கார் ஆலய வாசலில் வந்து நின்றது. பளபளக்கும் பட்டுப் பீதாம்பரத்தில் பதக்கம் தொங்கும் கழுத்துப் பவுண் சங்கிலியுடன் காரிலிருந்து இறங்கியவர் வேறு யாருமல்ல! அவனது அபிமான முதலாளியும் அவரது அன்பு மனைவியும் தான். கந்தசாமி ஏதோ நினைத்தவனாக ஆட்களோடு ஆட்களாக தானும் அவர்களை பின் தொடர்ந்தான். முதலாளி தம்பதிக்குக் கோயிலில் முதல் மரியாதை. அவர்களின் அர்ச்சனை தட்டில் தெரியத்தக்கதாக வைக்கப்பட்டிருந்தது ஐயாயிரத்து ஒரு ரூபாய் தட்சணை.

(ஞாயிறு தினக்குரல் 11.03.2012)



# கண்றாவி



இது எங்கள் நாட்டுக் கதையல்ல வெளிநாட்டுக் கதை. எந்த நாடு என்று மட்டும் என்னைக் கேட்டு விடாதீர்கள்.

கதைக்கு நான் நேரே வருகின்றேன்.

எனது நண்பன் ஒருவன் தனது சகோதரிக்குச் சுகமில்லை என கேள்விப்பட்டதும் அந்நாட்டுக்கு அவளைப் பார்க்க போயிருந்தான்.

அந்நாட்டுக்கு போன பிறகுதான் தன் சகோதரி மன நோயாளி என்பதும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதும் அவனுக்குத் தெரிய வந்தது. சகோதரியின் சோகக் கதையை அவன் எனக்குச் சொல்லிய மாதிரியே நான் சொல்லி விடுகிறேன்.

“அக்கா பாவம்! நல்லவா.
ஆனால் வைதீகம். அத்தான் மரணித்ததற்குப் பிறகு தனிமையின் கொடுமையைத் தவிர்க்கத் தனது மூத்த மகளோடை அந்த நாட்டிற்கே போய் அவர்களோடையே வாழ்ந்தா.

ஒரு நாள் அவசரமாக குளியலறைக்குப் போக வேண்டி வந்ததால் குளியலறைக் கதவும் பூட்டப்படாமல் இருந்ததால்


வேல் அமுதன்

அசுமாத்தம் எதுவுமின்றி உள் நுளைந்தாள்
அங்கே அவள் கண்ட காட்சி அவளை
மனநோயாளி ஆக்கியது.

அக்காவின் வயது ஆன பேத்தி குளித்துக்
கொண்டு நிக்கையிக்கை அவளின் பின்புறக்
காட்சி கண்றாவி.
அதாவது பேத்தியின் ஆசனவாய் பகுதியில்
மோசமான ஆபாசப் படங்கள்.

"பிள்ளை இது என்ன படங்கள்?" என அக்கா
கேட்டிருக்கிறாள். கிடைத்த பதில் அவளை
இந்த நிலைக்கு கொண்டு வந்திட்டுது.
பேத்தி சொன்ன பதில்: "இது அம்மம்மா!
என்ரை 'போய் பிரெண்ட்' (Boy friend) கீறின
படங்கள். அவன் ஒரு நல்ல 'ஆட்டிஸ்ட் (artist)'

(செங்கதிர் – அக்டோபர் 2011)



# வழித் தேங்காய்



அன்று பிற்பகல் என்னிடம் வந்த வாடிக்கையாளர் வித்தியாசமானவர்.

அவர் தனது வேலையை முடித்து வெளிக் கிளம்பும் வேளை என்னை வெகுவாக பாராட்டினார்.

“ஐயா நீங்க வெரி நீற் (Very neat). இன்னொன்று நீங்க வெரி சிஸ்ரமற்றிக் (Very systematic). உங்களை எனக்கு நல்லாகப் பிடிச்சிருக்கு. எவ்வளவு பாராட்டினாலும் தகும்..” அப்படி அவரது புகழாரம் நீண்டு கொண்டே போனதுடன் ஒரு ஐநூறு ரூபாய் நோட்டையும் எனது சேட் பொக்கற்றுள் திணித்து “இதை சும்மா சந்தோஷமாக வைத்திருங்கோ”எனச் சொல்லியதோடு தான் என்னிடம் பெற்றுக் கொண்ட சாதகக் குறிப்பும் அதற்குரிய கட்டணத்தையும் சரியாக செலுத்தினார்.

எனது நினைவு பின்னோக்கி சென்றது....

அண்மையில் ஒருநாள். எனது திருமண அலுவலகத்துக்குள் தனது அலுவலைக் கச்சிதமாக முடித்து கட்டணம் செலுத்தும் நேரம் “ஐய்யய்யோ! மறந்து போய் மணிபார்ஸ்சை வீட்டில் விட்டிட்டு வந்திட்டன்.

அடுத்தமுறை வாற வேளை மறக்காமற் கட்டணத்தைக் கட்டாயம் செலுத்துறன்" எனச் சாட்டுச் சொல்லி என்னை மடக்கிய தனவானின் நினைவு வர அன்றைய பரோபகாரி வாடிக்கையாளரை மனதார பாராட்டினேன்.


நான் தொடர்ந்து வேலையில் ஈடுபட்டேன். நேரம் சரியாக மணி எட்டு. அலுவலகத்தை மூடி வீடு போகும் நேரமிது. அந்நேரம் பணப் பெட்டியைச் சரி பார்ப்பது எனது வழமையான பணி. கணக்கைச் சரி பார்த்த போது சரியாக ஐந்நூறு ரூபாய் நோட்டு குறைந்தது!.

என்ன நடந்திருக்கும்?.....

அன்றைய வேலைகளை பின்நோக்கி யோசித்தேன்.

சலரோக நோயாளியான எனது மனைவி, மணி இரவு ஏழரையாகியதும் இரவுப் போசனம் கடையில் இருந்து வந்து சேரவில்லை. தனக்குத் தலைச்சுற்றுத் தொடங்கி விட்டதாக சொல்லி என்னைக் கடைக்குப் போய் பார்சலை எடுத்து வரும்படி வற்புறுத்த, அவதியில் பணப் பெட்டி இருந்த மேசை லாட்சியைப் பூட்ட மறந்தமையைப் பயன்படுத்தி வேலி பயிரை மேய்ந்தது தெரிந்தது.

**(ஞாயிறு தினக்குரல் 20.11.2011)**



# அற்பாசை



கொழும்பு - காலி பிரதான வீதியை உங்களுக்கு நன்றாக தெரியும். வீதி கொள்ள முடியாத அளவு வாகன அமளி என்பதும் தெரியும். அன்றும் அப்படியே.


பாதசாரிகள் வீதி ஒழுங்கை அனுசரிப்பதில்லை. அவர்கள் பாதுகாப்பாகக் கடப்பதற்கென ஒதுக்கப்பட்ட மஞ்சல் கோடிட்ட இடங்கள் (Pedestrian Crossing) உண்டு. ஆனால் அவர்கள் தாம் நினைத்தபடி நினைத்த இடத்தில் நினைத்த நேரம் நினைத்த மாதிரி கடப்பது வழக்கம்.

இதனைச் சுட்டிக் காட்டும் நானென்ன முன் மாதிரியா? நானும் அவர்களில் ஒருவன் தான்!


அன்று மறுபக்கம் கடப்பதற்கு வாகன நெருக்கடி அற்ற நேரத்தை எதிர்பார்த்து கொண்டிருந்தோம். நானும் வேறு சிலரும். எனக்குப் பக்கத்தில் நின்ற உடலோடு ஒட்டிய சிவப்பு நிற “ரீ” சேர்ட்டும் இறுக்கமான ஜீன்சும் அணிந்த ஒருத்தி வாகனச் சந்தடியற்ற நேரம் பார்த்து மறுபக்கத்திற்கு விரைந்தாள். அவள் பாதுகாப்பாகச் சேர்ந்தாள் மறுபக்கம்.

அவளைப் பார்த்தோ என்னவோ அவளுக்குப் பக்கத்தில் நின்ற வாலிபன் ஒருவனும் அவளைத் தொடர்ந்து ஓடினான். ஆனால் பரிதாபம்! அந்நேரம் சடுதியாக விரைந்து வந்த வானொன்று அவனைப் பந்தாட அவன் மறுபக்கத்திற்கு தூக்கி வீசப்பட்டான். அவனது உயிர் ஊசலாடியது. அவ்விடத்திற் திரண்ட சனம் அவனை உடன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்ல முயன்றது. அவன் றோட்டை கடந்த போது ஏதோ வொன்றை குனிந்தெடுக்க முயற்சித்ததாலேயே தான் இவ் விபத்து நேர்ந்தது என்பதை நான் அவதானித்திருந்தேன். அவன் எதனை எடுக்க முயன்றான் என்பதை பார்த்தேன். கேவலம் தார் உருகி இறுகி ஒட்டினபடி இருந்த இருபத்தைந்து சத குத்தியே அது.

(நமது தூது 23-29.09.2011)



# துணிவு



ராஜா தம்பதி திருமண விபரக் கோவைகளுக்குள் நீண்ட நேரம் தேடியும் ஒன்றே ஒன்றை மாத்திரம் எடுக்கக் கூடியதாக இருந்தது. அச்சாதகக் குறிப்பு நல்ல பொருத்தம்.

ஆனால் கைக்கெட்டியது வாய்க் கெட்டும் போலில்லை.

அதற்கு மூல காரணம் கிடைத்த சாதகக் குறிப்பு மூல நட்சத்திரம் என்பதே. மகன் பூரம் நட்சத்திரம் என்பதாலும், மணமகள் மூலம் முதலாம் பாதம் என்பதாலும், ராஜா தம்பதிகளுக்கு உண்மையைச் சொன்னால் பயமே பிடித்து விட்டது!

பத்தாக் குறைக்குப் பக்கமிருந்த பாமினி (இன்னொரு வாடிக்கையாளர்) பிடில் வாசிக்கத் தொடங்கி விட்டாள். "ஐயா மூலம் வலு பொல்லாதது, தகப்பனுக்கு நாசம், நோய், நொடி, தீராத வருத்தம், கஷ்ட நஷ்டம் சொல்லுறன் என்று கோபிக்காதையுங்கோ சிலவேளை - மரணமே வரலாம்!"

மணமகளின் தந்தை சொன்ன கதை;

"நான் பரணி நட்சத்திரம். என்ரை மனிசி மூலம் முதலாம் பாதம். மூலத்தால் ஒரு விதப்

பிரச்சினையும் அறவேயில்லை.
இப்ப எனக்கு அறுபது வயதாகுது.
என்ரை அப்பா எண்பது வயது எந்தக்
குறையுமில்லாமல் திடகாத்திரமாக
இருக்கிறார். விடயத்திற்கு வாரேன் மூலத்திற்கு
நீங்க ரெடி என்றால் நாங்களும் ரெடி."

(செங்கதிர் – ஆக்ஸ்ட் 2009)



22

# அந்தரங்கம்

திருமண வைபவம். மணமக்கள் பால், பழம் பரிமாறும் நேரமது. பசும் பால், சர்க்கரை, தேன், வாழைப்பழம், பலாப்பழம், மாம்பழம் ஆகியவை கலந்த தீஞ் சுவைக்குழம்பை முதலில் மணப்பெண் மணமகனுக்கு மூன்றுமுறை ஊட்டுகிறாள்.

நிகழ்வை சபையோர் பாராவண்ணம் பட்டுச்சால்வை ஒன்றைத் திரைச்சீலையாகப் பாவித்து சால்வையின் இரு முனையிலும் இருவர் இழுத்துப் பிடித்து, காட்சியை மற்றவர் பாராதவண்ணம் மறைக்கின்றனர்.



வீடியோ கலைஞர்கள் திரைச்சீலையுள் ஆக்கிரமிக்கின்றார்கள்!

எங்கிருந்து, எப்படி வந்தாரோ தெரியாது! மணமகனின் தந்தை பண்டிதர் பொன்னம்பலம் பறந்தடித்து அவ்விடத்திற்கு வந்து விட்டார். வந்ததும் வராததுமாக, "வீடியோக்காரர், வெளியே போங்கோ" என்றார்.

"ஐயா! நாங்க படம் எடுக்க...", கலைஞர் குழுத்தலைவன் அதிர்ச்சியோடு பதிலளித்தான்.

"அதனைப் படம் எடுக்கத் தேவையில்லை"


"இது வழக்கம் ஐயா! எங்கேயும் நாங்க இப்பிடித்தான் படம் எடுக்கிறனாங்கள்"

“இஞ்சை அது தேவையில்லை”

“ஐயா, மகன் வெளிநாடல்லே! Embassy க்கும் படம் காட்டி Sponsor Certificate எடுக்க வேணுமல்லே! Embassy பால், பழம் ஊட்டலையும் பாக்குது”

“காட்டினால் அவங்க எதைத்தான் பாக்காங்கள்? ஆனால், அந்தரங்கத்தைக் காட்டி அனுமதி பெறும் அவசரம் எங்களுக்கில்லை! நீங்க எல்லோரும் உடனை திரைக்கு வெளியே போங்கோ” பண்டிதர் உரக்க ஆணையிட்டார்.


**(ஞானம் – டிசம்பர் 2009)**



23

# நுணுக்கம்

தொகையான கலியாணம் அல்ல:
தரமான கலியாணமே எனது நண்பர் தரகர் தம்பிப்பிள்ளையின் இலக்கு. அன்று தொட்டு இன்று வரைப் பொதுப் பொருத்தம் அனைத்து அம்சங்களையும் சரிவரக் கவனித்து திருமணங்களை நிறைவு செய்து நிறைவேற்றிக் காண்பவர் அவர்.



எனது ஊரவரான தனவந்தர் கமலநாதனின் மகள் லாவண்யம் மிக்க லலிதாவுக்கு எந்தக் குறையும் இருப்பதாகத் தெரியவில்லை.
நிறம் - மெலிவு - படிப்பு பக்கா.
அவளுக்கு ஏற்ற ஜோடி கண்டுபிடித்து பேச்சு வார்த்தை நடைபெறுவதாக நான் அறிந்து சந்தோஷப்பட்டேன்.

ஆனால்,

பேச்சு வார்த்தை பாதிக்கு மேல் நகரவில்லை. முறிவுக்கான உண்மைக் காரணமும் தெரியவில்லை. எமது தரகரை தனிமையில் அணுகி, பேச்சு வார்த்தை பாதியில் முடங்கியதன் காரணத்தை விசாரித்தேன். தரகர் மாப்பிள்ளை வீட்டார், பெண்வீட்டார் “குடும்பப் பாங்கில்லை” எனச் சொன்னதாக சொன்னார்.


எனக்கு ஒன்றும் புரியவில்லை.:
சிதம்பர ரகசியமாகவே இருந்தது.

கொஞ்சம் புரியும் படி சொல்லும் படி
வேண்டினேன். தரகர் தான் சொல்லுவது
ரகசியமாக இருக்க வேண்டும் எனப் பீடிகை
போட்டு: அவர் எனக்குச் சொன்ன விடயம்
என்னை திக்குமுக்காடச் செய்தது.


தரகர் சொன்னார்:

“சொல்லுவது லஜ்ஜை ஆனாலும் சொல்லுறன்.
பேண் வீட்டார் தம்மோடு இருக்கும் பாட்டன்
பாட்டியை சரியாகப் பார்ப்பதில்லையாம்!
வயதையும் பாராது வாய்க்கு வந்த
படி பேசுவதும் கோபம் வாற வேளை
எக்கச்சக்கமாக ஏசுவதும் சிலவேளை
கைகாலையும் நீட்டுறதும் சகஜமாம்.”

**(செங்கதிர் – அக்டோபர் 2009)**



# குழுமாடு



புதன் கிழமை திருமண ஆற்றுப்படுத்துனர் அலுவலகத்தில் அதிக சனம். பாவம் திருமண ஆற்றுப்படுத்துனர்! கருமங்களை ஆற்றுவதில் சிரமப்படுகிறார்.

பற்றாக்குறைக்கு ரெலிபோன் ஹோல் வேறு. ஹோல் மேல் ஹோல் வந்த படி. ரெலிபோனைக் கவனிப்பதா வந்த வாடிக்கையாளரை கவனிப்பதா? - திருமண ஆற்றுப்படுத்துனர் தத்தளிக்கிறார்.

ஒரு இளைஞன் விடுவிடென்று அலுவலகத்துள் உள்நுழைந்தான். வந்தவன் அமரவில்லை. ஆறுதலாக அமரவேண்டுமென்று நினைக்கவுமில்லை. தனது கையடக்கத் தொலைபேசியை முடுக்கிறான் உளறிக் கொட்டினான்.

அவஸ்தையை தாங்கமுடியாத ஆற்றுப்படுத்துனர். இளைஞனின் கையடக்கத் தொலைபேசியை செயழிழக்கச் செய்யும் படி வேண்டுகிறார்.

அவனின் அசட்டுப் பதில் அதிர்ச்சியை தந்தது. "என்ரை கரைச்சல் எனக்குத் தான் தெரியும். வட்டிக்கு கைமாறாக வேண்டிய மூதேசி காசைத் தாறானில்லை!"

(ஞானம்- ஆகஸ்ட் 2009)

வேல் அமுதன்



25

# செருக்கு



இன்று வங்கியில் எக்கச்சக்கமாக வேலை. என்னவோ தெரியாது வழமைக்கு அதிகமான வாடிக்கையாளர். வங்கி மனேஜர் சிதம்பரநாதனின் அறையுள் AC வேலை செய்தும், சிதம்பரநாதனுக்கு வியர்க்கிறது. காலை எட்டு மணிக்கே தொடங்கிய வேலை மாலை ஐந்து மணியாகியும் ஓயவில்லை. கிராமத்தவரான மனேஜர் சிதம்பரநாதன் பொறுப்பைத் தட்டிக்கழிக்கும் பேர்வழியல்ல.

இன்றைக்கெனச் சொல்லாமற் கொள்ளாமல் சிதம்பரநாதனின் வயதான பெற்றோர் மகன், மருமகளைப் பார்த்துப் போகச் சிதம்பரநாதனுடைய வீட்டுக்கு வந்துவிட்டார்கள்.

வங்கியால் வந்ததும் வராததுமாக சிதம்பரநாதன் "சாந்தி" என தனது மனைவியை அழைத்து "எனக்கும், அப்பா அம்மாவுக்கும் நல்ல தேத்தண்ணீராகப் போட்டுக் குடுங்கோ" என்றார்.

"எனக்கு அலுப்பாக இருக்கு. அவைக்கும், எனக்கும் தேநீர் போட்டு நீங்க தாங்களேன்" எனச் சாந்தி வேண்டா வெறுப்பாக சாய்நாற்காலியுள் சாய்ந்து படுத்தபடி மறுதலித்தாள். பிரபல வர்த்தகரொருவரின் ஏக மகளான சாந்திக்கு இப்படிப் பேசுவது சகஜம்.


சிதம்பநாதனுக்கு வெட்கம், துக்கமும், கோபமும் கொப்பளித்தன.

“தேநீர் நான் போட்டுக் கொண்டு வந்து தாரன்... அப்பா! அம்மா! வாங்கோ போவம்” என்றார்.

போனவர் போனவர்தான்!

அதனைத் தொடர்ந்து வந்தது சிதம்பரநாதனின் சட்டத்தரணியிடமிருந்து சாந்திக்கு மணவிலக்கு நோட்டீஸ்

(ஞானம் – ஜூன் 2009)



# இரட்டை நாக்கு



இவர் சண்முகம் மாஸ்டரை உங்களுக்கு நல்லாத் தெரியும். இந்துக் கல்லூரி தமிழ் ஆசிரியர் அவர். அவருக்கு “அதிரடிச் சண்முகம்” என்றொரு பட்டப் பெயரும் உண்டு. எந்தச் சூழ்நிலையிலும் எவரையும் எடுத்தெறிந்து பதில் சொல்லி வெட்டி வீழ்த்தும் அதிசூரத்தனம் அவருடையது.

கடந்த வாரம் மாஸ்டரின் மூத்த மகனுக்கு பொருந்தக் கூடிய சாதகக் குறிப்பு என் மூலம் கிடைத்திருந்தும் வெள்ளவத்தையில் மூன்டறை மாடி மனை கிடைக்காது எனத் தெரிந்ததும் “வீடு இல்லாத பொம்பிளைக்கு என்ன கலியாணம்” என எடுத்தெறிந்து பேசி கலியாணப் பேச்சை முறித்துப் போட்டார்.

எனக்கு ஏமாற்றம் தான் இருந்தும் மாஸ்டரின் இயல்பு சிரிப்பூட்டியதால் சிரித்துப் போட்டேன்.


“ ஏன் சிரிக்கிறியள்? மாஸ்டர் சடாரென என்னைக் கேட்டார்.

நானும் உண்மையைச் சொன்னேன். “மாஸ்டர் முந்தி உங்கட மூத்த மகளுக்குப் பதிந்த போது நல்லதொரு மாப்பிள்ளையின் சாதகம் பொருந்தி வந்து அவை சீதனம்

கேட்ட போது சீதனம் சமூகக் கொடுமை வாங்குவது பாவம் என்று சொல்லி தட்டிக் கழித்தது நினைவுக்கு வந்ததாலேயே சிரித்தனான் என்றேன்.

உண்மை மாஸ்டருக்கு உறைக்கவில்லை. உசுப்பவுமில்லை. எந்தவித அசுமாத்தமுமில்லாதவராக "அது பாருங்கோ அப்ப. இது இப்ப சூழல் வேறை" என அதிரடி பதில் தந்தார்.

**(செங்கதிர் – ஜனவரி 2009)**



# இங்கிதம்



அன்று புதன் கிழமை. பிற்பகல் ஆறு மணி. ரெலிபோன் ஹோல் அளவுக்கு அதிகமாக வந்து அலுப்புத் தரும் நேரம். சட்டத் தரணி சின்னத் தம்பி ஜாதகக் குறிப்பு ஒன்றை எடுப்பதற்கு தொலைபேசியில் தொடர்பு கொள்ளுகிறார்.

“Vel உங்கடை Reference 12Sri F504 ஜாதகக் குறிப்பை வாசிக்கிறீர்களா?
மீன ராசியிலிருந்து வாசியுங்கோ நான் குறித்துக் கொள்ளுறன்.

டிங்... டிங்... டிங்... எனது மற்றைய இரண்டு தொலைபேசிகளும் ஒரே நேரத்தில் ஒலமிடுகின்றன.

“ஐயா ஒரே ஒரு நிமிடம் பொறுத்துக் கொள்ளுங்கோ. மற்ற லைன்களில் ஹோல் வந்திட்டிது”

மற்றைய ரெலிபோன் அழைப்பாளருக்கு அடுத்த போனில் பேசிக் கொண்டிருப்பதாக சொல்லி பத்து நிமிடத்தில் மீண்டும் ஹோலை எடுக்கும் படி வேண்டுகிறேன்.

சட்டத்தரணியோடு மீண்டும் உரையாடலை தொடருங்கிறன்.


"Vel I am paying for this call" - சட்டத்தரணி துக்கத்தைத் தெரிவிக்கிறார்.

"எனக்கு இதுவும் வேணும் இன்னமும் வேணும். பெரிய மனிஷன் அவருக்கு நான் உதவவேணும் எனது அலோசனையகத்திற்கு அவராக வந்து fees pay பண்ணி சாதகக் குறிப்பை எடுக்கும் சிரமத்தைக் கொடுக்கக் கூடாது" என உதவ நினைத்ததற்குப் போதும் போதும் என வாங்கிக் கட்டி விட்டன்.


ஆனால்,

சட்டத்தரணியோ இன்னும் அதட்டுது.
"Please hurry up Vel, I have a very important work to do"

**(செங்கதிர் – மார்கழி 2008)**



# ஏற்பு



Cargills Food City யில் பால் மா, பழவகைகள், தட்டுமுட்டு சாமான்கள் முதலியவற்றால் trolly யை நிரப்பி அதனைத் தள்ளிக் கொண்டு வந்தார் தாத்தா கந்தசாமி. அவருக்குத் துணையாக அவரின் துணைவி பாட்டி வள்ளியம்மையும் வந்து கொண்டு இருந்தார்.

Cash register இல் இருந்து காசாளர் சீட்டை கிழித்துக் கொடுத்த போது, தாத்தா ஒரு கணம் திகில் அடைந்தார். ஏன் என்றால் அவரின் மணிபேஸ் வழியில் அபேஸ்சாகி விட்டது.

"How much Madam?" காசாளரை அடுத்து நின்ற இளைஞன் விசாரித்தான். தாத்தா திரும்பிப் பார்த்தார். தான் இருபதுகளில் இருந்ததை ஒத்த ஆனால் வாட்ட சாட்டமான உருவமொன்று புன்னகை பூத்த வண்ணம் நின்றது.
"Two thousand four hundred and thirty cents Sir" எனக் காசாளர் சொல்ல தனது wallet ஐ திறந்து மூவாயிரம் ரூபாவை காசாளரிடம் கொடுத்து கண்ணியமாக மீதியையும் பெற்றுக் கொண்டது.

தாத்தாவுக்கு திகைப்புக்கு மேல் திகைப்பு! இளைஞன் பார்சல்களை தானே எடுத்துக் கொண்டு பக்குவமாக தாத்தாவை ஓரமாக அழைத்து வந்து "தாத்தா நான் ரக்ஸியில் தான் வீட்டை போறன் உங்களை உங்கடை பசில்ஸ்

லேன் வீட்டடியில் விடலாம்” என்றான்.
தாத்தாவுக்கு இன்னம் பெரிய மலைப்பு.
“தம்பி நீங்க ஆர்? பணிவும் பரிவும்
வலு உச்சமாக இருக்கு” என்றார்.


“தாத்தா நான் உங்கட பேரன் ஸ்ரீமுருகன்.
உங்கடை முருகானந்தத்தின் மூத்த மகன்.
அப்பா உங்களை பல இடங்களில்
காண்பித்து உங்களை பற்றியும் நிரம்ப
சொல்லியிருக்கிறார்”

தாத்தாவுக்கு நினைவு ஐம்பத்தாறு ஆண்டுகள்
பின்நோக்கிப் பறந்தது. அந்த நாட்களில் ஒரு
நாள் “முருகானந்தம்! நீ CA எக்கவுண்டன்.
ஒரு ஏழை Accounts Assistant
பெடிச்சியை மறி பண்ண அனுமதிக்க
மாட்டன்....” என மறுப்புத் தெரிவித்ததும்:
மறுப்பை மீறி முருகானந்தம் தான் விரும்பிய
அந்தப் பெண்ணையே மணம் முடித்ததும்:
அதன் விளைவாக தாத்தா தந்தை - மகன்
உறவை துண்டித்ததும் மனத்திரையில்
பளிச்சிட்டது.

இந்த நேரம் தாத்தாவையும் பாட்டியையும்
ஏற்றிச் சென்ற ராக்ஸி பசிலஸ் லேன் தாத்தா
வீட்டு வாசலில் நின்றது.


பார்சல்களை ஸ்ரீமுருகன் தாத்தா வீட்டு
படிக்கட்டில் வைத்தான். மனமுருகிய
தாத்தா தன்னை மறந்து “உங்கட வீட்டிற்கு
நாங்கள் நேரில் வாறம் தம்பி” எனச் சொல்லி
ஸ்ரீமுருகனிடம் வீட்டு முகவரியையும்
தொலைபேசி இலக்கத்தையும் பெற்றுக்
கொண்டு பேரனின் சொக்கில் வருடி
வழி அனுப்பினார்.

(நமது தூது – நவம்பர் 2011)



# 29

## மிருகம்




இன்று ஞாயிறு. ஆவலோடு எதிர்பார்த்த கனடா ரெலிபோன் ஹோல் வந்தது. ஹோலை எடுத்த சிவாஜினி நீண்ட நேரம் தனது கணவனோடு பேசினாள். திருமணமாகி மாப்பிள்ளை கனடா பயணித்து, மூன்று மாதங்கள் ஓடி மறைந்ததால், சிவாஜினிக்குக் கணவனோடு பேசும் ஆவல் பிரவாகித்தது. பேசும்போது சிவாஜினி கண் கலங்குவதைக் கண்ணுற்ற சிவாஜினியின் தந்தை சிவலிங்கம், மகள் மகிழ்ச்சிப் பெருக்கால், உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாமல் திக்குமுக்காடுகிறாள் என்றுதான் நினைத்தார்!

"அப்பா! உங்கள் அருமை மருமகனோடு நீங்களும் பேசுங்கள்" - சிவாஜினி போனைத் தகப்பனிடம் கொடுத்தாள்.

அழைப்பை ஏற்றுக்கொண்டதற்குப் பிறகுதான், அது சந்தோஷ ஹோலல்ல - அச்சுறுத்தல் பொறி என்பது சிவலிங்கத்திற்கு வெளிச்சமானது.


"பிள்ளை குளிப்பு, முழுக்கே இல்லாமல் இருக்கிறாள். மாதமும் நாலாகுது மாப்பிள்ளை. தயவு செய்து Sponsor பண்ணி அவளைக் கனடாவுக்குக் கூப்பிடுங்கோ மாப்பிள்ளை" - சிவலிங்கம் கெஞ்சினார்.

“உடனை Sponsor பண்ணலாம்! பிரச்சினை இல்லை. ஆனால் எனது தங்கச்சிக்கு உங்கடை மகனைக் கலியாணம் செய்து வைக்க வேணும்!” - மாப்பிள்ளை போட்டது முட்டுக்கட்டையா, அதற்கு மேற்பட்ட ஒண்டா?” - சிவலிங்கம் தடுமாறுகிறார்.

அதிர்ச்சியும் ஆதங்கமும் சிவலிங்கத்திற்கு வியர்த்துக் கொட்டச் செய்தன; உடல் நடுக்கம் எடுத்தது.

“சொந்தப் பிள்ளைத் தாய்ச்சி மனைவியை எடுப்பதில் ஈனஇரக்கம் கொஞ்சமும் காட்டாத மனிஷன், மகள் கனடா போனால் சந்தோஷமாக வைத்திருப்பானா? தகுதி குறைந்த மாப்பிள்ளைக்கு பட்டதாரி பிள்ளையைக் கட்டிக் குடுத்தது வீணாய் போச்சு. அதுகும் அல்லாமல் O/L வகுப்பு பாஸ் பண்ணாத ஒருத்தற்கு Second Class Upper Electronic எஞ்சினியரை முடித்து வைக்க முடியுமா? படுபாவிப் பயல்!...” - வலையில் விழுந்து மீட்சி தெரியாத பட்சி போல் தவிக்கிறார் சிவலிங்கம்!


(ஞானம் – மார்ச் 2009)



# லாவகம்

இவன் செல்வத்தை உங்களுக்கு நல்லாகத் தெரியும். முப்பத்தெட்டு வயது வந்தும் கட்டைப் பிரம்மச்சரியாக காலம் ஓட்டியவன்.

போன விடுமுறைக்கு இவன் கொழும்பிலிருந்து ஊருக்கு வந்த போது இவனுக்கு எல்லா விதத்திலும் பொருந்தக் கூடிய முப்பத்துமூன்று வயது நிரம்பிய செல்வியை எப்படியாவது கட்டி வைக்க வேண்டும் எனப்பெடியள் நாம் சேர்ந்து முடிவு கட்டி னோம். செல்வத்தை அணுகினோம். அவன் மசியவில்லை. செல்வத்துக்கு எட்டில் சனி. சனி ஆதிக்ககாரன் சனி எதிர்த்து ஒண்டும் செய்ய முடியாது என எங்கடை ஊர் பேசிக் கொண்டது....



சனீஸ்சனோ, அவனை அடித்து, அவனை நிரந்தர முடமாக்கிய இராவணேஸ்வரனோ எவர் வந்தாலும் சமாளிக்க வேணும் என தீர்மானம் எடுத்து ஆழ்ந்து - ஆராய்ந்து ஒரு முடிவுக்கு வந்தோம்.


எமது தீர்மானம் பலித்தது. நாங்க ஜெயித்தோம்! எப்படி என அறிய ஆவலாய் இருப்பீர்கள் தானே! சொல்லுகிறேன்.

எங்களுள் எங்களைவிட சீனியரான ஒருவனைப் பிடித்தோம்.

அவன் வேறு ஆருமல்ல! ஆரூரன் - அவன்
பேச்சில் வழுவழுப்பில்லை.
சொற்செட்டும், சொற்செறிவுடனும் பேசுவான்.
செல்வாக்கும் மிக்கவன்.
அவனை செல்வத்தை அணுகி காரியத்தை
கனியப் பண்ணக் கேட்ட போது, போனான்,
வென்றான்! எப்படி என விளக்கமாக
சொல்லுகிறேன்.
அவன் செல்வத்தை கண்டு இரண்டே இரண்டு
வார்த்தைகள் சொன்னான்.
விடயம் வெய்யில் கண்ட பனித்துளி போல
இருந்த இடம் தெரியாது கரைந்து விட்டது.

ஆரூரன் செல்வத்திற்கு சொன்னது." தம்பி
செல்வம்! உனக்கு செல்வியை பேசுவதாக
கேள்விப்பட்டேன்.
செல்வியை மாத்திரமல்ல செல்வி
குடும்பத்தினர் அனைவரையும் எனக்குத்
தெரியும். நல்ல சம்பந்தம் அவை ஓமென்டால்
விடாதையுங்கோ"

(செங்கதிர் – 2009)



# சிதைவு



மாணிக்கவாசகர் தனது மனைவி செல்லம்மா வழங்கிய தேநீரை அருந்திய படி கதை அளக்கிறார்.

“கலியான மண்டபங்களை நேரில் போய் பார்த்தால் தான் நிலைமை விளங்கும். ஒவ்வொன்றும் ஒவ்வொரு தரம் ஒவ்வொரு விதம், ஒவ்வொரு விலை....”

“உதுகளுக்கு எல்லாம் வீணாக மண்டையை போட்டு குழப்பிறியள். ஒருநாள் அலுவல். ஒரு அளவு சரியெனப் பட்டால் புக் பண்ண வேண்டியது தானே.”

“அடி ஆத்தை! நீ சரியாகத்தான் சொல்லுகிறாய். இன்னும் ரண்டொரு இடம் பார்த்து போட்டு நியாயமெனப் படுவதை புக் பண்ணப் போறன்.”

கதையை நீட்டி முழக்காமல், அவ்வளவோடு நிறுத்திய மாணிக்க வாசகர் சொன்னவாறு கலியாண மண்டபம் பார்க்க புறப்படுகிறார்.

தந்தை வெளியேறியதை உறுதி செய்த அவரது மகள் செல்வம். “அம்மா கலியாண மண்டபம் ஒருநாள் அலுவல். ஆனால் எனக்கு இது நீண்ட கால வாழ்க்கை. என்னையும் ஒரு சொல்லு கேட்டுப் போட்டல்லோ கலியாண ஏற்பாடுகளை செய்ய வேணும்? ஆத்திரத்தையும் ஆட்சேபனையையும் தெளிவாக தெரியப்படுத்துகின்றாள்.

"உன்ரை நன்மைக்குத் தானே நாங்க பிரயாசைப் படுகிறம்".

"என்ர நன்மை தீமை வேறையம்மா. என்ரை கலியாணத்திற்கு நான் விரும்புகிறேனோ இல்லையோ எண்டு என்னை கேட்கிறதில்லையா?

"சரி நானே அம்மா கேட்கிறன். அந்தாளுக்கு என்ன குறை?"

"பெரிய குறை! அந்தாளின் மனப்போக்கு சரியில்லை"

"எ...ன்...ன?"


"அந்தாளின் நோக்கமே சரியில்லை, அம்மா"

"அப்படி என்ன நடந்தது?"

"அந்தாள் அடிக்கடி வந்து போகுது. கேட்காத கேள்வியைக் கேட்குது. இன்னும் பத்து வருசத்துக்கு பிள்ள பெறக் கூடாதாம். நாங்க செக்சை அனுபவிக்க வேணுமாம். அப்படி இப்படி தப்பித் தவறி கருத்தரித்தால்,கருச்சிதைவு செய்ய வேணுமாம்."

மகளின் முறைப்பாட்டை கேட்டு மௌனமான செல்லம்மா, "கல்யாண மண்டபம் இப்ப தேவையில்லை! நீங்க உடனே வீட்டுக்கு வாங்கோ!" எனக் கணவனை கையடக்கத் தொலைபேசியில் கேட்டுக் கொள்ளுகிறாள்.

(மல்லிகை – டிசம்பர் 2010)



# மறுபக்கம்

அன்று வெள்ளிக் கிழமை மாலை. நான் மயூரா அம்மன் கோயிலுக்கு போய்க் கொண்டு இருக்கிறேன்.



வழியில் அந்த Ligueur Bar. அதன் வாசலில் எனக்குச் சமயம் தமிழ் படிப்பித்த எங்கள் வாத்தியார். அவர் என்னைக் கண்டதும் ஓடோடி வந்து “எப்படிச் சுகம் தம்பி?”என விசாரிக்கின்றார்.

அன்று பாடசாலையில் நான் கண்ட வாத்தியாருக்கும் இன்று நான் கொழும்பில் சந்திக்கும் வாத்தியாருக்கும் இடையில் மலைக்கும் மடுவுக்கும் உள்ளளவு வித்தியாசம். அன்று சந்தன வாசனை இன்று மதுவாடை.

ஒரு கணம் வித்தியாசத்தை கவனித்துக் கொண்டு, “சுகத்திற்கு குறையில்லை நீங்க எப்படி?” என நானும் பதிலுக்கு குசலம் விசாரிக்கிறேன்.

“இப்ப Pension தானே தம்பி ஒரு மாதிரி காலமோடுது... வாங்க தம்பி ஒரு shot அடிப்பம்”

“இல்லை மாஸ்டர், நான் குடிப்பதில்லை” அன்று தோத்திரமொன்றை மனனம் செய்யாததற்கு நூறு முறை தோப்புக் கரணம் என்னைக் கொண்டு போட வைத்தவர்.

இன்று தான் தொப்பெனக் தலைகீழாக வீழ்ந்த நிலையில்... என்பன போன்ற சோக நினைவலைகள் மனத்திடை அலைமோத, நிலைமையை சுதாகரித்துக் கொண்டு நான் பேச்சை தொடர்ந்தேன்."என்னை மன்னித்துக் கொள்ளுங்கள்" என மன்னிப்புக் கேட்டேன்.


இந்த நேரம் எனக்கு நல்ல அறிமுகமான எங்கள் காலி வீதி Garments shop அழகிய sales girl ஒருத்தி வந்ததும் வராததுமாக, "Sir எனக்கு marriage முடிஞ்சுது. நாங்க ceremony க்குச் சொல்லிச் செய்யவில்லை..." எனச் சொல்லி கொண்டிருந்த வேளை "பரவாயில்லை, தங்கச்சி! வாழ்த்துக்கள்!" என நான் வாழ்த்துகிறேன்.

நிலை குழம்பி மனம் மயங்கி நின்ற வாத்தியார், "அ...ச்...சா... பேபி" என அப் பெண்ணின் கன்னத்தை வருடினார்.

'பளார்.... பளார்!' பலத்த அறைகள் வாத்தியாரின் கன்னத்தைப் பதம் பார்த்தன.! அவற்றை தொடர்ந்து தரிசனம் தந்தவன் அந்த அழகியின் கணவன். கைவரிசை தொடராமல் மிக, மிகச் சிரமப்பட்டு தடுத்தேன்.

வாத்தியார் எப்படி மறைந்தார், அவரின் வெறி எப்படி முறிந்தது என்பது எனக்கு இன்னம் புரியாத புதிரே!.

**(மல்லிகை – அக்டோபர் 2010)**



33

# அங்கிடுதத்தி



சுவிஸ் சிவசுப்பிரமணியம் முக்கியமாக புகைப்படம் பார்த்து சம்மதித்து தொலைபேசியிலும் மாதகாலம் சாரதாவுடன் சம்பாஷித்த நிலையில் சாரதாவை சம்பிரதாயத்திற்கு பெண் பார்க்க வருகின்றோம் என்ற சாட்டில் தனது பெற்றோருடன் முதற் தடவை சாரதா வீட்டை வந்துள்ளார்.

சாரதாவின் வீட்டார் குறிப்பாக சாரதாவின் தந்தை சாந்தலிங்கம் தனது நாலு குமரில் ஒன்று ஒருவாறு கரைசேருது என்ற சந்தோஷத்தில் மாப்பிள்ளை பகுதியினை அமோகமாக வரவேற்று உச்சி உபசாரம் செய்கின்றார்.

சாரதா முதற்தடவை மாப்பிள்ளையை நேரில் பார்க்கவுள்ளதால் அவசர அவசரமாக தனது அறையுள் தன்னை மேலதிகமாக அலங்கரித்துக் கொண்டு இருந்தாள். அந்நேரம் ஓட்டமும் நடையுமாக வந்த சாந்தலிங்கம் மாப்பிள்ளை மனம் மாறி தங்கச்சி சோபனாவை விரும்புவதாகவும் சோபனா வெளிக்கிட்டு வர வேண்டுமென ஒரு புதிரை உடைத்தார்.

சோபனா பி.ஏ. பட்டதாரி: மூத்தவள் சாரதாவை விட சோபையும் துணிச்சலும் மிக்கவள். மாப்பிள்ளை சோபனாவை தனக்கு நன்றாக பிடித்ததாக தலையசைத்தார்.


ஆனால் சோபனா தனக்கு மாப்பிள்ளையை ஒரு சொட்டும் பிடிக்கவில்லை என்பதற்கு மேலாக, அவ்விடத்தை விட்டு விறுவிறுவென எழுந்து தனதறைக்கு விரைந்து விட்டாள்.

சோபனாவை தொடர்ந்து வந்த சாந்தலிங்கம் ‘சோபா! நீங்க எங்களுக்கு நாலு குமரம்மா. ஏதாவது ஒன்றுக்காவது ஒழுங்காக கை கொடுக்க வேணும்.’ என மன்றாடினார்.

சோபனா சொன்னாள்.

“அப்பா! மாப்பிள்ளை சரியில்லை. நம்பர் வன் அங்கிடுதத்தி, அக்காவை கட்டுவதாக வாக்களித்தவர் அக்காவை விட நான் அழகென்பதால் மனம் மாறி விட்டார். நாளைக்கு என்னை விட பேரழகி ஒருத்தி சந்தித்தால் எப்படி நடப்பாரென நினைக்கிறியள்? இப்பவே ரகசியமாக சுவிஸ்காரி ஒருத்தியையும் கட்டவில்லை என்பதற்கு என்ன அத்தாட்சி? அப்பா! நாங்க வாழாவெட்டிகளாவதை விட இப்படியே இன்னும் வாழ்க்கைப் படாதிருப்பது மேல். ஒன்றை மட்டும் வலு இறுக்கமாக சொல்லுறன் சிவசுப்பிரமணியம் இனி இந்தப் பக்கம் எக்காரணம் கொண்டும் வரப்படாது! அவரை வரவழைக்கவும் கூடாது!”

**(ஞாயிறு தினக்குரல் 16.10.2011)**



# நாணயம்

Maths Master பேரம்பலத்தை உங்களுக்குத் தெரிந்திருக்கும். மிகப் பிரபலமான Tutor, படிப்பித்தலுக்கு மேலாக ஆசிரியப் பண்பைப்பேணலிலும், கண்ணியமாக நடப்பதிலும் முதலாம் தரம், நேரத்தை மதிப்பவர், குறிப்பிடும் நேரத்திற்கு மாத்திரையும் தப்பாது வருபவர்; நேரத்திற்கு வகுப்பை முடிப்பவர், படிப்பிக்கும் நேரத்தில் தேவையற்ற பேச்சுக்களுக்கு இடம் வைக்காதவர். சுருங்கச் சொன்னால், படிப்பித்தலில் Top; நல்லாசிரியருக்கு ஒரு நல்ல ஆதர்ஷம்.



உயர்நிலைக் கல்லூரியில் இதுவரை கணிதப் போதனாவாசிரியராகக் கடமையாற்றிய இவர் இப்போது தொழில் மாற்றம் பெற்று, பரீட்சைத் திணைக்களத்தில் சான்றிதழ் வழங்கும் பிரிவில் மதிப்புமிக்க உயரதிகாரியாகக் கடமையாற்றுகிறார்.

இருந்தும்,
இவர் இன்னம் தனது பிரியத்திற்குரிய ரியூஷன் கொடுக்கும் வேலையை விட்டுவிடவில்லை. தொழில் நேரத்திற்குப் பிறகு பல ரியூஷன் வகுப்புக்களை நடத்தி வருகிறார். ஒரு வர்த்தகத் தனவந்தன் வீட்டிலும் O/L மாணவனொருவனுக்கு Private class நடத்தி வருகிறார்.

கடந்த வாரம் ஒரு சம்பவம்.
Master Private Class
நடத்திக்கொண்டிருந்தவேளை அவ்விடத்திற்கு வருகை தந்த தனவந்தர் மகனின் கல்விநிலை பற்றி விசாரித்தார்.

"மகன் இன்னும் கரிசனை எடுக்க வேணும்", பேரம்பலம் மாஸ்டர் குறிப்பிட்டார்.


"O/Lஇல் கணிதத்தில் பாஸ் பண்ணுவானா?"

"சந்தேகம் தான்"

"அப்ப ஒரு வேலை செய்து தாங்கோ. தம்பி கணிதத்தில் Credit Pass எனச் செட்டிபிக்கேற் வரப் பண்ணிவிடுங்கோ. உங்கடை சிரமத்திற்கு நீங்க கேட்கும் காசை - எத்தனை லட்சமென்றாலும் சந்தோஷமாகத் தாறன்"

"யோசித்துச் சொல்றன்" என்ற மாஸ்டர் மீள அந்த தனவந்தன் வீட்டிற்கு வரவேயில்லை; தனவந்தனின் பங்களா இருந்த றோட் பக்கமே தலையும் காட்டவில்லை!

(ஞானம் – மே 2010)



# வஞ்சம்



திருமண பதிவாளர் வந்து விட்டார். சுபநேரமும் நெருங்கி விட்டது. திருமணப் பதிவாளர் முன்வேலைகளை மும்முரமாக கவனித்துக் கொண்டிருக்கின்றார்.

மணமகன் சிவபாலனுக்கு அவனின் கையடக்க தொலைபேசியில் அழைப்பு வந்தது. மறுபக்கத்தில் இருந்தவர் கடுந் தொனியில் பேசினார். "இது உனக்கு வாழ்த்தல்ல!: எச்சரிக்கை!" பீடிகை பயங்கரமாக இருந்தமையால் மாப்பிள்ளை கதிரையை விட்டெழுந்து ஒதுக்குப் புறமாக போய் கோலுக்கு காது கொடுத்தார்.

"..நான் வசந்தன். நான் சொல்வதை விளையாட்டாக எடுக்கப்படாது யாரை பதிவு செய்ய வந்தாயோ. அவள் மீரா என் காதலி. நாங்க ரண்டு பேரும் கடந்த மூன்று வருசமாக ஒருவரை ஒருவர் உயிருக்கு உயிராக காதலித்து வருகிறம். எமது காதலை கொச்சப்படுத்தாது மரியாதையாக வந்த இடத்தை விட்டு உடனடியாக தலைமறைவாகி விடு இல்லாட்டி நடப்பது வேறை!"

இது புதிரா? பூச்சாண்டியா?.. என்பதை இனங் காண மாட்டாத சிவபாலன் மீராவை தனிமையில் ஒரு கணம் தன்னைச் சந்திக்கும் படி வேண்டி - தனிமையிற் சந்தித்து - நடந்ததை விபரித்தான்:

தான் மன விருப்பமில்லாமல் மணமுடிக்கப் போவதில்லை ஆனால் வசந்தன் சொல்லுவது உண்மையென்றால் உதவக் காத்திருப்பதாக சொன்னான்.


மீரா சொன்னாள்:

“வசந்தனை எனக்கு நல்லாத் தெரியும். என்னுடன் ஒரே வகுப்பில் படித்த தறுதலை அவன். இப்ப கனடாவிலை. இப்படி இடைக்கிடை என்னையும் மிரட்டி வருகிறான்.(கண்கலங்கிய படி) ஆனால் நான் ஒரு நாளும் நம்பிக்கை கொடுக்க வில்லை. குடுக்கப் போறதுமில்லை!. அவனுக்கு வாழ்க்கைப்பட நான் இநத ஜென்மத்தில் மாத்திரமல்ல எந்த ஜென்மத்திலும் சம்மதிக்கப் போவதுமில்லை!”

சிவபாலனுக்கு மீரா மீது நம்பிக்கையும் பரிதாபமும் ஏற்பட்டது அவன் சொன்னான்;

“மீரா, நீ பயப்படாதை! நான் இருக்கிறன். வசந்தனின் மிரட்டலை handphone இல் அப்படியே save பண்ணியும் வைத்திருக்கிறன். கலியாண எழுத்து முடிந்த கையோடு பொலிஸ் ஸ்ரேஸன் போய் entry ஒன்று போடுவம்.

(மல்லிகை – ஜுலை 2010)



# தம்பட்டம்



“ஏங்கட மூத்தவனுக்குக் கலியாணம் பொருந்தி விட்டுது. பொம்பிளை பட்டதாரி ஆசிரியை. சீதனத்தை நான் கேக்கயில்லை. தாறதைத் தாங்கோ. தராவிட்டாலும் பரவாயில்லை எண்டு பொம்பிளைப் பகுதிக்கு இறுக்கமாக சொல்லிப் போட்டன்.”

இதனை எங்களுடன் வேலை செய்யும் (Cashier) கந்தையா ஒருமுறையோடு விடாது பலமுறை பெருமையாக தம்பட்டம் அடித்துப் போட்டார். நான் அவரின் நெருங்கிய நண்பன். எனக்கு மாத்திரமல்ல, எங்கடை கந்தோரிலை வேலை செய்யும் எல்லாத் தமிழ் சகோதரர்களுக்கும், அவர் நெருங்கிப் பழகும் சிங்கள, பறங்கி, முஸ்லீம் சகோதரர்களுக்கும் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டார்.

கந்தையா அண்ணை இதே வேலையாக ஓடி ஓடி கொழும்பில் வாழும் அவரின் இனம் சனம் அறிமுகமானவர்கள் ஆகிய எல்லோருக்கும் மூத்தவனுக்குக் கலியாணப் பதிவு இருபத்தோராம் தேதியென அழைப்பு விடும் வேளை அத்தோடு தான் சீதனம் கேட்கவில்லை என்ற தகவலையும் பெருமையாகப் பறை சாற்றிக் கொண்டார்.

இருபத்திரெண்டாம் திகதி காலை 9.00 மணி. கந்தோருக்கு வந்த கந்தையா அண்ணன்

வழமைக்கு மாறாக யாருடனும் எந்தவொரு கதை காரியமுமில்லை.

அதே வேளை அவர் தலை குனிந்தபடி, முகம் வழமை போலில்லை. உம் என்ற படி., அவரின் இயல்பான பரபரப்பு பறந்தடிப்பு மாயமாக மறைந்த மர்மத்தை அறிய நான் ஆவலாக அவருடன் கதை கொடுத்தேன்.


“கந்தையா அண்ணை! நேத்து கலியாண எழுத்து வெகு தடல்புடல்! ஒரு கலக்கு கலக்கிப் போட்டியள்” என்றேன் நான்.

நான் சொன்னது கந்தையா அண்ணனுக்கு கேட்டிருக்கும்! ஆனால் அவர் கதை காரியமில்லை.

“சாப்பாடு சுப்பர் அண்ணை. மண்டபம் நிறைய சனம்” என்று மீண்டும் கதையை நீட்டினேன்.

கந்தையா அண்ணன் கடுமையாக யோசிப்பது தெரிந்தது. “மணமகளுக்கு சீதனமாக முப்பது லட்சம் ரொக்கமும், ஊரில் வீடு வளவும் என இந்த திருமணத்தை பொருத்திய திருமண பொருத்துனரின் விவரக் கோவையில் தெளிவாக எழுதப்பட்டிருந்ததை வலுவாக நம்பி நாசம் போட்டேனே!” என நினைத்தவராக “சம்பந்தி பாஸ் புக்கில் ஐந்து லட்சத்தை மாத்திரம் போட்டதோடு கதையை முடிச்சுப் போட்டார்” எனச் சொல்லி பெருமூச்சு எறிந்தார்.

(மல்லிகை – ஏபரல் 2010)



# தலைகீழ்

நல்லதம்பிக்கு வயது நாற்பத்தெட்டு.
அவர் இங்கிலாந்து வாசி. சுப்பர் மார்க்கட் ஒன்றினை அங்கே திறம்பட நடத்தி வருகிறார். இருந்தும் அவர் இன்னமும் கட்டைப் பிரம்மச்சாரி. அதே நேரம் ஒழுக்கசீலன். மது, மாது பக்கம் தலை வைத்துப் படுத்தறியாதவர்.



பிரம்மச்சாரியாக இருப்பதும். பிராணனைப் பிடித்தபடி இரவு பகல் எனப் பாராது கடுமையாக அவர் உழைப்பதும், தனக்கிழைய நாலு சகோதரிகளைக் கரை சேர்ப்பதற்காகவே.

தங்கைமாரை மூத்தவர் பராமரிப்பது ஏன் என்ற கேள்வி சில சமயம் உங்களுக்குள் எழக்கூடும்....

அதுவொரு பெரிய சோகக் கதை.
1985 ஆம் ஆண்டு நல்லதம்பியின் தந்தை முத்துலிங்கம் தமது மண் ஒழுங்கையால் நடந்து பிரதான வீதியில் இறங்கி தான் போக நினைத்த இடத்திற்கு போய்க் கொண்டிருந்தார். கண்மண் தெரியாமல் வேகமாக வந்த இராணுவ வண்டி அவரின் உயிரைக் குடித்து, அவரின் குடும்பத்தை அநாதரவாளராக்கி விட்டது. அன்று தொட்ட தோஷம் நல்ல தம்பியை இங்கிலாந்து போகச் செய்து கடும் உழைப்பாளி ஆக்கி பிரம்மச்சரியம் அனுஷ்டிக்க வைத்து விட்டது.


நல்ல தம்பியின் உழைப்பின் விளைவாக இன்று அவரின் சகோதரிகள் கரை சேர்த்ததும் அல்லாமல் சுமாராகவும் சுகமாகவும் வாழ்கிறார்கள்.

கடந்த இருபத்தாறு வருட இங்கிலாந்து வாழ்வில் இரண்டே இரண்டு தடவைகள் மாத்திரம் நல்லதம்பி இலங்கைக்கு வந்து போனவர்தான்!

முதற்தடவையாக 2001 ம் ஆண்டு நல்லதம்பி கொழும்புக்கு வந்த போது இரு சகோதரிகள் மணம் முடித்தவர்களாக, மூன்று அறை அப்பார்ட்மென்ட் ஒன்றில் வசித்து வந்தனர். மற்றைய இரு சகோதரிகளும் பேராதனை பல்கலைக்கழக பட்டப்படிப்பு மாணவிகளாகி இருந்தனர். சகோதரிகளின் பிள்ளைகளுக்கு வெளிநாட்டு சொக்கலேற், ரொபி வகைகள் கொடுத்த போது “அச்சா மாமா, அச்சா மாமா” எனத் துள்ளிக் குதித்து மகிழ்ந்து சாப்பிட்டனர்.

இரண்டாம் தடவையாக இவ்வாண்டு தமது சொந்த ஊரில் திருத்தியமைக்கப்பட்டு அழகு படுத்திய தமது பரம்பரை வீட்டிற்கு முதற்தடவை வந்தபோது கொண்டு வந்தவற்றை விட பல விலை உயர்ந்த இனிப்பு வகைகளை அள்ளிக் கொண்டு வந்தார். இனிப்பு வகைகளை மருமக்களுக்கு வழங்கிய போது வரவேற்பு இல்லை. முகப்பிரதிபலிப்பும் இல்லை. ஓரிருவர் “அங்கிள் வெளிநாட்டுப் போத்தல் எதாவது கொண்டு வரவில்லையா?” எனத் துணிந்து கேட்டமை நல்லதம்பியை கதிகலங்க வைத்ததோடு தம் தியாகம் வீண் போய் விட்டது எனக் கண்கலங்கவும் வைத்து விட்டது.

(மல்லிகை - ஜுன் 2011)



# பிரதிபலன்



ஓதுவார் மாணிக்கவாசகர் தேவாரம் பாடினால் உருகாத மனமும் கசிந்து உருகும். 'அம்மையே அப்பா ஒப்பிலா மணியே அன்பினில் விளைந்த ஆரமுதே' என்ற திருவாசகத்தை அவர் பாட கண்ணீர் மல்கும் பக்தர்களை நான் கண்டிருக்கிறேன்.

அவரின் உருக்கமான பாடலை கேட்க என்றே ஒரு கூட்டம் அந்த அம்மன் கோவிலுக்கு வருவதுண்டு.

அன்று அம்மன் கோயிலிற் பகற் திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. வசந்த மண்டபம் பக்தர்களால் நிரம்பி வழிந்தது. வழமை போல அன்றும் பலரை நெக்குருதிக் கண்ணீர் சிந்த வைத்தது ஓதுவாரின் பாராயணம். நண்பகல் திருவிழா முடிவடைந்தது. முந்தியடித்துக் கொண்டு வெளியேறும் பக்தர்களுக்கு வழிவிட்டு பதனமாக வெளிக் கிளம்பி, தான் காலணியைக் கழற்றி வைத்த இடத்திற்கு வந்தார்.

அந்த இடத்தில் அவரின் காலணி இல்லை. அதற்குப் பதிலாக பழைய பீத்தற் செருப்பு சோடி கிடந்தது. அவருக்கு அழுகை வந்திடும் போலிருந்தது. அவரின் காலணியை அதாவது, புதுச் செருப்புச் சோடியை


அவர் வாங்கப் பட்டபாடு..! நிமிர முடியாத வறுமை நிமித்தம் பல வீட்டுப் படிக்கட்டு ஏறி - தலை சொறிந்து - பல்லுக் காட்டி - தப்பாமல் ஓரிரு வாரத்தில் கடனை அடைப்பேன் எனக் கால அவகாசம் கொடுத்து வாங்கிய செருப்புச் சோடி அது.

கோயில் வீதியில் காலணி விற்கும் கடைகள் இருந்தன. ஓதுவாரின் கையில் மடியில் காசு இல்லையே! கடனாக வாங்க. அவருக்கு வேறு வழியும் இல்லை. “அம்மன் தாயே நீயே துணை” என வேண்டிக் கொண்டு வீடு திரும்ப வீதியில் இறங்கினார்.

கொளுத்தும் வெயில் றோட் தீக்குளிப்புத் தளம் போல எரிந்தது.
தீக்குளிப்பு நினைவோடு நடைகட்டினார்.

றவுண்ட எபவுட் (Round about) சந்தியடியில் ஒருவன் தள்ளாடித் தள்ளாடிப் போய்க் கொண்டு இருந்தான். அவன் குடி வெறியில் நிதானம் தப்புவது தெரிந்தது. ஐயகோ! சடுதியாக - வேகமாக வந்த மோட்டார் கார் அவனைப் பந்தாடி விட்டது.
அவன் பத்தடிக்கு அப்பால் தூக்கி வீசப்பட்டான். அவனது காலிலிருந்து வழுவி விழுந்த செருப்பு சோடியை ஓதுவார் கவனித்தார்.
அது வேறு ஆருடையதுமல்ல அவர் இரந்து வாங்கிய அவரின் புதுச் செருப்பு சோடியே தான்!

**(செங்கதிர் - ஆனி 2012)**



## பவிசு

ராம் (ராமநாதன்) தம்பதி 'மார்கட்' பக்கம் வந்ததைக் கண்டிருக்க மாட்டீர்கள். மார்க்கட் பக்கம் வந்து போவதைக் காட்டிக் கொள்ள அறவே விரும்பாதவர்கள் அவர்கள். தாம் பரம்பரை மெத்தை வீட்டு மனிதர் என்பதை நிலை நிறுத்தபாடுபடுபவர்கள்.
புதுவருடக் கொண்டாட்டத்திற்கு அவர்களின் வேலையாள் ஊருக்குப் போய்விட்டதால் வேறு வழி இல்லாததால் 'மார்க்கெட்டு'க்கு அன்று அவர்களே வந்தனர்.



காய்கறி வாங்கி கூடையை நிரப்பிக் கொண்டு நடைபாதை ஓரம் வந்து கீரை வியாபாரி ஒருத்தியிடம் முளைக் கீரை வாங்கி பேரம் பேசினர்.

"முளைக்கீரை என்ன விலை?"

"அறுபது ரூபா ஐயா"

"ஏன் உவ்வளவு விலை?" "பார்த்துச் சொல்லுங்கோ"

"ஐயா ரண்டாம் பேச்சு வேண்டாம் ஐம்பத்தைந்து ரூபா தாங்கோ"

"ஐம்பது ரூபா தாரன்"

"ஐயா கீரைப்பிடியை வைச்சிட்டு போங்க"

"உன்னோடை பெரிய கரைச்சல் இந்தா ஐம்பத்தைந்து ரூபாய்"

அன்று ஞாயிறு. அந்தி நேரம்.
ராம் தம்பதி தமது இரண்டு மக்களோடு


பொழுதைப் போக்க தமது ஜீப் (Prado) வண்டியில் கடற்கரைக்கு வந்து கணிசமான நேரம் கடலோரம் நடந்து களைப்பெய்திய நிலையில் அருகே இருந்த ஹோட்டல் ஒன்றுள் நுழைந்தனர்.

தேநீரும் தீன் சுவை தின்பண்டங்களும் சுவைத்து மகிழ்ந்தனர். மேசைப் பணியாள் முனியாண்டி விலை விவரப் பட்டியலை (Bill) வழங்கியதும் ராம் பணத்தை செலுத்தினார். அம்மண்டபம் நிரம்ப பிரமுகர்களும் தெரிந்த முகங்களும் இருந்ததால் ராம் பணியாளின் தட்டுள் இனாம் (Tip) ஐந்நூறு ரூபாய் வைத்தார். வழமையை விட பெருந் தொகை என்பதால் அதனை எடுக்கப் பணியாள் முனியாண்டி தயங்கினான்.

அந்நேரம் அடுத்திருந்த மேசை ஜாடி தற்செயலாகத் தட்டுப்பட நீர் வழிந்தோடியது. வழிந்தோடும் நீரை ஒத்தி எடுத்துச் சுத்தம் செய்ய ஓடோடி வந்த துப்பரவாக்கும் பணிப்பெண் தன் பணியைப் பக்குவமாக செய்த அதே வேளை முனியாண்டியின் நிலவரத்தையும் தெரிந்து கொண்டாள்.

"முனியாண்டி ஐயா பெரிய ஆளடா. அவர் தாறதை தயங்காமல் வாங்கு" எனப் பணிப்பெண் நையாண்டியாகச் சொன்னாள். குரல் வந்த பக்கம் ராம் தம்பதி திரும்பிப் பார்த்தனர். பணிப்பெண் வேறு ஆருமல்ல! அன்று தாம் பேரம் பேசி முளைக் கீரை வாங்கிய அந்தப் பெண்ணே அவள் என்பது தெரிய வந்தது. "நீ... கீரை... வியாபாரி தானே?" ராம் தத்தளிக்க" "ஆம் ஐயா! நான் இந்த ஹோட்டல் மாலை வேளை துப்பரவாக்கும் பணிப் பெண்ணும் தான்!" என்றாள் உசாராக..!

**(செங்கதிர் – ஆவணி 2011)**



# அனாதரவு

கே.கே.எஸ் றோட் நாவலர் றோட்டை சந்திக்கும் அருகாமையில் நடைபெற்ற கார், வான் வாகன மோதலுள் சிக்குண்டு சப்பளித்து போனார் சதா (சதாசிவம்). அந்த கோரச் செய்தியை கேள்வியுற்று விழுந்தடித்து ஓடி வந்தார் அவரின் தம்பி (துங்க)ராசா.

செய்தி கிடைத்ததும் கிடைக்காததுமாக உடுத்த சாரக்கட்டும் அழுக்குப் படிந்த சேட்டுடனும் கொக்குவிலில் இருந்து யாழ்ப்பாண வைத்திய சாலைக்கு ராசா சைக்கிளில் பறந்து வந்தார்.



நடந்து கொண்டிருந்த உள்ளூர் யுத்தம் பலி கொண்டதில் ஒரு குடும்பத்தில் எஞ்சியவர் சதாவும் ராசாவும் தான். தொண்ணூறுகளின் பிற்பகுதியில் நடந்த கண்மூடித்தனமான குண்டுப் பொழிவின் விளைவாகத் தமையனாரை தவிரச் சகலரையும் இழந்த ராசாவுக்கு தந்தையாய் - தாயுமாய் - சகோதரமுமாய் அன்பு பொழிந்து ஆதரவளித்து அரவணைத்தவர் தமயன் சதா.
அதன் பெறுபேறாக இன்று ராசா ஒரு மிகப் பிரபல வர்த்தகப் பட்டதாரி ஆசிரியர்.

.....அவ்வகையான மனவலைகள் அலைமோத யாழ்.வைத்தியசாலை முன்றலில் வந்தடைந்தார் ராசா. தனது சைக்கிளை ஓரமாகச் சுவரோடு சாத்தி வைத்து

ஓட்டமும் நடையுமாக காயப்பட்டவரை பராமரிக்கும் வாட்டுகள் (Accident ward) நுழைந்தார். சுதாவின் நிலைமை மிக ஆபத்துகரமானது எனவும், அவசர அறுவை சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார் எனவும் தெரிந்து கொண்டார்.


அதே நேரம் உடனடியாக விலையுயர்ந்த மருந்து வகைகள் வெளி மருந்தகங்களில் வாங்கி வர வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட ராசா தனது சைக்கிளைச் சாய்த்தி வைத்திருந்த இடத்தை அணுகினார்.

அங்கே ராசாவின் சைக்கிள் காணப்பட வில்லை. அவசர நிமிர்த்தம் சைக்கிளை அதற்குரிய பாதுகாப்பு இடத்தில் வைக்காததும் சைக்கிளை பூட்டி சாவியை எடுத்துக் கொண்டு போகாததுமான தவறுகளின் விளைவை ராசா அனுபவித்தார்.

தன் சைக்கிளை விட தன்னை வளர்த்தெடுத்த அண்ணன் முக்கியமானவன் என உணர்ந்ததால் பத்தாயிரம் ரூபா செலவு செய்து தெரிவிக்கப்பட்ட மருந்து வகைகளை வாங்கிக் கொண்டு மீள வைத்தியசாலை வாசலை வந்தடைந்த போது தனது பிராணனைப் பறிக்கும் மற்றொரு சோகச் செய்தி ராசாவை திடுக்கிட வைத்தது.

“சதாவின் உயிர் பிரிந்து விட்டது” என்ற அதி சோகச் செய்தியே அது.

(ஞானம் – மே 2012)



# வளைதடி



வசதியான வர்த்தகர் வைத்திலிங்கம் கதிரேசன் மண்டபத்தில் தனது ஆசை மகள் வாசுகியின் திருமணத்தை ஆடம்பரமாகக் கொண்டாடிக் கொண்டிருக்கின்றார்.

தாலிகட்டி முடிந்து சபையோர் மணமக்களை வாழ்த்துவதற்கான நேரமது. கங்குகரையிலாது வந்த மக்கள் வெள்ளம் மண்டபத்தை நிரப்பி வழிந்தோடிக் கொண்டு இருந்ததால், மக்கள் வரிசையைப் பேணச் சிரமப்பட்டனர். முன் ஆசன வரிசையில் பிரமுகரோடு பிரமுகராக அமர்ந்திருந்த பண்டிதர் பரமநாதன் ஒருவாறு வரிசையில் முன்னிலையிற் சென்று, மணமக்களை மனமுவந்து வாழ்த்தி, மேடையை விட்டிறங்க எத்தனிக்கின்றார். மேடையில் இறங்கு படிக்கட்டுத் தொடக்க நிலையில் வலிந்து வாயகல சிரித்தபடி நின்றுகொண்டிருந்த வைத்திலிங்கம் தம்பதி, பண்டிதரை கைகூப்பி வணங்கி, பளபளக்கும் வெண்கல அரையடி உயர அழகிய பாவை விளக்கு ஒன்றினை அன்பளிப்பாக வழங்க முனைகின்றனர்.

"அன்பளிப்பு வேண்டாம்" - பண்டிதர் அன்பளிப்பை ஏற்கவில்லை.

"ஏன் அன்பளிப்பை மறுக்கிறியள் ஐயா" - ஆச்சரிய மேலீட்டால் வைத்திலிங்கம் கேட்டார்.

"அன்பளிப்பு ஏற்கும் உரிமை தடுக்கப்பட்டு இருக்கிறதே!"

"ஆர் தடுத்தது? நான் வழங்குவதற்கென இருக்க, தடுக்க இன்னொருவர் இருக்கிறாரா?"

"இன்னொருவரல்ல முதலாளி. தடுப்பது நீங்களே தான்!"

"என்ன நானா?!..." வைத்திலிங்கம் தடுமாறுகின்றார்.

"நீங்களே தான்! ஒருவருக்கு விசமாக இருக்குமொன்று, இன்னொருவருக்கு அமிர்தமாவதில்லை" என பதிலடி கொடுத்தபடி, பண்டிதர் தனது நாஷனல் சேட் பக்கற்றுள் மடித்து வைத்திருந்த அத்திருமண அழைப்பிதழை இழுத்தெடுத்தார். அதனை விரித்து அடிக்குறிப்பாகப் பெட்டி போட்டு தடித்த Fontல் High Light பண்ணிப் போடப்பட்டிருந்த வாசகத்தை காண்பித்தார்.

வாசகம்:-

| |
|---|
| அன்பளிப்புக்கள் ஏதும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதை அன்புடன் தெரியத் தருகின்றோம். நன்றி |

* தீட்டுபவர் மீதே திருப்பித் தாக்கும் ஆயுதம்.

**(ஞானம் – ஆகஸ்ட் 2010)**

# தறுதலை

ஒவ்வொரு ஞாயிறு மாலை மணி ஆறானதும். ஆறுமுகம் வாத்தியார் தவறாது தமது மாடி முகப்புக்கு (Balcony) வாரமலர், பிரசுரங்களும், வாக்கியப் பஞ்சாங்கமும், (Cordless) போனுமாக வந்து சாய்வு நாற்காலியுள் சாய்ந்து எட்டு மணிவரை அவருக்கு ஒரே ஒரு வேலை மணமகள் தேவை விளம்பரங்களை துருவித்துருவி ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதுதான்.



வாத்தியார் கண்டிப்பான பேர்வழி. அவரின் பிள்ளைகள் கூண்டுக் கிளிகளாக வளர்க்கப் பட்டதாலும் சீதனம் வழங்க முடியாமல் போவதாலும் ஜாதகங்கள் பொருந்தி வராததினாலும் அவரின் மக்கள் முப்பதைத் தாண்டி முதிர் கன்னிகளாக இன்னமும் காலத்தை ஓட்டுவதால் இதற்கு எப்படியும் ஒரு வழிவகை செய்ய வேண்டுமென முடிவு செய்து மேற்கூறியவாறும் இப்போது வாத்தியார் முயல்கின்றார்.

இன்றைய பிரபல வாரமலர் பத்திரிகை ஒன்றில் வெளிவந்த விளம்பரமொன்று வாத்தியாருக்கு வலு நம்பிக்கையூட்டியது. ‘மணமகன் கனடா, வயது முப்பத்தேழு, நட்சத்திரம் அத்தம், கிரகபாவம் 19, தொழில் Employment Agent. கை நிறையச் சம்பளம், சீதனம் நிர்ப்பந்தம் இல்லை என்ற அவ்விளம்பரத் தகவல்கள் வாத்தியாரின் மூத்த மகளுக்குப் பொருந்தி வர குறிப்பிட்டிருந்த தொலைபேசி நம்பரை ஆவலோடு அமுக்கினார்.

என்ன ஆச்சரியம்! மறுபக்கத்தில் சம்பந்தப்படும் மணமகனே உரையாடினார்.

“தம்பி! உங்கள் பத்திரிகை விளம்பரத்தைப் பார்த்தனான். எனக்கொரு மகள் இருக்கு விஞ்ஞான பட்டதாரி. வயது முப்பத்திநாலு. நட்சத்திரம் அனுஷம். கிரகபாவம் 50. அனுஷத்திற்கு அத்தம் உத்தம பொருத்தம். உங்கடை ஜாதக குறிப்பை எனக்கு அனுப்பி வைக்கிறியளோ”

“அனுப்பி வைக்கலாம். ஐயா ஆனால் முற்கூட்டி சில விவரங்கள் தெரிந்தாக வேண்டும்.

“கேளுங்க தம்பி. இப்பவே நான் தாறன்”

மகள் என்ன நிறம்? எப்படி தோற்றம்? மெலிவு தானா?”

“அவள் சிவப்பி, மெலிந்தவள், வடிவான பிள்ளை, உயரம் 5’5”

“இங்கிலீஸ் அறிவு எப்படி? நல்லாப் பேசுவாவா?”

“தம்பி அவள் MSc.Computer science.இங்கிலீஸ் படிச்சவள்.தம்பி நானுமொரு கேள்வி கேட்கலாமோ?”

“அவளை நீங்கள Sponsor பண்ணிக் கனடாவிற்கு கூப்பிடுவியள் தானே?”


“ஐயா, நான் கனடா Citizen. ஆனால் அவவை கனடாவுக்கு எடுக்கும் நோக்கமில்லை?”

“ஏன் தம்பி? .......”

“ஐயா நான் கனடாவில மணம் முடித்தவன் அடிக்கடி இலங்கைக்கு வந்து போறவன் வாறநேரம் Enjoy பண்ணத்தான் இந்தக் கலியாணம்.

வாத்தியார் ஐந்தும் கெட்டு அறிவும் கெட்டு உடல் வேர்த்துக் கொட்ட சுய நினைவு அற்றுப் போக தன்னை மறந்த நிலையில் வாய் “த..று..த..லை” எனக் கூப்பாடு போட்டது..

(ஞானம் – மே 2012)




43

# மோசடி

“ராசரத்தினம் ஐயாவோடை பேசலாமா?” நான் தொலைபேசியில் விசாரிக்கிறேன்.

“அவர் வீட்டில் இல்லை. ஒரு அலுவலாக வெளியில் போயிட்டார். நீங்க ஆர்? அப்பாவுக்கு என்ன சொல்ல வேணும்? ராசரத்தினத்தின் ஒரே மகள் புனிதாவின் பதிலிது.

“நான் அருணாசலம். அப்பாவின் நண்பன்”




“அங்கிள் நீங்கள் அப்பாவின் நண்பன் தான்! ஆனால் கலியாணப் பொருத்துநர். கலியாணப் பொருத்துநர் அருணாசலம் என்று அறிமுகப்படுத்தியிருக்கலாம்.”

“எப்படி தெரியும் அம்மா?”

“உங்களை தெரியாமல் ஆர் இருப்பினம்? அங்கிள் என்ன விசயமாக கோல் எடுத்தனீங்கள்?”

பால் வார்த்த மாதிரி இருந்தது எனக்கு. “அம்மா உங்கட விசயம் தான். உங்களோட நான் கதைக்கலாமே” அனுமதி கேட்கிறேன் நான்.

“ஓமோம் தாராளமாக கதைக்கலாம். சொல்லுங்கோ அங்கிள்.”

“தங்கச்சி அப்பா அம்மா அடிக்கடி தொடர்பு கொண்டு கேட்கிற சார்ட் கிடைச்சிருக்கு”

“விவரத்தை சொல்லுங்கோ அங்கிள்”

“நல்ல இடத்து சோக்கான பெடியன் அம்மா. பட்டதாரி BBM படித்தவன் Sponsor இருக்கு. கொழும்புக்கு வந்து கலியாணம் செய்வான். நல்ல பொருத்தம்....”

“எந்த இடமென்று சொல்லயில்லை?”

“அப்பா அம்மா கேட்கிற நாடு தான்.. கனடா”

“ஐயோ அங்கிள் கனடா வேண்டவே வேண்டாம். எனக்கு UK மாத்திரம் தான் வேணும்.”

“ஏன் அம்மா? அப்பா அம்மா கனடா மாத்திரம் தான் கேட்கினம். இதுவரை எத்தனையோ சோக்கான லண்டன் ஒஸ்ரேலியா சாதகங்களை வேண்டாம் எண்டிட்டினம்.”


“அங்கிள் நான் Double Degree holder. அதுகள் UK Qualifications, Bsc Information Techonology யும் CIMAயும் இன்னும் மேலே படிக்கத்தான் ஆசை. என்ரை படிப்புக்குக் கனடா சரிவராது.”

“அப்ப ஏன் அப்பா அம்மா கனடா மட்டும் தான் என அடம் பிடிக்கினம்?”


“அவை தாங்களும் கனடா போக ஆசைப்படுகினம்”

நான் புதுவகை மோசடியொன்றை இனங்காண புனிதாவின் பேச்சு உதவியது...

**(ஞானம் – டிசம்பர் 2008)**



# பரணி



பரணி நட்சத்திரத்தைப் பற்றி ஒரு பரணியே பாடி விட்டன். நான் இலக்கிய பரிச்சயமுள்ள திருமண ஆற்றுப்படுத்துநர் என்பதால் பரணி பாடுவது எனக்கு முடியாத காரியம் அல்லத் தானே!

பரணி நட்சத்திரக்காரி, படித்தவள், ஒரு Professional, நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவள், வெள்ளவத்தையில் அவள் பேரில் வீடுண்டு, கணிசமாக ரொக்கமும் கிடைக்கும் என்றும் சொல்லிப் பார்த்தேன்.

அச்சாதகத்தை எடுக்க வந்த மனுஷி மசியவே இல்லை.

என்னுடைய ஆற்றுப்படுத்துகைத் திறனை பார்த்துக் கொண்டிருந்தவர் என்னை வலுவாகப் பாராட்டினார்.
அதேவேளை அவருக்கும் பெரிய திகைப்பு "என்னைய்யா இவ்வளவு சொல்லியும் மனுஷி வேண்டாம் என்னுதே" என்றார்.

அடுத்த நாள் பிற்பகலுக்கு சிலர் Appointment எடுத்திருந்த போதும் நேரில் வந்தது ஒரேயொரு வாடிக்கையாளர் தான்.


நேற்று வந்த வாடிக்கைகாரியின் வீட்டுப்போஷனின் வாடகைக்குக் குடியமர்ந்துள்ள நபர்தான் இவர்.

சூழல் வலுவசதியாக இருந்ததால் நேற்றைய பிறபகல் நிகழ்வு குடைஞ்சு கொண்டிருந்ததால், நேற்றைய சம்பவத்தை அப்படியே சொல்லி மனுஷி மறுப்பதற்கான காரணம் எதுவாக இருக்கும் என விசாரித்தேன்.

பதில் என்னை மாத்திரமல்ல உங்களையும் திகைப்பினில் ஆழ்த்தும்.....

"மனுஷியின் மூத்த மருமகள் பரணி நட்சத்திரம்" என்றதே அது!!!

(செங்கதிர் – ஐப்பசி 2008)



# தாய்ப் பாசம்




எமது வீட்டு மின்சாரக் 'கேற்றலின்' சுருள் (Coil) எரிந்து விட்டதால், புதிய 'கேற்றல்' வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

எனது வீட்டுக்குக் கூப்பிடு தொலைவில் இருக்கும் மின்பொருள் விற்பனை நிலையத்திற்கு விரைந்தேன்.

விதம் விதமான அழகிய மின் பொருட்கள் வித்தியாசமான விலையில் அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. அவற்றின் விவரங்களையும் விலையையும் விசாரித்தேன் விற்பனையாளர் சிங்களத்தில் விளாசித் தள்ளினார். எனக்குச் சிங்களம் ஓரளவு விளங்கும்.
ஆனால் பேச்சுச் சிங்களம் கம்மி.

நான் பியகம றோட், களனியாவில் வசித்து வந்தவன் என்றாலும் அங்கே வசித்து வந்த இடம் தமிழர் குடியிருப்பு என்பதால் பேச்சு சிங்களம் பரிச்சயம் இல்லை. விற்பனையாளரின் சிங்களத்தை கிரகித்துப் பதில் சொல்ல என்னால் முடியவில்லை, திக்குமுக்காடினேன்.


விற்பனை நிலைய முதலாளி பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர். அவர் எனது தவிப்பைக் கவனித்து வாடிய முகத்துடன் நாம் நின்ற

இடத்திற்கு விரைவாக வந்தார்.
உம்மை நியமித்தது தமிழ்
வாடிக்கையாளரோடு தமிழிற் பேசவல்லவா?
சிங்களம் சரியாகத் தெரியாதவரோடு ஏனப்பா
சிங்களத்தில் வெளுத்து வாங்குகிறாய்.
என விற்பனையாளருடன் எரிந்து விழுந்தார்.


ஏச்சின் பிரதிபலன் விடயம் நேர்த்தியாக
நடந்தேறியது.

இருந்தும்
"கூலி குடுத்தும் இப்ப தமிழனைத் தமிழில் பேச
வைக்க முடியுது இல்லையே!" என்ற வருத்தம்
என்னை வலுவாக வருத்தியது.

(செங்கதிர் – தை 2012)



# இப்படியும் நடக்கிறது



இராமசாமி கனகசபையின் நீண்ட கால நண்பன். மலையகத்தில் கனகசபை எஸ்ரேற் (Estate) பாடசாலை ஒன்றில் அதிபராக கடமையாற்றிய வேளை அதே எஸ்ரேற்றிலே கிளாக்காக வேலை பார்த்தவர் இராமசாமி.

அதிபர் வெள்ளவத்தையின் எப்பாட்மென்ட (Apartment) வாங்கி குடியமர்ந்துள்ள இன்றைய நாள்களிலும் இராமசாமி அலுவலாகக் கொழும்புக்கு வரும் வேளை அதிபரையும் சந்தித்து போவது வழக்கம்.

இச் சந்திப்பு வெறுமனே நட்புக்காகத் தொடரும் ஒன்றல்ல.
கனகசபையின் வேண்டுகோளுக்கிணங்கி ஓர் உளவு நிமித்தம் வந்து போகிறார்.
உளவென்றதும் நீங்கள் ஏதோ பாரதூரமான அலுவல் சம்பந்தமானது என எண்ணிப் பயப்படவும் கூடும்! இது அப்படியான ஒன்றல்ல.
கனகசபையின் மூத்த மகள் மாலினி மலையக வைத்தியர் அந்தனியை காதலித்துக் கனகசபை குடும்பத்தினரின் விருப்பத்திற்கு மாறாக (Civil marriage) சாக மணமுடித்தவள்.
அவளின் வாழ்க்கை எப்படி அமைகிறது என்பதை கேட்டு அறிந்து கொள்வதற்காகவே!

என்றும் போல் இன்றும் கிடைத்த செய்தி எதிர் பார்த்ததற்கு எதிர்மாறானது.

அதாவது மாலினியின் வாழ்க்கை மிகவும் திருப்திகரமானது மற்றவர்களுக்கு பொறாமையும் கூட ஏற்படுத்தக் கூடிய நல்ல மாதிரி. குழந்தை குட்டிகளுடன் சந்தோஷமாக வாழ்கிறாள் என்பதே அது.

இந்நேரம் இன்னொன்று நடக்கிறது.

அதிபருக்கு மகள்மார் இரண்டு என்பது நான் முற்கூட்டியே சொல்ல மறந்தது. இரண்டாவது மகள் வாசுகி. அவளை அதிபர். பேச்சுக் கலியாணமாக சோதிடர் உத்தமத்தில் உத்தமமான பொருத்தமான உறுதி செய்யப்பட்ட பொறியியலாளர் ஒருவருக்கு கட்டி வைத்தார்.

இன்று வாசுகி தனிமையிற் தலைவிரி கோலமாக சூட்கேசும் கையுமாக கனகசபையின் வீடு தேடி வந்து நிற்கிறாள். அதிபர் 'என்ன சங்கதி' என விசனமாக வினவிய போது கிடைத்த பதில் அதிபரையோ இராமசாமியையோ மாத்திரமல்ல உங்களையும் ஆட்டம் காண வைக்கும்!


வியப்புத் தரும் வாசுகியின் பதில்.

"அந்தாளோடை வாழ ஏலாதப்பா, அந்தாள் சந்தேகப் பிராணி. எடுத்ததற்கெல்லாம் சந்தேகம். ஊரார்கள் சொந்தக்காரர் பள்ளிக் கூடத்தில சேர்ந்து படிச்சவை ஆரையாவது தனியக் கண்டாப் போச்சு கதைச்சால் போச்சு! சந்தேகம். இப்ப கடுமையாத் தண்ணீயும் போட்டிட்டு கையையும் காலையும் அடிக்கடி நீட்டிறார்.

(மல்லிகை – மார்ச் 2011)



## ஆளுமை



முருகமூர்த்தி கோயிலை அண்மித்த அவ்வூர் முச்சந்தி மூலைக் கடைதான் அந்தச் சலூன். சலூன் உரிமையாளரை உங்களுக்கு அவசியம் அறிமுகம் செய்ய வேண்டும். அவர்தான் படிக்காத மேதை கந்தசாமி.

'படிக்காத' என்னும் போது கல்லூரியோ பல்கலைக்கழகமோ படிக்கல் ஏறாதவர் என்பதுதான் கருத்து. ஆனால், வாசிப்பதிலும் அவதானிப்பதிலும் ஆழ்ந்து சிந்திப்பதிலும் உச்சம். கேள்வி ஞானம் ஜாஸ்தி.

அவர் வாய் திறந்தால் வருவது வெற்று வார்த்தைகள் அல்ல முத்துக்கள்.

கடந்த ஞயிறு பின்னேரம் எங்களது சின்னத்தம்பி முதலாளி கந்தசாமியிடம் சிகை அலங்காரம் செய்வித்துக் கொண்டு இருந்த வேளை ஒரு காரசாரமான கதையாடல் வந்து விட்டது.

குறுக்கிட்ட கந்தசாமி 'முருகன் கடவுள் எங்களை போல மனிதனல்ல.
முருகனுக்கு ரண்டு பெண்சாதி என்பது ஒரு உயர்ந்த தத்துவம். அதாவது தெய்வானை என்பது தெய்வேந்திரனின் மகள், வள்ளி என்பது குறமகள்.

அவை எதைக் குறிக்கின்றது என்றால் சைவ சமயத்தின் உயர்ச்சி தாழ்ச்சி வர்க்க பேதமில்லை கறுப்பு சிவப்பு நிற பேதமில்லை. 'பேச்சு கலியாணமும் காதற் கலியாணமும் ஏற்புடையவை என்பதையே எனத் தத்துவார்த்தமாக விளக்கினார்.


உண்மையில் நான் திகைத்துப் போனேன். கந்தசாமியா இப்படி பேசுகிறார் என மலைத்துப் போனேன். கந்தசாமி கலைஞன் மட்டுமல்ல அறிஞனும் தான் என்பது என் முடிவு.

அந்நேரம் சின்னத்தம்பி முதலாளியின் சிகை அலங்கார வேலையும் முடிவடைந்ததால் 'கந்தசாமி! தம்பி நான் எவ்வளவு தரவேணும்?' எனக் கேட்டார்.

"நூறு ரூபாய் தானே ஐயா"
"என்னடா தம்பி, எனக்குத் தலையில முடியில்லை.
வழுக்கை பக்கப் பாட்டிலை அதாவது காதடியில் கொஞ்ச மயிரடா? ஏன் இவ்வளவு காசு?"

"முதலாளி மற்றவைக்கு மளமளவென்று வெட்டலாம் உங்களுக்குத் தேடிதேடியல்லோ வெட்டினது" கந்தசாமியின் சாதுரியமான பேச்சு முதலாளியின் வாயை அடைத்து விட்டது.

(செங்கதிர் – சித்திரை 2011)




48

# நன்றி மறவாமை

ஓய்வு நிலை கணித மாஸ்டர் சிவசம்பு அவர்களுக்கு Bypass Surgery காலை பத்து மணிக்கு. அதற்கு முன்னதாக நாலு லட்சம் ரூபாய் முற்பணமும், 5 Pint Group 'A' Negative இரத்தமும் வழங்கப்பட வேண்டும் என்பது வைத்தியசாலையின் நிபந்தனை.

ஆனால், இரண்டுமே இன்னமும் வழங்கப் படவில்லை. நேரம் கலை மணி எட்டு. மாஸ்டருக்கு நாலு பிள்ளைகள். நாலும் நாலா பக்கமும் பறந்தோடி இரத்தமும், பணமும் புரட்ட முயற்சிக்கிறார்கள். ஒருவாறு இரண்டரை லட்சம் ரொக்கமும் 4 Pint இரத்தமும் ஒழுங்கு செய்யப்பட்டன.



பற்றாக்குறையை நிரவு செய்வது எப்படி?......

இரத்தக்குழாயுள் காணப்படும் பெரிய தடைகள் அறுவைச் சிகிட்சையால் உடன் அகற்றப்படாவிட்டால், மாஸ்டரின் உயிருக்கு எந்நேரமும் ஆபத்து வரலாம் என வைத்தியர் எச்சரித்ததால், பிள்ளைகளும், சிவசம்பு மாஸ்டரின் மனைவி சிவசக்தியும் விழி பிதுங்கியபடி,

சிவசக்தி தமது குலதெய்வம் நல்லூர் முருகனைக் கெஞ்சி, "அப்பனே! எனது மாங்கல்யத்திற்கு எந்த ஆபத்தும் வராமல் காப்பாற்று ஐயா!" என அழாக்குறையாக வேண்டியபடி.

காலை ஒன்பது மணி.

Chief Sister வருவது தெரிந்தது.

தாங்கள் சொல்லுவதென்ன? செய்வதென்ன? என்பன ஆருக்கும் எதுவும் தெரியவில்லை. மாஸ்டருக்கு ஆபத்தென அறிந்து, ஓடோடி வந்த ஒரு சில உற்றார் உறவினரும் கையாலாகாத்தனத்தால் கவலைப்பட்டனர்.

இந்தநிலையில், தாங்கள் அறுவைச் சிகிட்சைக்கு முழு ஆயத்தமில்லை என உண்மையைச் சொல்லுவது என இறுதி முடிவு எடுத்தாகி விட்டது.

Chief Sister சொன்னார்: "சொன்னபடி சரியாக பத்து மணிக்கு Operation. Patient ரை Theatre ருக்குக் கொண்டு போக இப்ப Stretcher வரும்"

"நாங்க இரண்டரை லட்சம் ரூபா தான் இப்ப கட்ட ஆயத்தமாக இருக்கிறம்", சிவசக்தி அழாக் குறையாகச் சொன்னாள்.

"முழுக்காசும், ரத்தமும் குடுத்தாச்சு. ஆரோ மாஸ்டரின் மாணவர்களாம். டாக்டர் கதிரவேலாம். அவை ரத்தமும் காசும் கட்டிப் போட்டினம்."

இந்நேரம் மாஸ்டரின் கல்லூரிக் கால நினைவுகள் சிவசக்திக்குப் பளிச்சிட்டன. அந்நாள்களில் சில ஏழை A/L மாணவர்களுக்கு இலவசமாக ரியூசன் சொல்லிக் கொடுத்தமையும்; தேவை ஏற்படும் வேளை போதிய நிதியுதவியும் செய்தவர் மாஸ்டர்.

இந்நேரம் தனது காரிலிருந்து இறங்கிய டாக்டர் கதிரவேலுவும், டாக்டரின் வேறு இரு நண்பர்களும் மாஸ்டரின் அறை நோக்கி மளமளவென ஓட்டமும் நடையுமாக வந்து கொண்டிருந்தார்.

(மல்லிகை – டிசம்பர் 2011)

# நிர்மூலம்



ஒரு மணித்தியால காலமாக அப்பார்ட்மென்ட் முன் மொட்டை மாடியில் மகன் சிவராசாவின் வருகைக்காகக் கால்கடுக்கக் காத்திருந்த தாய் சிவபாக்கியம் மகனின் கார் வருவதை கண்டதும் வாஞ்சை மேலீட்டால் மாடியிலிருந்து இறங்கி ஓடி வருகிறாள்.

சுவிஸ்லாந்திலிருந்து விமானமூலம் வந்திறங்கி வீடு வந்து சேர்ந்த சிவராசா ஆவலாக தான் தாய்க்கு வாங்கிக் கொடுத்த அபார்ட்மென்ட் மாடிமனையை ஒரு கணம் நிமிர்ந்து பார்த்துத் திருப்திப் பட்டு ஆறுதல் பெருமூச்சு விட்டு மறுகணம் ஆசையாக அம்..மா என அழைத்தவாறு ஓடி வருகிறான்.

தாய் மகனைக் கடைசியாகச் சந்தித்தது மார்ச் மாதம் ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்தேழாம் ஆண்டில். அந்நேரம் வலிவடக்கில் கடுமையான இராணுவ நடவடிக்கை நடந்ததால் அவஸ்தையைத் தாங்க முடியாமல் அடைக்கலம் தேடி இடம் பெயர்ந்து சிவபாக்கியம் குடும்பம் கொக்குவிலில் உறவினர் ஒருவரின் வீட்டில் தஞ்சமடைந்தது. சிவராசா தனது குடும்பத்தின் மீட்சியை நினைத்து எப்படியோ சுவிஸ்லாந்து போய் இருபத்து மூன்று வருடங்கள் கஷ்டப்பட்டு வாழ்ந்து முதற் தடவையாக இன்று தான் கொழும்பு வந்து தாயை வெள்ளவத்தையில் நேரில் சந்திக்கின்றான்.
கடந்த இரண்டு சகாப்தங்களுக்கு மேல் சிவராசா சுவிஸ்லாந்தில் நட்சத்திர ஹோட்டல் ஒன்றில் இரவு பகலென பாராது ஓரேயடியாக


ஒன்றுக்கு மேல் Shift வேலை செய்து முதல் வேலையாக வீட்டாரின் கடனடைத்து வெள்ளவத்தையில் தாய் பாதுகாப்பாக வாழ அப்பாட்மெண்ட் ஒன்று வாங்கி கொடுத்து காசும் கழஞ்சுமாக சுவிஸ் பிரசையுமாக வந்து இருக்கிறான்.

ஆனால் சிவராசா கடந்து வந்த காலப் பகுதியுள் எத்தனையோ நல்லன கெட்டன நடந்தேறி விட்டன. கேட்ட விடயமொன்று அவனது தந்தை இடம்பெயர்ந்து கொக்குவிலில் வாழ்ந்த காலத்தில் கண்மண் தெரியாமல் ஏவப்பட்ட ஷெல் ஒன்றுக்குப் பலியாகி மடிந்து போய்விட்டார். நல்ல விடயம் வேறொன்று சிவபாக்கியம் தனது தமையனின் B.A. பட்டதாரி மகளைக் கலியாணம் பேசி சம்மதம் பெற்று மணமுன்னொழுங்குகளை முடித்து சிவராசாவின் வரவுக்காக ஆவலோடு காத்துக் கொண்டிருக்கிறாள்.


அப்பாட்மெணட் வெளிவாசலை தாண்டி வந்த சிவராசா தாயை கட்டி அணைத்துத் தழுவ ஓடி வந்த வேளை .. ஐயோ! எதிர்பாராத விதமாக நாலாம் மாடி மனையின் பின் முகப்புச் சுவற் குந்தில் அழகுக்காக வைக்கப்பட்டிருந்த பூஞ்சாடி ஒன்று அந்த வீட்டுக் காரரின் தடுத்தாளியாற் சிவராசாவின் தலைமேல் விழுந்து மண்டையை நொருக்கி குருதி பாய்ந்தோடி அவனின் உயிருக்கு உலை வைத்தது.

சிவபாக்கியம் அதிர்ச்சிக்கு தாக்குப்பிடி கொடுக்கமுடியாமல் அதேநேரம் அந்த இடத்திலேயே மாண்டாள்.
பலி மேல் பலி! ஆம் ஒரு அப்பாவி குடும்பத்தின் மீளெழுச்சி அஸ்தமனமாகின்றது.

(செங்கதிர் – ஐப்பசி 2011)



# ஊமையடி



மணமகள் கூறை அணிய அழைத்துச் செல்லப்பட்டு விட்டாள். முடிந்தளவு கெதியாகச் சேலைமாற்றலும், அழகு படுத்தலும் ஒப்பனைக் கலைஞர்களால் நடைப்பெற்றுக் கொண்டு இருக்கின்றன.

மண்டபம் நிறையச் சனம். வசதியான ஒரு இடைவேளை என்பதால், ஒருவரோடு ஒருவர் பேச ஆரம்பித்து விட்டனர். பலதும் பத்தும் பேசப்படுகின்றது. வாயாடிகளின் வம்பளப்பு இப்போது எமக்குத் தேவையில்லை. முக்கியமான இருவரின் பேச்சுக்கு செவிமடுப்போம்.

ஒருவர்: "மாப்பிள்ளையின் தகப்பன் ஒரு மாதிரி மனுஷன் சுயலாபத்திற்கு எதையும் துணிந்து செய்யும். இங்கை என்ன செய்யப் போகுதோ தெரியாது. பெண்பிள்ளையின் தகப்பன்தான் பாவம்! ஒரு அப்பாவி. மாட்டுப்பட்டுக் கஷ்டப்படாமல் இருக்க கடவுள் தான் அவரைக் காப்பாற்ற வேண்டும்."

மற்றவர்: "நானும் அப்படித்தான் யோசிக்கிறேன். ஆனால் ஒண்டு சொந்த மகனின் கலியாணமல்லே. மனுஷன் கண்ணியமாக நடக்காமல் விடுமா?"

பேசிய அரட்டை பேசி முடியமுன், நடக்கக்கூடாதது நடந்து விட்டது!

மணமகனின் தகப்பன் மணமகளின் தகப்பனைத் தேடிப்பிடித்து "சம்பந்தி" ஒண்டை அவசரப்பட்டு யோசிக்காமல் கதைச்சுப் போட்டன். பிள்ளையின் பாஸ்புக்கில் பதினைந்து போட்டது போக, இன்னம் ஒரு பத்து லட்சம் நன்கொடையாகத் தரவேணும்" என்றார்.

"நான் இப்படி வரலாமென எதிர்பார்த்து ஆயத்தமாகத்தான் இருக்கிறன். எல்லாம் சரியாகத் தர வேண்டிய மாதிரித் தாறன்"
என்றார் மணமகளின் தந்தை.


அந்நேரம் மணமேடையில் தலைமைப் புரோகிதர், "மணவாட்டியை அழைச்சு வாங்கோ. முகூர்த்த நேரம் வந்திட்டுது" என ஞாபகப்படுத்தினார்.

மணமகளை அழைத்து வர தோழிகள் குழு விரைந்தது.

மணமகள் அவளின் அறையுள் இல்லை; சபை வேகமாக வெறிச்சோடுகிறது; மணமகளின் தந்தை நாசூக்கான செய்தி ஒன்றினை விட்டு, அவரும் மாயமாக மறைந்து விட்டார்.


மணமகளின் தந்தை விட்டுச் சென்ற செய்தி: "பேராசை பெரும் தரித்திரம்"

(ஞானம் – ஏப்ரல் 2011)



51


# மரண அடி



அன்று ஞாயிறு,
வெள்ளவத்தையில் இராணுவ பொலிஸ் கூட்டு வீட்டுச் சோதனை. ஆரும் வெள்ளவத்தையுள் உள்நுழையவோ வெளியேறவோ அனுமதிக்கப்படவில்லை.
அதிகாலை 8.30 மணிக்கு அமுலுக்கு வந்த தீவிர சோதனை பிற்பகல் மூன்று மணிக்கு தான் முடிவுக்கு வந்தது.

எழுத்தாளன் சங்கருக்கு பெரிய ஏக்கம்.
தனது சிறுகதை தொகுப்பு நூலினுக்குச் சங்க மண்டபத்தில் வெளியீட்டு விழா ஒழுங்கு செய்திருந்ததால் பெரும் பயம்.
மனைவியின் நகை நட்டு அடகு வைத்து ஒரு இலட்சம் ரூபாய் செலவில் அச்சுப் பதிவுச் செய்வித்த அந்த சிறுகதை தொகுப்பு நூலின் Type Set பண்ணிய தொகையாவது மீளுமா என அச்சம்.

மாலை மணி ஐந்து அரைகுறை மனத்தோடு முகம் முறிக்கும் வலுவற்ற இருபது பேர்வரை ஒருவாறு வந்து சேர்ந்தனர்.
ஒழுங்கு செய்த நாலு பேச்சாளருள் இருவர் வந்து சேர்ந்தமையால் தலைவிதியை நொந்த படி சங்கர் திட்டமிட்டபடி விழாவை நடத்தினார்.




சங்க மண்டபத்துள் பன்னிரண்டு
நூற் பிரதிகள் வேண்டா வெறுப்பாக
விற்பனையாகின.
அழாக்குறையாக சாய்ந்த தலையுடன் வீடு
வந்து சேர்ந்த சங்கர் தண்ணீரோ வெந்நீரோ
குடிக்கவில்லை.
முதல் வேலையாக விற்பனை வசூலை
கணக்கிடுகின்றார்.
ரொக்கம் மொத்தம் 3,500/= ரூபாய்
சேர்ந்திருந்தது. ஒட்டப்பட்ட பெயர் எழுதப்படாத
ஐந்து வெள்ளை மேலுறைகளையும்
உடைத்த சங்கருக்குத் தலை சுற்றியது. பொது
வைபவத்தில் கரி பூசப்பட்டதாக உணர்ந்த
சங்கர் சடாரென நாற்காலியில் சாய்ந்தார்.

மேலுறையுள் மறைத்து
வைக்கப்பட்டிருந்தவை காசல்ல!
காசளவு புடவைக்கடை பற்றுச்சீட்டுக்கள்.!!

**(செங்கதிர் – கார்த்திகை 2010)**

52

# திருப்பம்



எண்பதின் பிற்பகுதியில் உள்ளூர் யுத்தம் உக்கிரம் அடைந்ததன் விளைவாக எமது சொந்த ஊரைவிட்டு, புகலிடம் தேடி, பூனை தனது குட்டிகளைக் கௌவிக் கொண்டு இடம் விட்டு இடம் அலைவது போல் நாமும் அலைந்தோம்.

எமது புதிய குடியிருப்புக்களில் நாம் பெற்ற அனுபவம் அபாரம். அவற்றுள் வழமை போலல்லாத ஆனால், சுவாராஸ்யமான ஒன்றைச் சொல்லுகின்றேன்.

அன்று நாங்கள் குடியிருந்த வீட்டின் அயலில் ஒரு வயதான தாத்தா மூர்க்கமான பேர்வழி. மூத்திரம் கழிக்க அவர் தேர்ந்தெடுத்த இடம் எமது கேற்றடி.

எம்மிடம் வந்து போகும் உற்றார், உறவினர் எமக்கு முறைப்பாடு செய்யும் அளவு தாத்தாவின் அசட்டை அளவு கடந்து விட்டது!

ஒரு நாள், தாத்தா தனது வழமையான அலுவலைக் கச்சிதமாக முடித்த நேரம். நான் போனேன்.

"தாத்தா! எங்களுக்கு நீங்க ஒரு உதவி மறுக்காது செய்ய வேணும்,"

எனது முகத்தில் மலர்ச்சியை வலிந்து வரவழைத்தபடி, வேண்டினேன்.


"என்ன செய்ய வேணும்?" தாத்தா விசாரித்தார்.

"கேற்றடியில் மூத்திரம் கழிப்பதைத் தவிர்க்க வேணும்."

தாத்தாவுக்கு வந்தது கோபம்.
"வழி நாய்கள் பெய்யலாம். ஒரு வயதான மனிஷர்தான் பெய்யப்படாதோ!" - மறுத்துக் கேட்டார் ஒரு கேள்வி.
உள்மனச் செயற்பாடோ அன்றேல் நான் மௌனம் சாதித்தமையோ மறுகணம் அவர் அமைதியாகி "நீங்க மாரியாதையாகக் கேட்டபடியால், இனிமேல் இந்த பக்கம் வரமாட்டான்" என்றார்.

அன்றுதான் அறுதி.
அவர் அதற்குப் பிறகு அந்தப் பக்கமே வரவில்லை.

(ஞானம் - ஜனவரி 2012)



53

# மிதிகல்

ரமணன் தனது சுப்பர் மார்கட்டில் இருந்த Lindt, Celebrations, Kitkat பேன்ற தரமான சொக்கிலேற் Fruit Pastliles,Wine gums போன்ற றோல்ஸ் வகைகளையும் அள்ளிக் கட்டிக் கொண்டு தனது வீட்டிற்கு பயணமானான். தனது ஆசை மனைவி மனோகரி விரும்பும் போது விரும்பும் இனிப்பு வகைகளைச் சுவைத்து மகிழட்டும் என்ற நல்லெண்ணம் அவனுக்கு.



நேரம் இரவு பதினொரு மணி.

வீட்டில் மனோகரி இல்லை! வீடு பூராவும் தேடினான். அவளின் அசுமாத்தமே இல்லை. UKக்கு புதியவள் ஊரிலிருந்து வந்து மூன்றே மூன்று நாள். அதனுள் எங்கே போயிருப்பாள்? ஆரை விசாரிப்பது..?

சுப்பர் மார்க்கட்டில் அன்று வேலை ஜாஸ்தி உளவியல் பட்டப்படிப்பு படித்தவனாக இருந்தும் சுப்பர் மார்கட் நிர்வாகியாக - செய்யும் தொழிலே தெய்வம் என்ற உணர்வோடு மிகக் கடுமையாக உழைப்பவன் ரமணன். அன்றும் நேரம் போனது தெரியாது நீண்ட நேரம் தொழிலைக் கவனித்து விட்டு களைப்போடு வீடு திரும்பியவனுக்கு இப்படி ஒரு பேரதிர்ச்சி.


செய்வது ஏதென அறியாத அவன் சலிப்பு மீதியால் தனது சாய்வு நாற்காலியில் சாய்ந்த போது Side Cupboard மேல் ஒரு கடிதம் வைக்கப்பட்டிருந்தது கண்ணிற் பட்டது. கடிதத்தை விறுக்கென எடுத்துப் பார்த்தான்.

அன்பார்ந்த ரமணனுக்கு!

அவசர அவசரமாக இக்குறிப்பை எழுதுகிறேன். என்னை இனித் தேட வேண்டாம் நான் சேர வேண்டிய இடத்துக்கு பாதுகாப்பாக வந்து சேர்ந்துள்ளேன்.

திகைப்பைத் தருகிறேனா...? சொல்லுகிறேன்.

அநாதையான என்னை ஈன இரக்கம் சற்றும் இல்லாத எனது சித்தப்பாதான் வளர்த்தவர். என்னுடன் பல்கலைக்கழகத்தில் Computer Science படித்த மாணவனும் நானும் உயிருக்கு உயிராக காதலித்தோம். அவன் சமூகத்தால் மறுக்கப்பட்டவன் என்பதால் சித்தப்பா நான் அவனை மணமுடிக்க அனுமதிக்க வில்லை. மாறாக வலுக்கட்டாயமாக உங்களுக்கு என்னைச் செய்து வைத்தார். எனது உயிர்க் காதலன் இன்று Student விசாவில் இங்கே மேற்படிப்பு (Phd) படித்துக் கொண்டிருப்பதாலும் வழி ஒன்றும் அறியாத நான் உங்களை மணந்து - உங்கள் Sponsor இல் இங்கு வந்து இன்று மிகப் பக்குவமாக அவனுடன் இணைந்துள்ளேன்.



நான் செய்தது மேலெழுந்தமாகப் பார்க்கும் போது பாவம் - துரோகம் கொடுமை என்று கூட சொல்லலாம். ஆனால் இதை விட வேறு வழி ஏதும் அறியாத அபலை நான் என்பதால் என்னை மனதார மன்னிக்க இறைஞ்சி வேண்டுகிறேன்.

**தங்கள் உடன் பிறவாச் சகோதரி**
**மனோகரி.**

**குறிப்பு:** என்னால் ஏற்பட்ட முழுச் செலவையும் முடிந்தளவு கெதியாக தங்களுக்குச் செலுத்துவேன்.




உருக்கமான அக்கடிதத்தை படித்த ரமணனின் உள்ளம் மனோகரியின் அயரா துணிவையும் தன்னை மணந்த நேரம் முதல் இன்று வரை தாம்பத்தியத்தை தற்போதைக்கு தள்ளி வைப்போம் எனச் சொல்லித் தற்காத்து வந்தமையையும் வெகுவாக மெய்யாக மெச்சியது.

(மல்லிகை – மே 2011)

# பல்லவி



முப்பதாம் திகதி காலை பத்து மணியென்றால் முத்தம்மாவை கமலாவின் மூன்றாம் தட்டு மூன்றாம் இலக்க அப்பாட்மெண்டில் காணலாம்.

முத்தம்மா அந்த 'அப்பாட்மெண்ட்' உரிமையாளர். கமலா குடியிருப்பாளர்.

வசதியோ அல்லவோ கிரமம் தவறாது வீட்டு வாடகையைக் கட்டி விடுவாள் கமலா. இரண்டறை வீடு மாதாந்தம் இருபத்தையாயிரம் ரூபா வாடகை.

முத்தம்மா வாடகை வசூலுக்குக் கமலாவிடம் வரும் வேளை தனது மேதாவித் தனத்தைப் பறைசாற்றத் தவறுவதில்லை. அன்றும் வங்கி வட்டி வீதம் பற்றிக் கதை அளந்தாள்.

"கமலா இப்ப வங்கி வட்டி கூடியிட்டது. பன்னிரண்டு வீதம் லட்சத்திற்கு மாதா மாதம் ஆயிரம் ரூபா. இன்னொரு விடயம். ஐந்து ரூபா குடுக்கல் வாங்கலுக்கும் தவறாது 'றிசீட்' தருவாங்க பயமே இல்லை. எங்களுக்கு நல்ல பாதுகாப்பு...."

அப்படி பொருத்தமான ஒரு வாய்ப்புக்கு அது வரைகாத்துக் கொண்டிருந்த கமலா "நீங்களும் நான் தரும் வீட்டு வாடகைக்கு வங்கி போலை 'றிசீட்' தரலாம் தானே அன்ரி" என்றாள்.

முத்தம்மா ஒரு கணம் அசந்து போனாள்!

மறுகணம் நிலைமையைச் சுதாகரித்துக் கொண்டு 'கமலா என்னிலை உனக்கு நம்பிக்கை இல்லையா. நானென்ன ஏமாற்றுப் பேர்வழியா?' என்ற பல்லவியோடு நைஸ்சாக நழுவி விட்டாள்.

(செங்கதிர் – ஆவணி 2012)

# கஞ்சன்

நேற்றைய தினம் இரவு சொகுசு வானில் ஊரிலிருந்து வந்து, தனது விருந்தினராக வீட்டிற் தங்கும் மச்சான் குடும்பத்தினராற் செலவு ஏற்படாதவாறு எப்படிச் சமாளிப்பது என்பதே ஆறுமுகத்தின் இப்போதைய யோசனை.

ஆறுமுகத்தாரால் வழியா கண்டு பிடிக்க முடியாது? அடுத்த நாளைச் சமாளிக்க நல்ல வழி கண்டு பிடித்து விட்டார்!



இன்று ஞாயிற்றுக்கிழமை. தெகிவளை மிருகக்காட்சிச்சாலையைப் பார்த்தால், மதிய போசனம் இரவுச் சாப்பாடு ஆகியவற்றைத் தெகிவளையிலுள்ள தனது தங்கை கனகம்மா வீட்டில் வைத்துக் கொள்ளல் எனத் திட்டம் தீட்டப்பட்டது.

ஜனநடமாற்றம் குறைந்த - ஓரளவு தனிமையான - மட்டக்குளி தொங்கலிலுள்ள தனது பழைய வீட்டிலிருந்து, பாண் சம்பல் காலைச் சாப்பாட்டை முடித்து, முழு குடும்பத்தினரையும் சாய்த்துக் கொண்டு, 155ஆம் இலக்க பஸ்சில் தொற்றி, மிருகக்காட்சிச்சாலைக்கு வருகின்றார்.

கடந்த இரண்டு மணித்தியாலமாகக் காலுளைய மிருகக்காட்சிச்சாலையைச்


சுற்றி வந்து, பார்த்து மகிழ்ந்த போதும், களைப்பாற் குளிர்பானமோ, பொழுது போக்க நொறுக்கத் தீனோ, வாங்க ஆறுமுகம் நினைத்தும் பார்க்கவில்லை!

கனதியான மதிய போசனமும், இரவுச் சாப்பாடும் கனகம்மா வீட்டிலேயேதான்! அனைவரும் இரவுப் போசனம் முடித்து கால் நடையாகக் காலி றோட்டுக்கு வர மணி எட்டரை; பஸ் எடுத்து மட்டக்குளி வர நேரம் மணி ஒன்பதரை.

இனி நித்திரைதானே! ஒரு முழுநாள் எப்படியோ கழிந்தது என்ற சந்தோஷத்தோடு ஆறுமுகம் வீட்டுக்குக் கதவைத் திறக்க, அது தானாகத் திறந்தது! 'லயிற் சுவிச்' சைத் தேடினால், சுவிச் இருந்த இடமே தெரியவில்லை!

ஆமாம்! எரியும் பல்ப் முதற்கொண்டு தளபாடம் உட்பட அனைத்துப் பொருள் பண்டமும் காலி!; வீடு வெறுமை!; அதி நுட்பமாக வழித்துக் கட்டிய அழகான பகற்கொள்ளை ஒன்று, மிக வெற்றிகரமாக அரங்கேறியிருந்தது!

(ஞானம் – செப்டெம்பர் 2011)



# கைமாறு



முப்பத்தொன்பது வயது மூத்த மகளுக்கு சுவிஸ் மாப்பிள்ளை ஒருவர் பொருந்தி வந்தார். சூட்டோடு சூடாக கலியாணத்தையும் உடன் வைத்து மகிழ முத்துக்குமாரு முடிவு செய்தார். கலியாண செலவுக்கென வைத்திருந்த ரொக்கத்தை ஒரு அவசர தேவைக்குக் கைமாறாக ஆத்ம நண்பன் நாகராசாவுக்குக் கொடுத்தது அவருக்கு நிணைவுக்கு வர அவரை அணுகினார்.

தனது அவசர தேவையை விளக்கி "நல்ல காரியம் நாகராசா, நான் உன்னிடம் கைமாற்றாக தந்த இரண்டு லட்சத்தை தரவேணும்" என வேண்டினார்.

"மலிந்த விலைக்கு வாங்க கூடியதாக ஒரு வீடு விற்பனைக்கு வருகுது. வீட்டு உரிமையாளர் வெளிநாட்டுக்குப் போகவுள்ளார்.
இதை விட்டால் இந்த விலைக்கு இந்த மாதிரி வீடு இனி வாங்க ஏலா" என விண்ணப்பித்து - மண்டியிட்டு - மன்றாடி கைமாற்றாக முத்துக்குமாரிடம் இரண்டு லட்சம் கடன் வாங்கியதும் தோட்டக் காணியொன்று விற்பனையாகும் போல இருக்கு விற்பனையானதும் கேட்காமலே கைமாற்றுப் பணத்தைக் கட்டிடுவன் அப்படி முடியாமல் போனால் ஒருநாள் நோட்டீஸ் தந்தா போதும் காசை எப்படியும் திருப்பித் தந்திடுவன்." என வாக்களித்தமையும்

நாகராசாவுக்கு நினைவுக்கு வந்த போதும். “வாங்கின்னான் தான் ஆனால் இப்ப தர ஏலா” என முறித்துப் பதிலளித்தார்.

“அவசரம் நாகராசா! உடனை முடியாவிட்டாலும் ஒரு கிழமை அவகாசத்தில் சொன்னபடி மாறிக் கீறி வாங்கிக் கடனை கட்டிப் போடு”

“இருந்தாலோ மாற முடிந்தாலோ தருவன் தானே! இப்ப வலு கஷ்டம் முத்துக்குமாரு”

“அடே அப்பா கலியாண முகூர்த்த காரியமப்பா இது! மூத்தவளுக்கு வயதும் நாற்பது ஆகுது. வசதியாக வந்த நல்ல சம்பந்தத்தை விடப்படாது பாருங்கோ”


“முடியுமெணடாத் தானே தரலாம் நான் முடிஞ்சாற் தரன்”

“வாழ்க்கை பிரச்சனை அப்பா. வளவளப்புப் பேச்சை வளக்காதை. வாங்கின காசை எப்படியும் ஒழுங்காத் திருப்பி தந்தே ஆக வேணும்”

“தராட்டி என்ன செய்வாய்”.. முடிஞ்சால் செய்ய வேண்டியதைச் செய். போலிஸ்க்கு போகப் போறியா போ!”

நாகராசாவின் பேச்சின் போக்கு மாறுவதும் வாக்கு நாணயம் சிதைவதையும் தாங்கி கொள்ள மாட்டாத முத்துக்குமாரு திகைப்புக்கும் பலத்த அதிர்ச்சிக்கும் ஆளானார்.

(மல்லிகை – ஏப்ரல் 2011)



## மேல்பூச்சு



அலுவலாகக் கொழும்புக்கு வரும் வேளைகளில் சில நேரங்களில் சொல்லியும் அதிகப் படியாக சொல்லாமலும் எம்மிடம் வந்து - சில நாட் தங்கி - எம் விருந்தோம்பலை சுவைத்துப் போகும் நண்பன் விசு (விசுவலிங்கம்.)

நாம் வழங்கும் ராஜ மரியாதை ராஜ உபசரணையை அனுபவித்து வந்த விசு வரும் வேளைகளில் “நீங்க ஒரு தடவை எண்டாலும் கண்டிக்கு வாங்களேன். நான் அங்கை வசதியாக இருக்கிறன். வீட்டில் பெரிய அறை எனக்கு. இணைந்த குளியலறை இருக்கு. வசதியாக வந்து ரண்டு மூண்டு நாளென்றாலும் நிண்டு - என்னுடன் சாப்பிட்டுப் போகலாம். நான் இருக்கும் வீட்டிலேதான் சாப்பாடும் ஒரு வித கஷ்டமும் ஒருத்தருக்கும் இல்லை” என்றெல்லாம் சொல்லுவது உண்டு.


தை மாதம் பள்ளிக் கூட விடுமுறைக்குத் தனது தாயைப் பார்க்க எமது மகள் தனது குடும்பத்தோடு யாழ்ப்பாணத்திலிருந்து வந்து எம்முடன் தங்கினாள்.

உங்களுக்குக் கதை சொல்லும் ஆர்வத்தில் ஒன்றை சொல்லத் தவறி விட்டேன்.
எனது மனைவி ஒரு பாரிய நோயாளி.
அதாவது அவளைப் பராமரிக்க ஒருவராவது அவளோடு நின்றாக வேண்டும்.
மகள் குடும்பம் கொழும்புக்கு வந்தமையாலும்

அந்நேரம் நானும் ஒரு அவசர அலுவலாக கண்டிக்குப் போக வேண்டி வந்தமையாலும் கண்டிக்குப் போக முடிவு செய்தேன். பயணிக்க முன் தொலைபேசி மூலம் விசுவுக்கு நான் கொழும்புக் கோட்டையில் இருந்து அதிகாலை உடரட்ட மெனிகேவில் வருவதாகவும் கண்டி றயில்வே ஸ்ரேஸனில் என்னைச் சந்திக்கும் படியும் கேட்டிருந்தேன். “மிக்க சந்தோஷம், வாங்கோ, வாங்கோ” என்றான் அவன்.

அறிவித்தபடி கண்டி றயில்வே ஸ்ரேஸனில் நண்பகல் இறங்கிய எனக்கு ஓர் அதிர்ச்சி.! விசு அந்தப் பக்கமே தலை காட்டவில்லை. அவனின் போடிங் முகவரி தெரிந்ததால் கஷ்டப்பட்டு வாடகை கார் பிடித்து அவனின் இருப்பிடத்திற்கு ஒருவாறு போய் சேர்ந்ததும் இன்னொரு அதிர்ச்சி! விசு வீட்டில் இல்லை. அவசர அலுவலாக நுவரேலியா போய் விட்டதாகச் செய்தி கிடைத்தது. மேலும் ஒரு அதிர்ச்சி! விசுவின் அறையுள் விருந்தினர் தங்கும் வசதி இல்லை. அவனது அறை அவனோடு பல்கலைக்கழகப் பட்டப் படிப்பு மாணவன் ஒருவரும் பங்கிட்டு இருப்பதாகவும் தகவல் கிடைத்தது. அதே நேரம் பட்டப்படிப்பு மாணவன் அறையைப் பூட்டிப் போட்டுப் பல்கலைகழகம் போய் விட்டதாக தெரிய வந்தது.

ஒரு கணம் நான் ஆடிப் போனேன். மறுகணம் நின்று ஆழமாக யோசித்தேன். விசு அசல் புளுகி. கண்டிப் பக்கம் வரவே மாட்டேன் என நினைத்து என்னைப் போலிக்கு வரவழைத்தமை அண்டப் புளுகு, புளுகுணி விரித்த வலையில் நான் முறையாக மாட்டுப் பட்டமை வெள்ளிடைமலை.



# பாவச் சொத்து

பொதுச் சந்தைக்கு எதிராக நடைபாதை ஓரத்தில் மர நிழலில் இருந்து சப்பாத்து திருத்தும் வேலை (Shoe mending) செய்து கொண்டிருந்த தொழிலாளியிடம் கட்டறுந்த எனது காலணியைக் (Pump shoe) கொடுத்து அவர் அதனைத் தைத்துத் தரும் வரை காத்துக் கொண்டிருந்தேன்.



தொழிலாளி அக்கறையாக சப்பாத்தைத் தைத்துக் கொண்டிருந்தார்.

அவரின் மூலதனம் ஒரு சாக்கு விரிப்பும் பழைய தகரப் பெட்டியும் தான்! தகரப் பெட்டியுள் இருந்தவை தொழில் தொடர்பான ஆயுதங்கள் ஆணிகள் ஊசிகள் பசைப்பேணிகள் நூற் பந்துகள்.
தகரப் பெட்டியின் மூடியின் உள் பக்கத்தில் முருகப் பெருமானின் படம் ஒட்டப் பட்டிருந்தது. பெட்டியின் ஒரு மூலையுள் வெற்றிலை பாக்கு ஒரு கடதாசியுள் சுருட்டி வைக்கப்பட்டு இருந்தது. வேண்டிய நேரம் சப்ப, சோர்வைப் போக்க.

இந்த நடமாடும் ஏழைத் தொழிலாளி தொழிற்படும் அழகைப் பார்த்து ரசித்துக் கொண்டு நின்ற எனக்கு “இந்தாங்க ஐயா செருப்பு” என அவர் சொன்ன போது எனது நிஷ்டை கலைந்தது. “நான் எவ்வளவு தர வேணும்” எனக் கேட்டேன். “முப்பத்தைந்து ரூபா ஐயா” என்றார் தொழிலாளி.

சப்பாத்தை வாங்கிய நான் எனது மணிபர்ஸை திறந்து ஐம்பது ரூபாய் நோட்டை எடுத்து கொடுத்த போது எனது பேஸ்சுள் ஓர்


ஆயிரம் ரூபாய் இல்லாதது தெரிய வந்தது. அந்தத் தொழிலாளியிடம் வருவதற்கு முன் பலசரக்குக் கடை ஒன்றுக்குப் போயிருந்தேன். அந்தப் பலசரக்குக் கடையில் எண்ணூற்று ஐம்பது ரூபாய்க்குச் சாமான் வாங்கி இரண்டாயிரம் ரூபாய் கொடுத்ததும் நினைவுக்கு வந்தது. கடைக்காரன் மீதிப் பணமாக நூற்று ஐம்பது மாத்திரம் தந்தமை அப்போது தான் மனதில் பளிச்சிட்டது.

அன்று காசு தட்டுப்பாட்டால் ஆபத்துக் கால தேவைக்கென பணப் பெட்டியுள் பதுக்கி வைத்திருந்த காசில் மூன்று இரண்டாயிரம் ரூபாவையும் மேலதிகமாக கொஞ்சம் சில்லறைக் காசையும் எடுத்துக் கொண்டு வீட்டிலிருந்து வந்தமை நினைவுக்கு வர அந்தப் பலசரக்குக் கடை நோக்கி விரைந்தேன். அந்நேரம் “ஐயா ஐயா” எனக் கூப்பிட்ட படி சப்பாத்து திருத்தும் தொழிலாளி என்னைத் தொடர்ந்து ஓடோடி வந்தார் “ஐயா, மீதி பதினைந்து ரூபாவை வாங்க மறந்து போனீங்க” எனச் சொல்லி பக்குவமாக மீதியை தந்தார்.

அந்த பலசரக்கு கடை முதலாளியிடம் போய் நான் விசாரித்த போது நான் ஆயிரம் ரூபாய் மாத்திரம் தந்ததாக பச்சைப் பொய் சொல்லி தான் மீதியை சரியாக செலுத்தி இருந்ததாகவும் அடம்பிடித்தான்.

என் மணி பேர்ஸ்க்குள் ஆயிரம் ரூபாய் நோட்டே அன்று இருந்ததில்லை என்பது நினைவுக்கு வர “பாவி நான் வலு இழந்த முதியவர் என்றும் இரங்காது என்னை முறையாக ஏமாற்றி விட்டானே”என என் மனம் நொந்தது.

(செங்கதிர்– ஆடி 2011)



# அத்து மீறல்

ஆசிரியை சிந்தாவின் மகப்பேறு அறுவைச் சிகிச்சை (Ceasarian Surgery).

வீட்டைக் கவனிக்க சிந்தாவின் கணவர் தரகர் ஒருவரின் உதவி பெற்று பெண் ஒருத்தியை வேலைக்கு அமர்த்தினார்.



ஒரு சில நாட்கள் பிரச்சனை ஒன்றும் இல்லை. அதன் பின் ஒரே பிரச்சனை. "பள்ளிக்கூடம் முடிந்து என்ரை மோன் களைச்சுப் போய் பசியோடை இஞ்சை வந்திட்டன் அம்மா. பாவம் ஆக்கிறதை மிஞ்சி வீணே கொட்டுறம். அதை அவனுக்குக் குடுக்கட்டா?" எனத் தொடங்கிய விருந்துபசாரம், கேள்வியே இல்லாமல் அடுத்த மகன். அவர்களைத் தொடர்ந்து அவர்களின் தகப்பன் என நீட்சியானது. தாங்க முடியாத அரியண்டம். பணிப் பெண்ணின் புருஷன் நிறைவெறியிலும் நிதானம் தப்பிய நிலையிலும் வரத் தொடங்கிவிட்டான்....


சிந்தாவுக்கு உடல் உபாதையை விட வீட்டுப் புதுச் சூழல் கொடுத்த உபத்திரம் ஜாஸ்தி.

மாத இறுதி நாள். சிந்தா கட்டிலால் கவனமாக மெதுவாக இறங்கி

மெல்ல மெல்ல நடந்து வந்து "தங்கச்சி இதுவரை நாளும் செய்த உதவி போதும் இனி நான் சமாளிப்பன் நாளையோடை நீ வரவேண்டாம்" எனச் சொல்லி கணக்கை முடித்து பணிப் பெண்ணைப் பணிவாக வழியனுப்பி வைத்தாள்.

பணிப்பெண் படலையைத் தாண்டியதும் நல்ல ஒழுங்கமைப்பைக் கொண்ட நவீன முறைமையில் இயங்கும் ஹோம் நேசிங் (Home Nursing) நிறுவனம் ஒன்றினுக்கு தொலைபேசியில் தனக்கு அவசரமாக நேர்ஸ் ஒருத்தியை அனுப்பி வைத்து உதவ சிந்தா வேண்டிக் கொண்டாள்.

(ஞானம் – ஆகஸ்ட் 2012)



# பேரழிவு

சபேசன் படிப்பில் மகா கெட்டி.

அவனது கல்லூரியில் அவன் வரலாறு படைத்தவன். வேறு யாரும் பெற்றிருக்காத பெறுபேறு O/L சோதனையில் பெற்றிருந்தான். அவன் எழுதிய அத்தனை பாடங்களிலும் அவனுக்கு விஷேட சித்தி.

கல்லூரி ஸ்தாபகர் தின விழாவில் கல்லூரி விருது வழங்கப்பட்டது. கல்லூரி அதிபர் தமது ஆண்டு அறிக்கையில் அவனை வெகுவாக வியந்து பதிவு செய்திருந்தார்.



சபேசனின் தந்தை சிவப்பிரகாசம். தாய் சியாமளா. இருவரும் மருந்தாளர் (Pharmacists) சபேசனின் சாதனையை தொடர்ந்து போனவிடம் எங்கும் அவர்களுக்கு நல்ல வரவேற்பு மரியாதை.

அடுத்த பொதுப் போட்டி சோதனையான A/Lஇல் மகன் சாதனை நிலை நாட்ட வேண்டி தம்பதி தம்மால் தேடிக் கொடுக்கக் கூடிய வசதிகள் அனைத்தையும் சபேசனுக்குத் தேடிக் கொடுத்தனர்.

சபேசனுக்குச் சௌகரியமான சௌந்தரியம் மிக்க தனியறை. அலுமாரிகள் முட்டி வழிய

நூல்கள், விலை ஜாஸ்தியான கையடக்க தொலைபேசி, சகல இணைப்புகளுடனான நவீன கணணி. இன்னம் என்ன வாங்க வேண்டுமோ அத்தனையும் வாங்கி கொடுத்து ஊக்குவித்தனர்.


அன்று வெள்ளிக்கிழமை.இரவு களைப்பு மிகுதியால் சபேசன் நேரத்தோடு கண்ணயர்ந்து விட்டான்.

மின் விசிறி நீண்ட நேரம் வேலை செய்த படி. மின் விளக்குகள் எரிந்தபடி. “சாதனை புரியப் பிறந்த எங்கடை மகன்” என்ற பெருமித உணர்வோடு மங்கலான மின் விளக்கை மாத்திரம் போட்டு உதவுவோம் என்ற நல்லெண்ணத்தில் சபேசன் அறையுள் சிவப்பிரகாசம் நுழைந்தார்.
சபேசன் தனது கையடக்கத் தொலைபேசியில் என்ன சேகரித்து வைத்திருக்கிறான் என்ற அவாவால் அவனது தொலைபேசி பட்டனை அமுக்கினார்.

திகைத்துப் போனார் சிவப்பிரகாசம். அவருக்குத் தலை சுற்றியது.....

சபேசனின் கையடக்கத் தொலைபேசியில் பச்சை படு மோச விரச உணர்வைச் சுண்டி இழுக்கும் ஆபாசக் காட்சிகள்..

**(ஞாயிறு தினக்குரல் – 07.10.2012)**



# தீர்வு



ஆசிரியர் அகிலா பாடசாலைக்குப் போக அந்தரப்பட்டுக் கொண்டிருந்தாள். அகிலாவின் அவசரத்தை அக்கறைப்படுத்தாத அவளின் மாமி செல்லம்மா, “அகிலா, ரண்டொரு சாமான் அவசரம். அதனை வாங்கித் தந்திட்டு ஸ்கூலுக்கு போ பிள்ளை” என்றாள்.

அகிலாவைப் போல் அவசரப்பட்டுக் கொண்டிருந்த அவளது கணவன் வங்கியாளன் கணேசன் “அம்மா இண்டைக்கு அகிலாவை மினக்கெடுத்தப் படாது. அவவின் பாடசாலை மதிப்பீட்டுக்கு ரீம் வருது. அகிலா நேரத்திற்கு ஸ்கூலுக்குப் போகட்டும் நான் சாமானை வாங்கித் தாறன்.” எனச் சொல்லி சொன்னபடி கேட்ட தட்டுமுட்டுச் சாமான்களை வாங்கி வந்து கொடுத்தான்.

அப்படி அகிலாவை கொண்டு செல்லம்மா வேலை செய்விக்க முயற்சித்தது அன்றைய தினம் மட்டும் தான் அல்ல நாளாந்தம் அப்படியே.

ஒரு சில வேலையுமல்ல சமையல் துப்பரவு செய்தல் துணிமணி துவைத்தல் தையல் வேலை என வேலை ஜாஸ்தி.


செல்லம்மாவுக்கு மகள்மார் மூவர்.
மகன் கணேசன் மட்டும்.
மகள்மாருள் மூத்தவள் பட்டப்படிப்பு மற்றைய
இருவரும் வீட்டோடை.

தாய் தமது மகள்மாரைப் பத்திரமாக வைத்துக்
கொண்டு மருமகளைப் போடுதடி ஆக்குவது
கணேசனுக்கு அடியோடு பிடிக்க வில்லை.
எப்படியும் துரித நடவடிக்கை எடுத்து
மனைவியை மீட்க முடிவு செய்தான்.

முயன்றால் முடியாதது என்ன? கணேசனும்
கடும் முயற்சி எடுத்தான். முடிந்தது!

அதனைக் கணேசன் தனது தாய்க்கு
அறிவித்தான்.


“அகிலாவின்ரை ஸ்கூலடியில் ஒரு வீட்டார்
வெளிநாடு போகினம் அம்மா.
தங்கடை வீட்டை நம்பிக்கையான பார்ட்டிக்கு
குடுத்துப் போக நினைச்சு அகிலாவை
வேணுமெண்டால் அங்கை
வந்து இருக்கட்டாம்.
இப்படி நல்ல இடத்தில் வீடு
தேடுவது கஷ்டம் அம்மா.
நாங்க நாளைக்கே அங்க இருக்கப் போறம்.”



# புல்லுருவி

கணக்குப்பிள்ளை நாகலிங்கம் வீட்டில் இன்றும் மாப்பிள்ளை கேட்டு ஒரு பகுதியினா் வந்திருக்கிறாா்கள்.

மணமகள் ஒரு டாக்டா். பேர் சோபிதா. இருபத்தொன்பது வயது. வலு எடுப்பான தோற்றம். சிவப்பி, சாதகங்கள் உத்தமமாகப் பொருந்துகின்றன எனத் தெரிவிக்கப்பட்டது.



இருந்தும் என்றும் போல இன்றும் கணக்குப்பிள்ளை இந்த Proposalலை ஏற்றுக் கொள்ளவில்லை.

அவர் முன்வைத்த மறுப்பு வலுவற்றது. சோபிதா இன்னம் நிறைவான டாக்டா ஆகவில்லை. Intern முடியவில்லை. படிப்பு முழுமை பெற்றதும் கலியாணம் பற்றி பேசலாம் என்பதே கணக்குப்பிள்ளையின் சமாளிப்பு.

இந்நேரம் இன்னொரு உருவம் அவ்விடத்திற்கு வந்து சேருகின்றது, இது வேறு யாருமல்ல கணக்குப்பிள்ளையின் ஒரே மகன் Accountant மனோகரன். வந்தவர் 'என்ன விடயம்' யார் பெண் பிள்ளை' என விசாரிக்கின்றார்.


விவரம் தெரிந்ததும் சோபிதாவின்
புகைப்படங்களையும் பார்வையிடுகின்றார்
“எனக்குப் பெம்பிளையை நல்லாகப்
பிடித்திருக்கு நான் தேடுவதும் இப்படியான
Proposalலைத் தான். என மனோகரன்
அறுதியாக தெரிவிக்கின்றார்.

நாகலிங்கத்தின் நாடி விழுந்தது.
உதடு மட்டும் சிரித்தது.
தனது நீண்ட கால இரகசியத் திட்டம் தவிடு
பொடியானதே என அவரது உள்ளம் வாடியது.

இருந்தாலும்,
பட்டறிவுக் கணக்குப்பிள்ளையாகிய தான்
முதற் தடவையாக தோல்வி போனது ஒரு
பல்கலைக்கழக பட்டயமும் பெற்ற
தான் பெற்ற பிள்ளையிடம் தானே என மனம்
சமாதானத்தை தேடிக் கொண்டது!

மனோகரன் தனது நீண்ட கால சந்தேகம்
தீர்ந்தது தன் உழைப்பைக் கோதிருக்கச்
சுளையை உறிஞ்சி சுவைத்த தன் தந்தை
கடைசியாக கையும் மெய்யுமாகப் பிடிபட்டு
Surrender ராகியமையை எண்ணி ஆறுதல்
பெரு மூச்சு எறிந்தான்.

**(செங்கதிர்- சித்திரை 2010)**



# கானல்

முத்தையாவை உங்களுக்குத் தெரியாமல் இருக்காது. அவர் நகரசபை நூலகத்தில் நூலகராகப் பணிபுரிபவர்.

நீண்ட காலம் முத்தையா நல்ல சூழலில் தொழில் செய்வதால் அவருக்கு நற்பண்புகள் ஜாஸ்தி.

இளவயதில் தனது தாயை இழந்த துரதிர்ஷ்டவாதி. அவரின் ஒரே ஒருபிள்ளை மகன் மூர்த்தி அவனை நல்லாக்கும் நோக்கில் படாத பாடு பட்டு வளர்த்து பட்டினி கிடந்தும் நொந்தும் கடன்பட்டும் எண்ணியவாறு கணக்கியலாளராக ஆக்கியுள்ளார்.



மூர்த்திக்கு வயது வந்ததும் பிரபல குடும்பம் ஒன்றில் மணம் முடித்தும் வைத்தார்.

மூர்த்தியின் மாமனைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டு இருப்பீர்கள்.
அவர் தான் வாரி வழங்கும் வள்ளலாகச் சொல்லப்படும் தனவந்தர் மாரிமுத்து (மாரி). 'கொடுத்துச் சிவந்த கரம்' பாரி மாத்திரம் அல்ல வள்ளாண்மைக்கு மாரியும் உண்டு என்றெல்லாம் சங்கங்கள் அவருக்குப் புகழாரம் சூட்டுவதுண்டு. பத்திரிகைகள் முக்கியத்துவம் கொடுத்து அடிக்கடி சிலாகித்து எழுதுவதும் உண்டு.

மூர்த்தி குடும்பம் தமது வளமான எதிர்காலத்தை எதிர்பார்த்து வீட்டாரின்

ஆசியுடன் அவுஸ்திரேலியாவுக்குக்
குடிபெயர்ந்து, அந்நாட்டில் மூர்த்தி வசதியாக
உயர் தொழில் தேடிட CPA கணக்கியல்
கற்கின்றான்.


அண்மையில் சடுதியாக முத்தையா
நோய்வாய்பட்டார்.
கடும் நெஞ்சு வலி. டெல்மன் வைத்தியசாலை
அவரை உயிர் ஆபத்திலிருந்து காப்பாற்ற
உடனடியாக அறுவைச் சிகிச்சை செய்தாக
வேண்டுமென அறிவித்தது.
பணரீதியாக நிலைமையை எதிர்கொள்ள
முத்தையாவால் முடியவில்லை.
அவரின் நினைவில் பளிச்சிட்டவர் அவரின்
சம்பந்தி மாரி மாத்திரமே!

சம்பந்தியோடு தொலைபேசியில் தொடர்பு
கொண்டு இக்கட்டு நிலைமையை
விளக்கினார். ‘வாங்கோ சம்பந்தி என்னால்
முடிந்ததைத் தாறன்’ என்றார் மாரி.


மன ஆறுதலோடு சம்பந்தியின் மாளிகைக்கு
போனார் முத்தையா.
மாரியின் மனைவி “ஐயா இப்பதான் அவசர
அலுவலாக வெளியே போனவர்.
மறக்காமல் நீங்க வந்ததாக அவரிடம்
சொல்றன்” என்றாள்.
நாடி விழுந்தது முத்தையாவுக்கு.

ஆனால்,
முத்தையா சம்பந்தியின் மாளிகையிலிருந்து
திரும்பியதும் மேல் மாடி
படுக்கையறையிலிருந்து வள்ளல் பெருந்தகை
மாரி ஐயா மெல்ல மெல்ல கீழே இறங்கினார்.

**(ஞாயிறு தினக்குரல் – 27.01.2013)**



# பச்சோந்தி



ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்திமூன்றாம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தலைநகரில் இனக்கலவரம் வெடித்ததால் தமிழர் தமது தாயகம் நோக்கி ஓடிப் போகிட வேண்டி வந்தது.

தலைநகரில் இருந்து 'பசிவிக் ஓசன்' சரக்குக் கப்பலின் ஒரே தளத்தில் இருந்து பயணித்த அருணாசலமும் அம்பலமும் அப்பயணத்தைத் தொடர்ந்து அந்நியோன்யம் ஆகினர்.

ஆயிரத்து தொளாயிரத்து எண்பத்துஏழாம் ஆண்டு ஈழப் போர் உக்கிரமானதால் வலி வடக்கு வாசியான அருணாசலம் திரும்பவும் இடம்பெயர்வுக்கு ஆளானார்.
பாதுகாப்பு தேடி அவர் பெரும் சிரமத்தின் மத்தியில் ஊர் ஊராக அலைய வேண்டிய நிலை வந்தது.

அலைச்சல் காலத்தில் மீள அம்பலத்தைச் சந்திக்கவும் நேர்ந்தது. அக்காலத்தில் அம்பலம் கிராம மட்டத்தில் முக்கியஸ்தன்.
பெரிய இயக்கத்தின் தூண்.
'எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே. - அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே.


அவர் சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே..

என்பன போன்ற பாரதியார் பாடல்களை உணர்ச்சி பொங்கும்படி பாடி மக்களைத் தட்டி எழுப்பிய பீரங்கிப் பேச்சாளன். அது பழைய கதை....

கடந்த வாரம் தற் செயலாக தலைநகரில் அருணாசலம் அம்பலத்தை சந்தித்த போது 'அம்பலம் எப்படி இருக்கிறாய். இப்ப எங்க?... எனக் குசலம் விசாரித்தான்.

அம்பலம் தான் ஆயிரத்து தொளாயிரத்து தொண்ணூற்று ஐந்தே கனடா போனதாகவும் அங்கே ஒரு வெள்ளைக்காரியைக் கட்டினதாகவும் ஒரு பெண்பிள்ளையும் இருக்கிறதாகவும் மிகச் சர்வ சாதாரணமாகவும் சந்தோஷமாகவும் சொன்னான்.

(செங்கதிர்– சித்திரை 2010)



# உறுத்தல்

"அண்ணை", "அண்ணை," அடுத்தறை சலரோக நோயாளி என்னைக் கூப்பிடுகிறார். நான் ஓடிப் போறன். "என்ன ஐயா? என்ன செய்யுது, என்ன வேணும்" விசாரிக்கிறன்.

"அண்ணை Sugar Level குறைந்த மாதிரி இருக்கு தலையிக்கை ஏதோ செய்யுது. கழுத்தடி வேர்க்குது"..



நான் Call Bell லை அமுக்கி அவ்வைத்தியசாலை நேர்சை வரச் செய்து உடன் சிகிச்சை வழங்கிட ஏற்பாடு செய்யிறன்.

ஏற்றிய ஊசி மருந்தோடை அந்த நோயாளி நித்திரையாகிப் போனார்.

அவருக்கு வயது அறுபது இருக்கும். அவர் ஒரு குடும்பஸ்தன். மனைவி தவறி விட்டார். இரண்டு ஆண் பிள்ளைகள். உடன் பிறப்புகள் இரண்டு ஆண்களும் ஒரு பெண்ணும். ஆனால் ஆரும் அவரில் நேர்மையாக அக்கறை காட்டுவதாக தெரியவில்லை.


அவர் ஏன் ஊதாசீனப் படுத்தப்படுகிறார் என்பது மர்மம். அதைத் தெரிந்து கொள்ள என்னவோ தெரியாது எனக்கு ஆர்வம்.
அடுத்த நாளும் "அண்..ணை!" என உரத்துச் சத்தமிட்டு கூப்பிடுகிறார். Acute Diabetic நோயாளியான எனது மனைவிக்கு பணிவிடைக்கு நிறுத்தப்பட்டிருக்கும் நான் அடிக்கடி அவரிடம் ஓடிப் போவது கஸ்டம் தான்!

இருந்தும் போகிறன். "Bed pan தேவைப்படுகிறது" என்கிறார்.

ஒழுங்கு செய்தன். அவர் Chronic Diabetic எழுந்தோ நிமிர்ந்தோ Call Bell யை அமுக்க முடியாதவர். அத்தோடு பாவம் முற்கூட்டியே வலது கால் கழற்றப்பட்டு விட்டது. இப்போது இடது காலிலும் புண். Private attendance ஒருவரை ஏற்பாடு செய்யப்படுகிறது எனச் சொல்லப்பட்டது. ஆனால், செய்யப்பட வில்லை.

இன்று வெள்ளிக்கிழமை மாலை. வெளியாட்கள் இரு பகுதியினருக்கும் வரத்தில்லை. நோயாளியோடு தனிமையிற் கதைக்க நல்ல வாய்ப்பு. மனதை குடைந்த சந்தேகங்களை வெளிப்படுத்துகிறேன். நோயாளி மனந் திறந்து பேசினார். "எனது குடும்பத்தில் நான்தான் தலைமகன். எனது அப்பா எனது இளமைக் காலத்திலேயே காலம் சென்று விட்டார். நான் கெட்ட நண்பர் சகவாசத்திற்கும் மதுவிற்கும் அடிமையானேன் ஒரு நாட்டாண்மை போல செயற்பட்டன். கஷ்டப்பட்டு எம்மை வளர்த்த எனது அன்பு அம்மாவை ஊதாசீனம் செய்தன் குடிவெறியில் சிலவேளைகளில் அம்மா எனவும் பாராது உதைத்து தள்ளியுள்ளேன். எந்தக் கால் பெற்ற அம்மாவை உதைத்ததோ அந்த வலது கால் இன்று எனக்கு கழற்றப்பட்டு விட்டது. சுருக்கமாகச் சொன்னால் வினை விதைத்தவன் நான் வினையையே அறுக்கிறன்.." அவரால் அதற்கு மேல் தொடர்ந்து பேச முடியவில்லை. ஆனால், அவரின் கண்கள் தெளிவாகப் பேசின பொல பொல வென கண்ணீர் வடிந்தோடிய வழியால்!

(செங்கதிர்- வைகாசி 2011)



# அட்டகாசம்



“நடுஜாமம். மயான அமைதி. மணியம் மாஸ்டர் தம்பதி குறட்டை.
‘டே.... ய்....’என்ற இடி முழக்க பேரொலி தம்பதியைத் துடிதுடித்து எழச் செய்தது.
‘சத்தம் போட்டாய் துலைச்சுப் போடுவம்’ மாஸ்டரின் படுக்கை அறைக்குள் உள்ளிட்ட கள்வர் கூட்டத் தலைவன் தடியன் மிரட்டினான்.

‘ஆர்...நீர்...’ - மிகுந்த பீதியோடு மாஸ்டர் கேட்டார்.

‘நாங்க ஆராக இருந்தா என்ன? வீட்டை செக் பண்ண வந்திருக்கிறம்.
இனி வேற கதை கிதை வேணாம்.
நீங்க அமைதியா இருக்க வேணும்! ஏதாவது அசம்பாவிதம் என்டா துலைச்சுப் போடுவம்!’

கள்வர் கூட்டம் மாஸ்டரின் வீடு பூராவும் தட்டிக் கொட்டி சிந்திச் சிதறி தேடியது.
எதுவும் அகப்படாத நிலையில் மீண்டும் மாஸ்டரின் கட்டிலடிக்குத் திரும்பிய கள்வர் தலைவன், ‘டேய்’ நீ வலு கெட்டி. நகை நட்டை காசு கீசை வடிவாக மறைச்சு போட்டாய்.
உள்ளதைச் சொல்லு காசு கீசு நகை நட்டு எங்கே? காட்டாட்டி நடக்கப் போறது வேறை.’

நாங்க வயதான ரீச்சேஸ்.
அப்படி எங்களட்டை பெரிசா ஒண்டும் இல்லை.'


'டே... டேய்! உனக்கு மூண்டு பெடியள்,
மூண்டும் வெளிநாட்டிலை'

அவங்க தொகையாகச் செலவழித்து
கஷ்டப்பட்டு போனவங்கள்'

'திரும்பவும் செக் பண்ணுங்கோடா' கள்வர்
கூட்டத்திற்குக் கட்டளை பிறப்பித்த தடியன்
'ஏதேன் அகப்பட்டுது நீங்க ரண்டு பேரும்
சாம்பல்', எனச் சீறினான்.
வீடு பூராகவும் சல்லடி போட்ட நிலையில்
குசினியுள் பதுக்கி வைத்திருந்த பணம்
பத்தாயிரம் கண்டெடுக்கப்பட்டது.

மாஸ்டரை அணுகிய தடியன் 'நீயடா எங்களை
செம்மையாக ஏமாத்தி போட்டாய்! இந்தச்
சேட்டை இனிமேல் வேணாம் இண்டையைப்
போலை இனி மேலும் வருவம்.
ஏமாத்தினாய் துலைப்பம்' என்ற தடியன்
'கேட்டுதா?' என வினாவியவாறு மாஸ்டரின்
கன்னத்தில் ஓங்கி விட்டான் ஒரு அறை?
மாஸ்டர் 'ஐ...யோ!..' எனக் கதறியவாறு
சுவரோடு மோதி மண்டை உடைந்து ரத்தம்
வழிந்தோடியது.

(ஞாயிறு தினக்குரல் – 24. 03. 2013)



# கட்டுப் பெட்டி



தாயும், அவளது விஞ்ஞான பட்டதாரி மகனும் கருந்தாடலில் ஈடுபட்டனர்.

வாசுகி:
தம்பி, உனக்குப் பொருத்தமான சாதகம் தேடுவது லேசான காரியமல்ல.
களத்திரத்தானத்தில் சூரியனும் செவ்வாயும் பொருத்தமான சாதகம் தேட நான் பட்ட பாடு. அப்பப்பா! போதுமெண்டால் போதும்.
இப்பதான் பொருந்தும் சாதகம் ஒண்டு கிடைச்சிருக்கு அவள் பெடிச்சி வசந்தி வடிவு.
படித்தவள் உனக்கு இந்த மாதம் முடிய நாற்பது தொடங்குது.
நானும் உன்ரை அப்பாவும் இருக்கையிக்கை நீ செய்து போட வேணும்.
நாங்க மனநிம்மதியோட போய்ச் சேருவது உன்னிலை தான் தங்கியிருக்கு.

வசந்தியையும் அவளின்ரை வீட்டையும் ரகசியமாய் பார்த்து வாறதாகச் சொல்லிப் போனாய். அவளைப் பார்க்கக் கூடியதாக இருந்ததா? பிடிச்சதா? வீடு எப்படி?


வாசன்:
'அவளின்ரை வீடு என்ரை அலுவலக நண்பன் சிவநேசனின் வீட்டுக்கு நேர் எதிராக.
போய் ஒரு வித சிரமமும் இல்லாமல் நல்லாப் பார்த்தன். அவையை மட்டிட நல்ல சந்தர்ப்பம்.

வசந்தி வீட்டு வெளிக்கொடியிலே அவை
போட்ட ஈரத் துணிகளிலிருந்து வடிந்த
தண்ணீ இரண்டாம் தட்டாரின் வீட்டு
வெளிக் கொடியிலிருந்த விலையுயர்ந்த
துணிமணிகளை நல்லா நனைத்துப் போட்டுது.
அதுக்கு இரண்டாம் வீட்டார் ஆட்சேபிக்கத்
தாயும் மோளும் சத்தம் போட்டு
நியாயம் பேசுகினம்.
மேலை பார்த்தல்லோ துணியை
காயப் போட வேணும்.
எப்பாட்மெண்டில் இருக்கத் தெரியாவிட்டால்
தனி வீடு எடுத்துக் கொண்டுவேறை
எங்கேயேன் போறது தானே
என விசர்க்கதை பேசுகினம்.


நான் வசந்தியவையைப் பற்றி விசாரித்தன்
அதுகள் காநாடகம். வாயாடிகள் எண்டு
ஆட்கள் சொல்கினம்.

வாசுகி:
தம்பி ஒரு குறையும் இல்லாமல்
ஒருத்தியையும் தேட ஏலா.
எல்லாம் ஒருத்தருக்குச் சரியாக இரா.
ஏதோ ஒரு தியாகம் தான் திருமணம்.

வாசன்:
என்னைப் பொறுத்தவரை சூரியன் செவ்வாய்
பெரிசல்ல சோதிடம் வெறும்
ஐதீகம் தான் அம்மா.
நன்னடத்தை நாகரிகம் இல்லாத இடத்தில்
பெண் எடுப்பது பேராபத்து!"



# அலுப்பு



சொன்னபடி Cultural Officer கனகரத்தினம் சரியாக மாலை ஐந்து மணிக்கு எமது திருமண ஆலோசனையகத்திற்கு வந்து விட்டார். ஆனால், ஆறுமுக வாத்தியார் விண்ணப்பிக்கும் போது விண்ணப்பப் படிவத்தோடு தந்திருக்க வேண்டிய தனது மகள் நந்தினியின் புகைப்படங்களை. “பொருத்தம் பார்த்து சாதகங்கள் பொருந்தியுள்ளன. மாப்பிள்ளை பகுதி படம் பார்க்க இன்று ஐந்து மணிக்கு வருவாங்கள்.” என நான் பலமுறை சொல்லியும் கூட ஐந்தரை மணியளவிற் படங்களை அனுப்பி வைத்தார்.

நந்தினியின் புகைப்படங்களை பார்வையிட்ட மணமகன், கனகரத்தினம் “பிள்ளையைப் பிடித்திருக்குத் தானே,” என நயமாக சொல்லியதற்கு, “யோசித்து சொல்றன்” எனச் சொல்லி விடைபெற்றுப் போனவர் போனது தான். இன்று வரை பேச்சு மூச்சு இல்லை!

இன்றைய தினம் “சாதகம் பார்த்தாச்சு - படம் பார்த்தாச்சு. இனி சீதனத்தைப் பேசலாமா? என நான் கனகரத்தினத்தைக் கேட்ட போது, இந்தப் Proposal எனக்குச் சரிவராது. வேறை ஒன்றை நல்லதாகப் பார்த்துத் தாங்கோ” என்றார்.


எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஆறுமுக வாத்தியார் குடும்பம் ஒரு சோலி இல்லாத குடும்பம் அப்படியிருக்க மறுக்கப்பட்டதன் மர்மத்தை அறிய ஆராய்ந்தேன்.

மறுப்பின் இரகசியம் ஆறுமுக வாத்தியாரின் சுபாவம் என விளங்கிக் கொண்டேன்.

வாத்தியார் எதற்கும் எப்பவும் அலுப்பு கலியாணம் சரிவருமெனத் தெரிந்தும் மகளின் புகைப்படங்களை ஏனோ தானோ வென அங்கம் தெரியும் - அடக்கத்தை வெளிக்காட்டாத Fashion Modeling பாணியில் - மகள் ஆசைக்கு எடுப்பித்த படங்களைப் பார்த்தும் பாராததுமாக அனுப்பி தன் தலையில் தானே மண்ணை அள்ளிக் கொட்டிக் கொண்டார்.

அதே வேளை ஆறுமுக வாத்தியார் தான் படிப்பிக்கும் பாடசாலையில் “அலுப்பு வாத்தியார்” என மாணவர்களால் பட்டம் சூட்டப் பட்டதன் காரணமும் எனக்குத் தெளிவானது.

(செங்கதிர்– வைகாசி 2010)



# இழப்பு



கல்லூரி அதிபர் சாந்தலிங்கத்தை உங்களுக்கு நல்லாத் தெரியும்.

சாந்தலிங்கம் நல்லவர்; வல்லவர்.

ஏனோ தெரியாது நல்லவர்களுக்குத்தான் சோதனை அதிகம். உதாரண குணமும் உதாரண புருஷராகவும் வாழ்ந்த அவரின் அன்பு மனைவி வாசுகி அவருடன் ஐந்தே ஐந்து வருடங்கள் மாத்திரம் வாழ்ந்து நிரந்தரமாக பிரிந்து விட்டார்.

வாசுகியின் பிரிவுக்கு யமனாக வந்தது Blood Cancer. ஆனால் வாசுகி தமது ஒரே ஒரு வாரிசான தவம் (தவமலர்) என்ற மகவை சாந்தலிங்கத்திடம் ஒப்படைத்து நிரந்தர ஓய்வு எடுத்துக் கொண்டு விட்டாள்.

சாந்தலிங்கம் வாசுகியின் நிலையான நினைவோடு வாழ வேண்டி மறுமணத்தை கனவிலும் நினைக்க வில்லை. அதே வேளை தவத்தைக் கண்ணை இமை காப்பது போல காத்து வந்தார்.

தவம் படிப்பில் கெட்டி. அமெரிக்காவிலிருந்த அவளின் மாமி சாந்தினி தமையனை கஷ்டப்பட்டு சமாதானப்படுத்தி தவத்தை


பொறுப்பெடுத்து அமெரிக்காவில் படிக்க வைக்க நடவடிக்கை எடுத்தாள்.

காலம் உருண்டோடியது.

இன்று தவத்திற்கு வயது இருபத்தேழு. பல்கலைக்கழகத்தில் Computer System Engineering கற்றுக் கொண்டிருக்கிறாள். காலாதி காலத்திற்கு மகளுக்குக் காற்கட்டுப் போட்டு வாழ வைக்கும் நல்லெண்ணத்தில் சாந்தலிங்கம் அமெரிக்காவில் வாழும் டாக்டர் எழில் வேந்தனிடம் சம்மதம் கேட்டு அவனை மணமுடிக்கும் படி மின்னஞ்சலிற் தவத்தைக் கேட்டார். பதிலாகக் கிடைத்த மகளின் செய்தி அவரைத் திக்கென்று அடித்து திக்கித் திணற வைத்தது.

மகள் தவத்தின் பதில்:
டடி, நான் எழிலை Marry பண்ண சம்மதம். ஆனால், Fiancee யுடன் கடைசி ஆறு மாதம் நண்பராக இருந்து பாத்துப் பிடித்தால் கட்டுறன்.

**(மல்லிகை – ஆகஸ்ட் 2010)**




70

# பரிமாற்றம்

எங்கள் வீட்டுக்கு வந்து போகும் எங்களுக்கு அறிமுகமான கலியாணத் தரகர் முருகேஸ் இன்றைக்கும் வந்தார்.

பொருந்தக் கூடிய சாதகக் குறிப்பொன்றை தந்தார். நட்சத்திரம் அனுஷம்.
நீசப்பட்ட செவ்வாய் கிரக பாவம்: 70.
மாப்பிள்ளை UK வாசி. தொழில் Electrical Engineer என்றும் தரகர் சொன்னார்.



வழமைக்கு மாறாக தரமான பொருந்தக் கூடிய நல்லதொரு சாதகத்தைத் தந்தது அப்பாவுக்கு அளவுக்கு அதிகமான சந்தோஷம்.
"இஞ்சேரும் தரகர் வந்திருக்கிறார்.
தண்ணீ வெந்நீ குடும் என அப்பா அம்மாவுக்குக் கட்டளை பிறப்பித்தார்.

வெள்ளிக்கிழமை தோறும் பூசை அறையுள் நைவேத்தியம் வைத்து தீபாராதனை செய்து பூசைப் பொருட்களை முழு வீட்டாரும் ஒன்று சேர்ந்து பகிர்ந்து உண்டு மகிழ்தல் எங்கள் வீட்டு வழக்கம். இன்றைய தினம் வெள்ளிக்கிழமை. இன்றைய வெள்ளி விருந்தில் தரகர் முருகேசும் சேர்க்கப்பட்டார். அதற்கு மேலாக அப்பா ஒரு பெரிய பச்சை நோட்டை தரகரின் கையுள் திணித்து "சரி வந்தால் நான் கூடுதலாகவும் தருவன்" எனத் தரகருக்கு வாக்குமளித்தார்.

இன்னொன்றையும் அப்பா சொன்னார்.
“சாதகங்கள் பொருந்தும் அடுத்து வரயிக்கை
பையனின் புகைப்படமொன்றையும்
கையோடை கொண்டு வாரும். நானும் அப்ப
பெடிச்சியின் நல்லொரு படம் தாறன்.

இரண்டு நாள் கழிந்தது.
திங்கட்கிழமை பின்னேரம்.

தரகர் மாப்பிள்ளையின் புகைப்படமொன்றை
கொண்டு வந்து அப்பாவிடம் கொடுத்தார்.


அப்பாவுக்கு எங்கிருந்து எப்படி அவ்வளவு
பெரிய கோபம் வந்ததோ நானறியன்.
“முருகேஸ் என்ன எங்களோடை
சேட்டையா விடுகிறாய்.
என்னை ஆரென்று நினைக்கிறாய்.
ஆற்றை போட்டோ இது.” கோபத்தால்
கத்தினார்.

புகைப்படத்தை நான் எட்டிப் பார்த்தன். அது
வேறு ஆருடையதுமல்ல, என்ரை ஆசை UK
மூத்தண்ணை சம்பந்தமூர்த்தியுடையது.

தரகர் ‘ஐ..யா” எனக் குழைந்தார்.
“இது என்ர மகன்ரை படம் காணும்.
இது எப்படி உம்மட்ட வந்தது.

“ஐ..யா எங்கடை UK தரகர் அனுப்பியது
இது எப்படி அவருக்குக் கிடைத்தது என்பது
எனக்குத் தெரியாது” தரகர் முருகேஸ் முழி
பிதுங்கினார்.

**(செங்கதிர் – ஆவணி 2010)**



# புண்ணியம்



"அண்ணை நான் இப்ப இடம் மாறி வெள்ளவத்தைக்கு வந்திட்டன்." என்னுடைய எழுத்தாள நண்பன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அறியத் தந்தான்.

"ஏன் தம்பி நீ இதுவரை இருந்த இடம் நல்லது தானே? உன்ரை மாமாவோடை தங்குவது உனக்குப் பாதுகாப்பு தானே"
நான் சொன்னேன்.

" அதில பெரிய ஆபத்து இருக்கு அண்ணை! தமிழ் சங்கத்திற்குக் கிட்ட எனக்கு வசதியான அறை கிடைச்சிருக்கு"
"தம்பி, நீ சொல்லுவது எனக்கு விளங்கவில்லை.
அங்கை அப்படி என்ன பிரச்சினை?"
எழுத்தாள நண்பன் சொன்ன விசித்திரமான கதையை வாசகர்களாகிய உங்களுடன் பகிர ஆசைப்படுகிறேன்.

முதலிலை என்ரை நண்பனை பற்றி இன்னும் கொஞ்சம் சொல்ல வேணும். அவன் ஒர் இலக்கிய வெறியன். - தமிழ்பிரியன். அவனது ஓய்வு நேர வேலை தரமான தமிழ் இலக்கிய நூல்களைச் சேகரிப்பது. நான் கடைசியாக அவனிடம் போன போது அவன் சுமார் ஆயிரத்து நூற்றுக்கு மேலாக அருமையான புத்தகங்களை மொரட்டுவ மரவேலைத் தொழிலகத்தில் செய்வித்த அலுமாரியுள் மிக அழகாக அடுக்கி வைத்திருந்தான்.


ஆனால்,
அவனது மாமன் அவனைக் கேட்காமல்
வாசிக்கக் கடனாக கேட்கிற ஆட்களுக்கு
புத்தகங்களைத் தூக்கி குடுத்திடுவார். இதனால்
இதுவரை அவன் ஆசையாக சேர்த்து
வைத்திருந்த ஐம்பதிற்கு மேற்பட்ட
அரும் நூல்களுக்கு மீட்சி இல்லை.

அவன் பிரச்சனைக்கு வழி தெரியாமல்
ஒரு நாள் மாமனிடம் “நான் கஷ்டப்பட்டு
வேண்டி வைக்கும் புத்தகங்களை கண்ட
நிண்டவைக்கு ஏன் குடுக்கிறியள்?” எனக்
கேட்க, அந்தாள் “சும்மா கிடக்கிற புத்தகத்தைப்
படிக்க விரும்புகிறவைக்குக் கைமாறாகக்
குடுக்கிறது என்ன பிழை தம்பி”? குடுத்து
உதவுவது புண்ணியம் தானே! என்றார்.

போன வாரம்
அவன் பெருந் தொகை கொடுத்து - படாத
பாடு பட்டு - இந்தியாவிலிருந்து கஷ்டப்பட்டு
எடுப்பித்த அவனின் கலைக் களஞ்சியத்தை
மனிஷன் ஒராளுக்குக் குடுத்து திருப்பி
புத்தகம் வந்த போது ஒரு பக்கம் முற்றாக
கிழிந்து மூன்று பக்கங்கள் கிறுக்குப் பட்டு -
சில பக்கங்கள் மடிக்கப்பட்டு கண்றாவியாகக்
காணப்பட்டது.

மாமன் செய்வது சேவை என்றா
நினைக்கிறியள்?

அவரின் சரியான சேவை மனப்பான்மையை
இன்னொரு தகவல் மூலம் உங்களுக்குத்
தெரியத் தருகிறேன்.
அவர் லட்சத்திற்கு ஐயாயிரம் நாள் வட்டி
வாங்கும் இழிநிலைச் சீவன்.



# ஈனம்




வயதான விசுவலிங்கம் வாத்தியார் "விசாப் பிள்ளையார்" கோயிலடி பஸ்தரிப்பு நிலையத்திற்கு ஓட்டமும் நடையுமாக போய்ச்சேர்ந்தார்.

அஞ்சல் ஒன்றினை அவசரமாக அவர் யாழ்ப்பாணம் அனுப்ப வேண்டி இருந்தது. அந்நேரம் வெள்ளிக்கிழமை பின்னேரம். அஞ்சலை வேகமாக அனுப்ப அதை விட வேறு வழி அவருக்குத் தெரியவில்லை.

வாத்தியார் யாழ்ப்பாணப் பயணி ஒருவனைச் சந்தித்து தன் அத்தியாவசிய தேவையைத் தெரிவித்தார்.

"அதற்கென்ன ஐயா. கடிதத்தை தாங்கோ அங்கை தான் போறன். உடனே குடுக்கிறன்." என்றான்


கடிதத்தைப் பெற்றுக் கொண்ட பயணி "ஐயா முன்னூறு ரூபாய் தாங்கோ" என்றான். வாத்தியாருக்கு ஐந்தும் கெட்டு அறிவும் கெட்டது."கட்டணமா?" ஆச்சரியமாகக் கேட்டார்.

"சரி, நீங்க வயதானவர். பாவம்! ஐம்பதைக் குறைத்து விடுறன். இருநூற்றைம்பதைத் தாங்கோ."


“காசெண்டால் கடிதத்தைத் தாங்கோ தம்பி!
நான் நாளைக்கு அனுப்புறன்.

“நீங்க ஐயா இந்தக் காலத்திலயும் ஓசிலை
அலுவல் செய்விக்கப் பாக்கிறியள்.”
எனச் சொல்லிய பயணி கடிதத்தைத்
திருப்பிக் கொடுத்தான்.
”உலகம் தெரியாத கிழடு” என்றும் அவன்
முணு முணுத்தது கேட்டது.

**(ஜீவநதி – சித்திரை 2013)**



# நிதானம்



"திருமண சேவை நிறுவனமா?"
தொலைபேசி வழியாக ஒரு குரல் என்னிடம் விசாரிக்கிறது.

"ஓம் அம்மா, என்ன வேணும்?"
"நேற்று பொன்னையா என்ற பெயருடைய வயதான ஒரு தம்பதி வந்தவையா? உஷா என்ற தங்களுடைய மகளுக்கு வரன் பார்க்கும் படி கேட்டவையா?"

"ஓமோம், ஒன்று பொருந்தக் கூடியது கைவசம் இருக்கு அம்மா. அவையை என்னோடை கதைக்கச் சொல்லுங்கோ"

"ஐயா, அந்த உஷா நான்தான் எனக்கு நீங்கள் ஒன்றும் பாக்க வேண்டாம்."

"ஏனம்மா?"

"நானாக ஒன்றை தேடிட்டன்.
இனி File தேவையில்லை.
File லை close பண்ணுங்கோ"

"தந்தவை அல்லோ எனக்குச் சொல்ல வேணும். அப்பா அம்மாவை என்னோடை கதைக்க சொல்லுங்கோ."

"ஐயா, அந்தக் கதை வேண்டாம்.
கலியாணம் எனக்கு.
நானே இனி வேறை வேண்டாம் என்கிரன்.

அந்த இந்த
கதை இல்லாமல் File லை உடனை Close
பண்ணுங்கோ”

“Close பண்ணலாம்! தந்தவை ஒரு வார்த்தை
சொல்ல வேணும்” மீளவும் ஒழுங்குமுறையை
வற்புறுத்துகிறேன்.


“ஐயா Law பேசாதையுங்கோ.
வயதான நீங்கள் இன்னம் கொஞ்ச காலம்
உயிரோடை இருக்க விரும்பினால் உடனே
File லை Close பண்ணுங்கோ”
அல்லாவிட்டால் நடக்கிறது வேறை...”

இந்த உறைப்பான தொலைபேசி
உரையாடலும் மிரட்டலும் நடந்து ஒரு கிழமை
முடிந்து ஒரு நாள் காலை ஒரு பதிவுத் தபால்
எனது முகவரிக்கு வந்தது.

தபால் எனக்குத் திகைப்பை தந்தது.
உஷாவின் திருமணம் பற்றி அவளின் தந்தை
பொன்னையா எழுதியிருந்தார்.


‘திருமண ஆற்றுப்படுத்துனர் ஐயாவுக்கு,
உங்கடை பெறுமதி வாய்ந்த ஆலோசனை
எங்கடை கண்ணை அகலத் திறந்து விட்டது.
நீங்கள் வற்புறுத்திச் சொன்னது போல மகள்
உஷா விரும்பும் பெடியனையே செய்து
வைக்கிறோம். திருமண அழைப்பிதழ்
இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
ஐயா தயவு செய்து கலியாணத்திற்கு வந்து
தம்பதியை ஆசீர்வதிக்க வேணும்.

என்றும் நன்றி மறவாத
பொன்னையா’



74

# சில்லறைத் தனம்



அந்த வழி பஸ் நடத்துனரின் நடத்தை வித்தியாசமானது.

சாக்குப் போக்குச் சொல்லிப் பயணக் கட்டண மீதிப் பணத்தை சுருட்டிக் கட்டுவது அவனது தொழில்.

வயோதிபர் முக்கியமாகப் பெண்கள் நகருக்குப் புதியவர்கள் அரசமொழி ஆட்சி அற்றோர் அவனிடம் படும் பாடு பரிதாபம்.
அன்றைய தினம் பஸ் நடத்துனரிடம் மாட்டுப் பட்டுக் கொண்டோருள் ஒருவர் வாட்டசாட்டமான நடு வயதினன். வழமை போல பிறகு தாறன் என்ற வாய்பாடு சொல்லப்பட்டது இறங்க வேண்டிய இடம் நெருங்கி வர மீதிப் பணத்தைத் தரும்படி பயணி நடத்துனரிடம் கேட்டார்.


“என்னப்பா உன்ரை ஒரு ரூபாவோடை ஓடிப் போயிடுவேனா?” நடத்துனர் சீறிப் பாய்ந்தார்.

நடு வயது நபருக்கு வந்தது கட்டுக்கு அடங்காத சீற்றம்.


“உன்ரை அண்மைக்கால நீண்ட கால தொழிற்சங்கப் போராட்டப் பெறுபேறு ஒரு ரூபா கட்டண உயர்ச்சி தானே. உனக்கு ஒரு ரூபாய் பெறுமதி வாய்ந்ததெண்டா எனக்கு அப்படி இருக்காதா?.....

ஏன் வேறை கதை? மீதிப் பணத்தைத்
தராவிட்டால் நான் கடும் நடவடிக்கை எடுக்க
வேண்டி வரும், தெரிந்துகொள்.
நான் ஒரு சட்டத்தரணி. பயணியின் எரிச்சலும்
எச்சரிக்கையுமான பதிலது.

நிலைமை சாதகமாக இல்லை என்பதை
உணர்ந்த பஸ் நடத்துனர் பஸ் றைவரின்
பக்கத்தில் பதுக்கி வைத்திருந்த முடிச்சை
அவிட்டு கட்டண மீதிப்பணம் கொடுக்காத
பயணிகளுக்குக் கொடுப்பனவை
செலுத்தினான்.



# கொள்ளை



லட்சுமிக்கு உதவியாக இவளோடு இருந்த அவளின் தாய் சிவகாமி சிவபதம் அடைந்து விட்டாள்.

சிவகாமிக்கு ஒரே ஒரு மகன் அவன் பெரும் செலவில் முகவர் ஒருவரின் உதவியுடன் படகில் அவுஸ்ரேலியா போய் பிடிபட்டு கிறிஸ்மஸ் தீவில் வாடுகிறான்.

இதனால் சிவகாமியின் அந்திமச் சடங்கின் முழுப் பொறுப்பும் மருகன்(ஜீவா) ஆனந்தனுக்கு.

ஆனந்தன் எபார்ட்மென்ட் ஒன்றில் இரண்டறை வீட்டில் வாழ்வதால் சடலத்தை அப்புறப் படுத்துவது அவசரமானது. மலற்சாலை (Funeral Parlour) ஒன்றினுக்கு சடலத்தை கொண்டு போவதற்கு முன்பாக மரண சான்றிதழ் பெற்றாக வேண்டுமே. ஆனந்தன் தனது குடும்ப டாக்டருடன் தொடர்பு கொள்ள முயன்றார்.அவரின் துரதிர்ஷ்டம் அவர் அவசர அலுவலாக வெளியூர் போய் விட்டதாகத் தெரிய வந்தது.


முன்பின் தெரியாத அயலிலுள்ள டாக்டர் ஒருவரிடம் ஆனந்தன் தனது தேவையைத் தெரிவித்தார்

டாக்டர் வந்தார்.

வயதானவர் இயற்கை மரணம் என்பதால் சான்றிதழ் வழங்குவதில் டாக்டருக்கு ஒரு வித கஷ்டமும் இருக்கவில்லை.

சான்றிதழை வழங்கிய டாக்டர் தனக்கான கட்டணத்தைக் கேட்டார் “எவ்வளவு தர வேணும் டாக்டா?” ஆனந்தன் வினாவினார்.


கூச்ச நாச்சம் கிஞ்சித்தும் இன்றி டாக்டர் சொன்ன அறவீடு பத்தாயிரம்!



# எமது வெளியீடுகள்

| ஆண்டு | ஆசிரியர் | ஆக்கம் |
| --- | --- | --- |
| 1974 | தொகுப்பு | "சமயங்களிற் திருக்குறட் கருத்துக்கள்" |
| 1976 | வேல் அமுதன் | "அறுவடை" - நாடகம் |
| 1977 | வேல் அமுதன் | "வைகறை" - சிறுகதைத் தொகுப்பு |
| 1978 | வேல் அமுதன் | "மாரீசம்" - சிறுகதைத் தொகுப்பு (சாகித்திய தேசிய விருது பெற்றது) |
| 1980 | வேல் அமுதன் | "வாழும் வழி" - நாடகத் தொகுப்பு |
| | கலாநிதி நா. சுப்பிரமணியம் | "அமுதனின் ஆக்கங்கள்" - ஒரு கண்ணோட்டம் |
| | மதி அமுதன் | "மாணவர் விஞ்ஞானம்" |
| 1988 | கலாநிதி நாகலிங்கம் சண்முகலிங்கன் | "தனி மனித நிறுவனம்" |
| 1990 | கலாநிதி இ. பாலசுந்தரம் | "ஈழத்தில் ஒப்பனைக் கலை" |
| 2002 | வேல் அமுதன் | "ஓர்மம்" - சிறுகதைத் தொகுப்பு |
| 2007 | வேல் அமுதன் | "திருமண ஆற்றுப்படுத்துநர் அனுபவங்கள்" |
| 2008 | மதினி உதயகுமார் | "பரதநாட்டியம் வினாவிடைத் தொகுப்பு" |
| 2013 | வேல் அமுதன் | "கிழிசல்" - குறுங்கதைத் தொகுப்பு |

## இது கிழிசல்.....



சின்னமாய் வண்ணமாய்
சிலிர்த்து எழும் செய்திகள்
அடிமனத்தின் ஆழத்தில்
அமிழ்ந்திருக்கும் அழுக்குகளை
வெளிக்கொணரும் வெளிச்சங்கள்
புரையோடிப் போயிருக்கும்
புண்களது நமைச்சல்கள்
காலத்தை மணிக்கட்டில்
கட்டிவைத்த மனிதத்தின்
நேரத்தைக் கணக்கிட்டு
நிலைக்கும் குறுமணிகள்
எழுபத்து ஐந்து
இதனுள் அடங்கும் - வேல்
அமுதரும் அகவையும்
அதனுள் அடக்கம் - இவை
வெளிப்படுத்தும் சிறுதுளிகள்
வெள்ளமாய் மெலெழும்பும்
எஸ். பொ. வும் 'காசி' யும்
ஏர் எடுத்த சூடுகளம் - இதில்
வேல் அமுதன் வேளாண்மை
விளைச்சல் பெருக்குமினி!

- புனிதன்

வேல் அமுதன்

9789555011914

DESIGNED & PRINTED BY UNIE ARTS (PRIVATE) LTD., COLOMBO 13. SRI LANKA. +94 11 2330195